Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
டிச.26, 2013 - ஜன. 01, 2014

முரசு வாசகர்களுக்கு




வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1046



## விட்டுக்கொடுப்புக்கு

# விலை அதிகம்



## தேவயானி விவகாரத்தில்

# அமெரிக்கா- இந்தியா இராஜதந்திர மோதல்!

## மலையகத்தின் தேவையில் கிராம சேவகரின் அவசியம்!

## கண்டிக்கப்பட வேண்டிய



## அடாவடிகள்...

# கோயில்களில் கொடிமரம் ஏன்?

கோயில்களுக்கு அழகுதருவது கொடிமரமாகும். பக்தர்களை காக்கவும், இறைசக்தியை அதிகரிக்கவும், தீயசக்திகளை விரட்டவும் கோயிலில் கொடிமரம் நடப்படுகிறது. இதில் சூட்சும இரகசியம் என்னவென்றால் கொடிமரம் அடியில் சதுரமாக இருக்கும். இது இறைவனின் படைக்கும் கடவுள் பிரம்மனை குறிக்கிறது.

அதன் மேல்பாகம் கோணவடிவில் இருக்கும், இது காக்கும் கடவுள் மகாவிஷ்ணுவை குறிக்கிறது. அதன் மேல் பாகம் உருண்டு நீளமாக இருக்கும்,அகம்பாவத்தை அழிக்கும் உருத்திரனை(சிவன்) குறிக்கிறது.

அதாவது கோயிலில் நமக்கு முதலில் காட்சியளிக்கும் கொடிமரம் மும்மூர்த்திகளின் முத்தொழிலை நமக்கு உணர்த்துகிறது. கோயிலில் நடக்கும் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கிறது.

இதன் தத்துவம் என்னவென்றால் நாம் பூமியில் பிறந்து(படைத்தல்), நல்ல நிலையில் வாழ்ந்தாலும் (காத்தல்), கடைசியில் சிவனின் காலடியில் சரணடைகிறோம் (அழித்தல்) என்பதை உணர்த்துவதாகும்.

## ஆன்மீகம்

# உதயத்தையே எதிர்நோக்கி இருக்கிறது

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" (லூக்கா 2:14) என்று கடவுளைப் புகழ்ந்துபாடும் விண்ணகத் தூதர் பேரணியுடன் நாமும் சேர்ந்து பாடுவதும் செயற்படுவதும்தான் உண்மையான கிறிஸ்துமஸ் ஆகும்.

இறைமகனே நமக்காகக் கடவுள் என்ற உயர்நிலையிலிருந்து இறங்கி வந்து, தம்மையே நமக்குக் கொடையாக வழங்கியதன் நினைவாக நாம் கொண்டாடும் விழா. நமக்கு இது உண்மையான மாபெரும் கொடை. சுயநலமில்லாத அன்பு, கைமாறு கருதாத உழைப்பு, எதிர்பார்ப்பு இல்லாத தியாகம் இவை பிறந்துவிட்டால் அதுவே இயேசுவின் பிறப்பு. அன்பும் நட்பும் எங்கே இருக்கின்றதோ அங்கே இறைவன் பிறக்கின்றார். கடவுள் என்றால் கடந்து நிற்பவர் மட்டும் அல்ல, கலந்து இருப்பவரும் ஆவார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். வாக்கு மனிதரானார், நம்மிடையே குடிகொண்டார். இதுவே இயேசு பிறப்பின் தத்துவம்.

கடவுள் எப்போதெல்லாம் நம்மில் கலந்து நம்மோடு வாழ்கின்றாரோ அப்போதெல்லாம் நமக்கு மகிழ்ச்சியான வாழ்வு பிறக்கின்றது. நம்மிடையே வல்லமையுள்ள இறைவன் பிறந்திருக்கின்றார். நம்மைத் தூயவராக்கி, நம்மை நற்செயலில் ஆர்வமுள்ள ஓரினமாக்கி, நம்மை அவருக்குச் சொந்தமாக்கிக் கொள்வார். நமது இறைவன் கருணையே உருவானவர். மனித வாழ்வு மேன்மை அடைவதற்காக, உலகம் சிறப்படைவதற்காக, மனிதன்

இன்னொரு மனிதனை அன்பு செய்வதற்காக எல்லாம்வல்ல இறைவன் மண்ணில் பிறந்தார். நாமும் புது மனிதனாய் பிறப்பெடுப்போம்.

# நாவைப் பேணுவோம்

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும் எம்மோடு இணைந்திருப்பவர்கள் எமது குடும்பத்தினர்கள். இவர்கள் எம்மை நல்லவர், பண்பாளர் என்று கூறிவிட்டால் வேறு எவரும் எமது சிறந்த குணத்திற்குச் சான்று தரத் தேவையில்லை. நிச்சயமாக நாம் நல்லவர்தான்.

மனிதப் பண்புகள் பணிவானவை. ஆனால் அலங்காரம், பெருமை என்பனவெல்லாம் ஒரு மனிதனை இவ்வுலகில் போலியாக உயர்த்திக் காட்டக் கூடியவை. எனவே போலியான காரணிகளை வைத்து மண்ணுலகில் மனிதன் வாழ விரும்பினால் அல்லாஹ்அவனை தாழ்த்திவிடுவான்.

பணிவுள்ள பண்புகளால் ஒரு மனிதன் தன்னை அலங்கரித்துக் கொண்டால் அவ் மனிதனை அல்லாஹ் உயர்த்தி விடுவான். இது அல்லாஹ் அவன் சிருஷ்டியான மனிதனோடு வைத்திருக்கும் உறவின் யதார்த்தம்.

ஒரு மனிதன் தனது பேச்சில், நடத்தையில், உறவுகளில், பராமரிப்பில், கொடுக்கல், வாங்கல்களில் இப்படி எல்லா விவகாரங்களிலும் மனிதன் பண்பான முறையில் நடந்து கொண்டால் அவனது ஒவ்வொரு செயலும், சொல்லும் அவனுடைய வாழ்க்கைக்கு கனதியான மதிப்பையும், அந்தஸ்தையும், அது பெற்றுக்கொடுக்கும். இதற்கு காரணமாக அமைவது நாவு. எனவே நாவைப் பேணுவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி 1043



### நீரே என் ரட்சகன்

பாராட்டுக்குரியது

பார் காக்க வந்த எங்கள்
பரம பிதாவின் பிரதிநிதியே
புவியோர்கள் புண்ணியம் தேட
நீர் ஜெபிக்கும் மந்திரத்தால்
கட்டுண்டேன் பாலகன் நான்
பரமபிதாவைப் பாரினில் நான்
பார்த்ததில்லை
பரமனிடம் அருள் வேண்டி
என்னை நீரே அணைத்துக்
கொள்ளும் இப்பாலகனை!

பீ.எஸ்.ஏ.தாஹிர், காத்தான்குடி - 03

### பாதுகாப்பு கோரிக்கை!

பாப்பாண்டவரின் போதனையில்
பாசப் போஷனம் உண்ணும்
பெரும் சனத்திரளில்
பத்திமை வந்ததோ
பையனுக்கு மட்டும்?
இல்லை... இல்லை!!
கடவுளின்
காப்புறுதி இவரிடம்
இருக்கும் என்று சிறுவர்
துஷ்பிரயோகம்
சீறிப்பாயும் காலம் என்பதால்
பாதுகாப்பு கோருகிறான்
பாப்பாண்டவரிடம்!

ஏ.பாரிஸ், மிகிந்தலை.

# கவிதைப் போட்டி இல 1046



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08. 01. 2014

கவிதைப் போட்டி இல. 1046
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### குழந்தையும் தெய்வமும்

"குழந்தையும் தெய்வமும்
குணத்தால் ஒன்று" என்ற
கொள்கைப் பிரகடனம் புனித
வத்திக்கான் அரண்மனையில்
அரங்கேற்றப்படுகிறதோ?

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது.

### மனிதம் உயிர்க்கட்டும்

மரித்துப்போன
மன - கல்லறைகளுக்கு
தூபம் இடாதே.
உயிர்க்கும் கரு இருக்கும்
கருவறையை
தூய்மைப்படுத்து
வருங்காலமாவது
மனிதத்துடன்
உயிர்க்கட்டும்.

மானியூர் C.சுஜீவன் (கவின்)

### ஆண்டவன் கட்டளை

"குழந்தைகளை என்னிடம்
வரவிடுங்கள்" என்றார் யேசு
அதுதான் குழந்தையைத்
தன்னருகே வரவிட்டு
பெரியவர்களையெல்லாம்
நிறுத்திவிட்டார் தூரத்தில்.

அ.சந்திரபோஸ், கண்டி.



### நற்கிரிகை

பிரார்த்தனையின் பிரதிபலிப்பு
பிஞ்சுக் குழந்தையையும்
ஈர்த்து இணைத்திருக்கிறது
தூய பிரார்த்தனைகள்
தூண்டும் நற்கிரிகை.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### பாப்பரசர்!

முன்னால்
இருப்பவர்களுக்கு
இறையவனின்
முறையீட்டைக்
கூறிவிட்டுப் பின்னால்
தன்னைப் பற்றியிருக்கும்
பையனின்
குறைபாட்டையுங்
கேட்பார்...
ஏன் தெரியுமா?
இவரந்த மேய்ப்பரின்
ஏழ்மையுங் கொண்ட - ஒரு
பாப்பரசர்.

பாண்டியூர்-பொன். நவநீதன்.

# உங்கள் பக்கம்

## வர்த்தக சங்கம் தேவை

யுத்தம் முடிவடைந்து சுமூக சூழ்நிலை ஏற்பட்டபின்பு திருமுறுகண்டி பிரதேச வர்த்தக நிலையங்களுக்கு வர்த்தக சங்கம் ஒன்று இல்லாமை பெரும் குறையாக இருப்பதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடபகுதியின் மிக முக்கியமான நகரமாகக் கருதப்படும் இடம்தன் திருமுறிகண்டி. இந்நகரத்தில் பிரசித்தமான ஓர் ஆலயமும் அதைச்சூழ பல வர்த்தக நிலையங்களுக்கு ஓர் சங்கம் இதுவரை சரியான நிலையில் இல்லாமல் இருப்பதால் வர்த்தகர்கள் பெரும் இன்னல்களையே சந்தித்திருக்கிறார்கள்.

வர்த்தக சங்கம் ஒன்று இல்லாமையால் வர்த்தகர்களுக்கிடையே ஒரு சுமூகமான சூழலையைப் பேணவும், குறை, நிறைகளைப் பேசவும் ஒரு களம் இல்லை.

ஆகவே இனியாவது முறிகண்டி வர்த்தகர்களுக்கான ஓர் சங்கத்தினை அமைத்து அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்த வர்த்தகர்களுக்கான சமநிலையைப் பேணவும், சூழலை சுகாதாரமாகவும் வியாபாரம் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லவும் எமக்கு ஓர் பலமான வர்த்தக சங்கத்தை அமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

வர்த்தகர், திருமுறிகண்டி.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள் உட்பட சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல் (Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com





## வாசகர் சாலை

### வாழ்த்துக்கள்

வியாழன்தோறும் தினமுரசை படிப்பதற்கு தவறுவதேயில்லை. முரசின் அனைத்துப் பக்கங்களும் சூப்பரோ சூப்பர். பாப்பா முரசு பக்கம் அருமையிலும் அருமை. அந்தத் தகவல்கள் மாணவர்களாகிய எமக்கு பயன்பெறக்கூடியதாக இருக்கின்றது. 24ஆம் பக்கத் தகவல்களும் அருமை. தினமுரசு மேலும் பல தகவல்களைத் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.கவின், வவுனியா.

### ஏன் நிறுத்தியது முரசு?

முரசின் பல்சுவை அம்சங்களைப் படிப்பதில் மகிழ்ச்சிதான். நீண்ட நாட்களுக்குப் பிறகு முரசை வாழ்த்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. 'க்ரைம்' பகுதியை ஆரம்பித்து, அதை ஏன் நிறுத்திவிட்டது முரசு. அப்பகுதியை நிறுத்தியது கவலைக்குரியது.

லேடிஸ் ஸ்பெஷல், விளையாட்டுச் செய்திகள், வேணு கிருஷ்ணாவின் அரசியல் பக்கம், 24 ஆம் பக்கத் தகவல்கள், சிந்தியா பதில்கள், தேன் கிண்ணம் என்பவை அருமையாக இருக்கிறது. முரசு இன்னும் பல வளர்ச்சிகளைக் காண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

த.சாரங்கன், காலி.

### பிரார்த்திப்போம்

மக்கள் மனதில் நிலையாய் நிலைத்திருக்கும் முரசு என் மனதையும் கொள்ளை கொண்டுள்ளது.

அண்மையில் மறைந்த தென்னாபிரிக்காவின் மாமனிதர் நெல்சன் மண்டேலாவின் கட்டுரைகளை இருவாரங்களாக, விரிவாக வெளியிட்டிருந்தாய். படிக்கும்போது இவரைப்போல் ஒருவர் எம் நாட்டிலும் இல்லையே என்று மனம் கவலைகொள்கிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போம்.

ஆர்.கவிர்மன், தெல்லிப்பளை.


### பேரவா!

அண்மைக் காலமாக தினமுரசில் பல மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பல்விதமான கட்டுரைகள் இடம்பெறுகின்றன. மகிழ்ச்சியாகவும் உள்ளது. சென்ற வாரம் 'குறிஞ்சி முரசில்' வெளி யான மலையகத்தில் இருந்துவரும் கருத்தடை முறைமை நீக்கப்பட வேண்டும் எனும் கட்டுரை உரிய அதிகாரிகளைச் சேரவேண்டும் என்பதே எனது பேரவா. மலையகத்தில் பெண்களாகிய எமக்கு நிகழும் அடக்குமுறைகளுக்கு ஒரு சவாலான கட்டுரையாக உள்ளது.

திருமதி எம். கலா, ஹட்டன்.

## ஏற்றுக் கொண்ட பொறுப்பை

# நிறைவேற்றாவிட்டால் உலகம் நம்மைப் பழிக்கும்



**உள்ளூராட்சி மன்றங்களின் இன்றைய நிலை மனநிறைவு தருவதாக அமையவில்லை. முதன்முதலாக தொடங்கப்பட்ட வடமாகாண சபை என்பதால் பல பூர்வங்க விடயங்களில் என் கவனம் உள்நுழைந்திருந்தமையால் உள்ளூராட்சி மன்றங்கள்மீது செலுத்தமுடியவில்லை. உள்ளூராட்சி உறுப்பினர்களின் சுயநலம் கட்டுக்கடங்காமல் செல்வதை நான் அவதானித்துள்ளேன். ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றாவிட்டால் உலகம் நம்மைப் பழிக்கும் என்று முதல்வர் விக்னேஸ்வரன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.**

கூட்டமைப்பினுள் அதிகாரவெறி சாதியப் பாகுபாடுகள் சுயநலச் சிந்தனைகள் என்பவை அண்மைக் காலமாக துரிதகதியில் வளர்ந்து வருவதன் வெளிப்பாடாகவே கூட்டமைப்பின் ஆட்சியின்கீழுள்ள உள்ளூராட்சி சபைகள் தோல்வி யடைந்து வருவதாக புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர். இந்நிலையியே முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது மன வேதனையை மேற்கண்டவாறு வெளிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே வடக்கில் வல் வெட்டித்துறை நகர சபை உட்பட மூன்று உள்ளூராட்சி சபைகளில் கூட்டமைப்பின் வரவு செலவுத் திட்டம் தோல்வி யடைந்துள்ள நிலையில் கிழக்கிலும் காரைதீவுப் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளதுடன் நாவிதன்வெளி, வெருகல் மற்றும் ஆலையடி வேம்பு ஆகிய பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டமும் தோல்வியடையும் நிலையிலேயே இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபரீதத்தை உணர்ந்து கொண்டுள்ள கூட்டமைப்புத் தலைமை கட்சி உறுப்பினர்களிடையே ஒற்றுமையினை ஏற்படுத்தும் பொருட்டு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றன. அந்த வகையில் கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதேச சபை உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களை ஆசுவாசப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்ற போதிலும் அந்த முயற்சி போதிய வெற்றி அளிக்கவில்லை என்றே உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச சபைகளின் நிலைமை இவ்வறிக்கையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் செயற்பாடுகளிலும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதிர்ச்சி அடைந்துள்ளதாக கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சபை உறுப்பினர்கள் குறித்த மாகாண சபையின் செயற்பாடு தொடர்பிலும் அதனை செயற்திறன் மிக்கதாக முன்னகர்த்திச் செல்வதிலும் அக்கறை காட்டுவதைவிடுத்து சொந்த நலன்களை முன் நிறுத்திச் செயற்படுவதிலேயே குறியாய் இருப்பதாக முதலமைச்சர் கருதுவதாகவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சொந்த முயற்சியில் திருமலை மக்கள்!




திருகோணமலை - கோமரங்கடவெல பிரதேசத்தில் உள்ள கல்யாணபுர விவசாயிகள் ஒன்றிணைந்து பன்குளம் ஆற்றின் ஊடாக கடல் பகுதிக்கு செல்லும் நீரை குளத்துக்கு திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

திருகோணமலை - ஹொரவ்பொத்தான பிரதான வீதியில் உள்ள பன்குளம் ஆற்றுப் பகுதியால் செல்லும் நீர் குச்சவெளி கடலுக்கு செல்வதாகவும் தங்களுக்கு விவசாயங்களை மேற்கொள்ள குளத்தில் தண்ணீர் இல்லாமையினால் விவசாயிகள் ஒன்றிணைந்து இப்பணிகளை செய்துவருவதாகவும் தொடர்ச்சியாக பதினொரு நாட்களாக இப் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிராமமக்கள் இந்த ஆற்றை மறிப்பதற்கு ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பைகளை வழங்கி உள்ளதாகவும் இவ்வருடம் மழை பெய்யாத காரணத்தினால் இக்குளத்துக்கு தண்ணீர் வரவில்லை எனவும் எமது தொழிலாக மேற்கொள்ளும் விவசாயத்தை தொடர்ச்சியாக செய்ய இந்த அணைக்கட்டு போடப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் இவ் அணைக்கட்டினை கொங்கிரீட் இட்டு சரிசெய்து தரவேண்டும் எனவும் விவசாய மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## வெற்றி பெற்றது செயற்கை இதயம்



உலகின் முதல் செயற்கை இதய மாற்று அறுவைச்சிகிச்சையை பிரான்ஸ் மருத்துவர்கள் வெற்றிகரமாக செய்துள்ளனர். பிரான்ஸை சேர்ந்த 75 வயது முதியவருக்கு 5 ஆண்டுகள் இயங்கக்கூடிய செயற்கை இதயம் பொருத்தப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த உயிரி மருந்தியல் நிறுவனமான கார்மட் இந்த செயற்கை இதயத்தை வடிவமைத்துள்ளது. இந்த இதயம் லித்தியம்-அயன் பேட்டரிமூலம் இயங்கக்கூடியது. பேட்டரியை உடலின் வெளிப்பகுதியில் அணிந்து கொள்ளவேண்டும்.

உயிரி பொருள்களுடன் மாட்டின் திசுக்களும் கொண்டு செயற்கை இதயம் உருவாக்கப்பட்டுள்ளதால், இதனை உடல் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. பிளாஸ்டிக் போன்ற செயற்கை இழைகள் பயன்படுத்தப்படாமல் மாட்டின் திசுக்கள் பயன்படுத்தப்பட்டதால், ரத்தம் உறைந்து கட்டியாவதும் தடுக்கப்படுகிறது.

இதற்குமுன் உருவாக்கப்பட்ட செயற்கை இதயங்கள் தற்காலிகப் பயன்பாட்டுக்கு மட்டுமே ஏற்றவை. கார்மட் நிறுவனம் வடிவமைத்துள்ள செயற்கை இதயம் 5 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்கும்.

ஆரோக்கியமான மனிதனின் இதயத்தின் எடை 250 முதல் 350 கிராம் வரை இருக்கும். செயற்கை இதயம் அதைவிட மூன்று மடங்கு அதிகமாக அதே சமயம் ஒரு கிலோவுக்கு கொஞ்சம் குறைவான எடையுடன் இருக்கும் இந்த செயற்கை இதயம் அறுவைச் சிகிச்சைக்குப் பின் மிக நல்ல முறையில் செயற்படுகிறது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாணவியை அறைந்த அதிபர் கைது

எட்டு வயது பாடசாலை மாணவியொருவரின் காது பாதிக்கும் வகையில் கன்னத்தில் அறைந்த சம்பவம் தொடர்பாக உடதலவின்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்தே குறித்த அதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த அதிபர் உடதலவின்ன பிரதேசத்தில் நடத்துகின்ற மேலதிக வகுப்பிலேயே குறித்த மாணவிமீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இந்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட மாணவி தற்போது வத்துகாமம் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை உடதலவின்ன பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இந்தியர்?



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாபி ஜிண்டால் அமெரிக்காவின் 2016 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடும் என அமெரிக்காவின் மிக முக்கிய செனட்டர்களில் ஒருவரான குடியரசுக் கட்சியின் டாவிட் விட்டர் எதிர்வு கூறியுள்ளார்.

ஜிண்டால் போட்டியிடக் கூடும். ஏனெனில் அவர் கவனித் தக்கத்தக்க ஒரு போட்டியாளர். அவருடைய தலைமைத்துவத்தை நான் மதிக்கிறேன். அவருடைய அரசியல் மதிப்பிற்கும் நான் மரியாதை கொடுக்கிறேன். ஆனால் என்னால் இதற்கு தனிப்பட்ட முறையில் என்ன செய்யமுடியும், அல்லது அவருக்கு எவ்வகையில் உதவமுடியும் என நான் இன்னமும் சிந்திக்கவில்லை. 2016 தேர்தல் குறித்து இவ்வேளை ஒவ்வொருவரும் கவனம் செலுத்துவது இயல்பானதுதான் என டாவிட் விட்டர் தெரிவித்துள்ளார். தற்சமயம் அமெரிக்காவின் லூயிசி யானா மாநில ஆளுநராக இரண்டாவது தடவையாக பதவிவகித்துவரும் ஜிண்டாலின் பதவிக்காலம் 2015 இல் முடிவடைகிறது. அவர் மூன்றாவது தடவையாக இப் பதவிக்கு போட்டியிட முடியாது.

ஏற்கனவே அமெரிக்க காங்கிரஸ் சார்பில் அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், அதிபர் பதவிக்கு போட்டியிடக்கூடும் என எதிர்வுகூறல்கள் அதிகரித்துள்ளன. பாபி ஜிண்டாலின் பெற்றோரான அமர் மற்றும் ராஜ்ஜிண்டால், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் இருந்து அமெரிக்காவிற்கு குடி பெயர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏ.கே.47 தந்தை காலமானார்

ஏ.கே.47 ரக துப்பாக்கியை வடிவமைத்த மிகைல் கலஷ்னிகோவ்(94) மரணமடைந்தார். கடந்த சில நாள்களுக்கு முன்பு உடல் நலக் குறைவு காரணமாக ரஷ்யாவின் உட்முர்ஷியா குடியரசுத் தலைநகர் இஷ்விஷ்க்கில் உள்ள மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்துவந்தனர்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக உட்முர்ஷியா குடியரசின் செய்தித் தொடர்பாளர் விக்டர் சல்கோவ் தெரிவித்தார். கலஷ்னிகோவுக்கு முன்னாள் சோவியத் யூனியன் சார்பில் இருமுறை சோஷலிஸ தொழிலாளர்களின் தோழன் என்ற விருது வழங்கப்பட்டது. ஏ.கே.47 என்பதன் விரிவாக்கம் அவ்தோமத் கலஷ்னிகோவா 47 என்பதாகும். 1947ஆம் ஆண்டில் இது கண்டுபிடிக்கப்பட்டதால் இதற்கு 47 என்று பெயரிடப்பட்டது.

இரண்டாம் உலகப்போரின்போது இந்த துப்பாக்கி ரஷ்யப்படையினருக்கு பெரும் முன்னேற்றத்தைக் கொடுத்தது. பின்னர் இது உலகெங்கும் பிரபலமாகிவிட்டது.

வாரமலர்
**தினமுரசு**

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## பேசாதபோது பிதற்றல்; பேச அழைத்தால் பதுங்கல்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதங்களை முடித்துவைத்து உரையாற்றும்போது தனது உரையில் கூட்டமைப்பினருக்கும் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுத்தார்.

ஜனாதிபதியின் அழைப்புக்கு முன்னதாக வட மாகாண ஆளுநர் வட மாகாண முதலமைச்சருக்கு பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுத்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்குகொள்ளவேண்டுமாக இருந்தால் முதலில் அரசுடன் தனிப்பட்ட பேச்சுக்களை நடத்தி சில விடயங்கள் தொடர்பில் இணக்கம் காணவேண்டும் எனக் கூறிவந்தனர். கூட்டமைப்பின் அந்த நிலைப்பாடு குறித்து அரசு பதிலெதையும் உத்தியோகபூர்வமாக கூறவில்லை.

அரசுடன் பேசுவதைவிடவும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பேசுவதே பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவும் என்பதே அரசின் நிலைப்பாடு என்பதை அரசு கூறிவந்துள்ளது.

இந்த முட்டுக்கட்டையை அகற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக ஜனாதி-பதியின் அழைப்பை கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

அதைவிடுத்து ஜனாதிபதி அழைத்திருப்பதை எச்சரிக்கையோடு பரிசீலிக்க வேண்டும் என்று மாவையும், நம்பிக்கையோடு பேச்சுக்களில் பங்குகொள்ள முடியாது என்று செல்வமும். நல்லிணக்கத்தையும், உறுதிப்பாட்டையும் காட்டினாலே பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள முடியும் என்று சம்மந்தனும், ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்துக்கு முன்னர் ஜனாதிபதி சர்வதேசத்துக்கு காட்ட நினைக்கும் நாடகம் என்று சுமந்திரனும், சர்வதேச அழுத்தங்களைச் சமாளிக்கவே கூட்டமைப்பை ஜனாதிபதி அழைக்கின்றார் என்று சுரேசுமாக பலரும் பலதையும் கூறத் தொடங்கியிருக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் வட மாகாண சபையில் ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் அதிகார இழுபறி தொடர்கின்றது என்றும் ஆளுநர் அநாவசிய தலையீடுகளை செய்கின்றார் என்றும் முதலமைச்சரும் கூட்டமைப்பினரும் கிடைத்த மேடைகளிலெல்லாம் குற்றம் கூறிக்கொண்டிருந்தார்கள்.

பொறுமையை இழந்த ஆளுநர் முதலமைச்சருக்கு கடிதம் எழுதினார். வட மாகாணத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பது தொடர்பாகவும், பிணக்குகளை தீர்த்துக்கொள்வது தொடர்பாகவும் பேசுவதற்கு நேரம் ஒதுக்குமாறு பகிரங்கமாகவே கேட்டிருந்தார்.

ஆளுநர் அவ்வாறு கூறியதிலிருந்து கூட்டமைப்பு மௌனமாக இருக்கின்றது. முதலமைச்சரும் முன்னரைப்போல் புலம்புவதை கொஞ்சம் குறைத்துக் கொண்டார். ஆளுநரின் அழைப்புக்கும் இன்னும் உத்தியோகபூர்வமான பதிலை வழங்கவில்லை.

பேச்சுக்கு அழைப்புவிடுப்பதற்கு அரசுக்கு வேறு நோக்கங்கள் இருக்கலாம் அதையும் மறுப்பதற்கு இல்லை. இருந்தாலும் கூட்டமைப்பினரும், வட மாகாண முதலமைச்சரும் தமது பிரச்சினைகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பேச்சுக்களை நடத்தலாமே. ஏன் பதுங்க வேண்டும். பின்னடிக்கவேண்டும்.

அந்த அரசியல் சாணக்கிய தந்திரோபாயத்தை குறைந்தபட்சம் தமிழ் மக்களிடமாவது கூட்டமைப் பனரும், முதலமைச்சரும் தெளிவுபடுத்துவார்களா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# விட்டுக்கொடுப்புக்கு விலை அதிகம்



**பல ஆயிரம் பேரின் உயிர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு இனத்தின் இருப்பும், அடையாளங்களும் அழிக்கப் பட்டுள்ளது. பிரச்சினைக்கான அடிப்படையை இனம்காணாமல் அதை திருத்தாமல், அதன் பாதிப்புகளுக்கு கௌரவமான பரிகாரம் காணாமல் அதை அப்படியே மூடிமறைக்க முயற்சிக்கப் படுகின்றது. இந்த நிலையில் விட்டுக் கொடுப்பை எந்த நம்பிக்கையில் இருந்து ஆரம்பிப்பது என்பது பொதுவான கேள்வி.**

**அரசியலில்** சுத்தமான மனிதர்களை தொலைத்து விடுகின்றோம். ஒரு வெற்றியில் எவரும் திருப்திகொள்வதேயில்லை. இன்னொரு வெற்றிக்காக எதைச் செய்யவும், எதை இழக்கவும் தயாராகிவிடுவதுதான் இன்றைய அரசியலில் நிரந்தர இருப்புக்கான மூலோபாயமாகி இருக்கின்றது.

பொது நோக்கத்திற்காக நேரத்தை செலவுசெய்ய எவரும் தயாராக இல்லை. தனது இருப்பு, நிரந்தர ஆதிக்கம், முடியுமான சுயஇலாபத்துக்காக வலைந்துபோகவுமான பக்குவத்தை தானாகவே பெற்றுக்கொள்ளும்போது அவர்கள் முழு அரசியல் வாதியாகி விடுகின்றார்கள்.

அரசியலில் இருக்கின்றவர்கள் அதிகாரச்சுகத்தை பாது காக்கவும், தனது குடும்ப சுகத்துக்காகவும் எத்தகைய சமரசங்களுக்கும் தம்மைத் தயார் செய்துகொள்வார்கள்.

நமது அரசியல் பிரதிநிதிகளின் இத்தகைய பெருமை, பெருமிதங்களை பேசுவதில் நமக்கு எந்தப் பயனுமில்லை.

இலங்கையின் சமகால அரசியல் சூழலில் விட்டுக் கொடுப்பது பற்றி "பலரும் பேசுகின்றார்கள். சிங்கள அரசு தமிழ் மக்களுக்காக கொஞ்சம் விட்டுக்கொடுத்து நடக்கலாமே" என்று சிலர் கூறுகின்றனர். அரசு எதை விட்டுக் கொடுக்கவேண்டுமென்று கூறுகின்றார்கள் என்பதையும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

தமிழ் மக்கள் மூன்று தசாப்தத்துக்கு மேலாக எவ்வித முன்னேற்றங்களையும் அனுபவிக்காமல் அழிவுகளையும், பாதுகாப்பற்ற வாழ்வையும் அனுபவித்து வந்தவர்கள் இப்போது சட்டங்களுக்கு அமைவாக எல்லாமும் நடப்பதைவிடவும் சட்டத்தை மீறியும் தமிழ் மக்களுக்கு பல சலுகைகளை அரசு வழங்க வேண்டும்.

மாகாண சபையைக்கூட அதன் சட்டவரம்புக்குள் மட்டும் செயற்படுத்தாமல் முதலமைச்சர் நினைக்கின்றபடியும், மாகாண அமைச்சர்கள் நினைக்கின்றபடியும், முடிந்தால் சம்மந்தன், சுமந்திரன், சுரேஷ், மாவை, சிறிதரன், சரவணபவான் போன்றவர்கள் நினைக்கின்றபடியும் செயற்படுவதற்கு அரசாங்கம் விட்டுக்கொடுக்கக் கூடாதா?

ஆளுநரை மாற்றச்சொன்னால் கொஞ்சம் விட்டுக்கொடுப்போடு ஆளுநரை மாற்றிவிடலாமே, இராணுவத்தை அப்புறப்படுத்தச் சொன்னால் கொஞ்சம் விட்டுக் கொடுப்போடு வடக்கைவிட்டு இராணுவத்தை அப்புறப்படுத்தலாமே, பலாலி காணிகளையும் கொஞ்சம் விட்டுக்கொடுப்போடு மக்களிடம் கையளிக்கலாமே, சம்பூர் மக்களின் காணிகளையும் அந்த மக்களிடமே கொடுத்துவிடலாமே.

இவற்றை அரசு கொஞ்சம் விட்டுக்கொடுப்போடு செய்யலாமே என்று கூறுகின்றவர்கள் அத்தோடு நிறுத்தவில்லை. பாராளுமன்றத் தெரிவுக் குழுவை கலைத்துவிட்டு கூட்டமைப்போடு மட்டும் அரசாங்கம் பேசலாமே, அரசாங்கம் கொஞ்சம் விட்டுக்கொடுப்போடு போர்க் குற்றத்தை ஏற்றுக் கொண்டு சர்வதேச விசாரணைக்கு போகலாமே, முடியுமாக இருந்தால் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டு வடக்கில் ஆளுநரும் இல்லாத, அதிகாரிகளும் இல்லாத அதிகாரத்தைக் கொடுத்து தனியே பணப்பைகள் மட்டும் நிரப்பப்பட்ட புகையிரதங்கள் மட்டும் கிளிநொச்சிக்கு வந்து போகக்கூடிய விட்டுக்கொடுப்பு ஒப்பந்தமாக அது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் கொஞ்சம்விட்டுக் கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மாகாண அரசை நிறுவினால் எவ்வளவு நன்றாக இருக்கும். இப்படியெல்லாம் கொஞ்சம் விட்டுக்கொடுப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னும் சில விட்டுக்கொடுப்புக்கள் தேவையாக உள்ளது. புலிகள் கேட்டதற்கு ஒப்பாக கேட்காமல் மாகாண சபைகளை ஏற்று மத்திய அரசுடன் கொஞ்சம் விட்டுக்கொடுப்புடன் தமிழ் மக்கள் முன்னேறிச் சென்றால் எப்படி இருக்கும்.

சர்வதேசமும் வேண்டாம், யாரும் தண்டிக்கப்படவும் வேண்டாம். நடந்த தவறுக்கு எல்லோரும் பொறுப்பாளிகள் தான். ஆகவே நடந்ததை மறந்து இலங்கை அரசுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு நாங்கள் போகின்றோம். நாங்கள் பேதமற்ற இலங்கையர்களாக வாழவே விரும்புகின்றோம் என்று கொஞ்சம் விட்டுக்கொடுத்து தென்னிலங்கையுடன் நேசக்கரம் நீட்டினால் எப்படி இருக்கும்.

ஆளுநர் ஆமியாக, கடற்படையாக அல்லது யாராகவும் இருக்கட்டும். அவர் எங்கள் ஆளுநர் எங்களுக்கு நன்மையைச் செய்வார். ஆளுநரும், முதலமைச்சரும் ஒருவருக்கு ஒருவர் கொஞ்சம் விட்டுக் கொடுத்து மாகாண சபையை வெற்றிகரமாக செயற்படுத்தினால் எப்படி இருக்கும்.

இப்படியும் சில விட்டுக் கொடுப்புக்களுக்கான ஏக்கமும் இல்லாமல் இல்லை. இவை தவிர வேறு சில விட்டுக்கொடுப்புக்கான எதிர்பார்ப்புக்களும் உள்ளது. அவையாவன: சிறைகளில் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை கொஞ்சம் விட்டுக்கொடுப்புடன் விடுதலைசெய்தால், பூர்வீகமாக வாழ்ந்த காணிகளை பாதுகாப்பு வலயமாக அபகரிக்காமல் மீண்டும் உரியவர்களிடமே வழங்கினால், வழிபாட்டுத் தலங்கள் கொள்ளையடிக்கப் படுவதையும், தாக்கப்படுவதையும் பார்த்துக் கொண்டிருக்காமல் அல்லது அதுபற்றி வாயைத் திறக்காமல், மௌனமாக இருக்காமல் கொஞ்சம் அக்கறை செலுத்தினால், தமிழ் பேசும்போது கடுமையாக முகத்தை மாற்றிக் கொள்ளும் அதிகாரிகள், சாதாரண விடயங்களுக்கும் தமிழ்பேசுவோர் என்பதற்காக சட்டத்தை கையில் எடுத்து உறுமும் அதிகாரத் துஷ்பிரயோகிகள், போன்றோர் தமிழ் பேசும் மக்களை கொஞ்சம் விட்டுக்கொடுப்புடன் மனிதாபிமானத்துடன் நடத்தினால் எப்படி இருக்கும்.

தமிழ் மக்களிடையே பகைமை பேசி இனவாதத்தீயை வளர்க்காமல் யதார்த்தம் பேசிய தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அத்தனை பேரையும் இணைக்கும் வேலைத் திட்டம் வகுத்து அதில் தேவையான விட்டுக்கொடுப்பைச் செய்து அர்த்தபூர்வமான நல்லதைச் செய்தால் எப்படி இருக்கும்?

அரசியல் பேதங்களை தூரப்படுத்தி தமிழ் அரசியல் கட்சிகள் வெளிப்படையான வேலைத் திட்டத்திற்காக விட்டுக்கொடுத்து ஓரணியானால் எப்படி இருக்கும்?

நாங்கள் போராட்டப் பாதையிலிருந்து அரசியலுக்கு வந்தவர்கள். இழப்புக்களும், தியாகங்களும் எங்கள் போராட்டத்திலேயே இருந்தது. நீங்கள் மேடைகளில் ஏறி நின்று வீராவேசமாக கத்திய அளவுக்கு போராடவில்லை. போராட்டம் வேறொரு வடிவம் பெற்றபோது ஆமை தலையை இழுத்துக்கொள்வதுபோல் பதுங்கிக்கொண்டீர்கள் என்று கூறுவதை நிறுத்தி கொஞ்சம் விட்டுக்கொடுப்புடன் மிதவாதம் பேசுவோரை அணுகினால்,

நாங்கள் கறைபடியாதவர்கள். நீங்கள் இரத்தக்கறை படிந்த கைகளை உடையவர்கள். நீங்கள் தூக்கிய ஆயுதங்கள் அழிவுகளைத் தந்ததே தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை. அன்றைக்கும் இன்றைக்கும் எங்களது மிதவாதப் போராட்டமே பொருத்தமாக உள்ளது என்று கூறுவோர் கொஞ்சம் விட்டுக் கொடுத்து மிதவாதமும், ஆயுதப் போராட்டமும் காலத்தின் அவசியம் கருதிய வழிமுறையே ஆகும். சமகாலத்தில் நாம் ஒரு நேர்கோட்டில் முன்னகர்த்துவோம் என்று இருதரப்பும் கொஞ்சம் விட்டுக்கொடுப்புடன் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து அணுகினால் எப்படி இருக்கும்?

தமிழ் மக்கள் தேசியம் எனும் ஒற்றைவழியில் பயணித்து பல இழப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். பாதுகாப்பாக திரும்பமுடியாத பயங்கரப் பாதையே தேசியம் மற்றும் விடுதலையில் பெயரால் காட்டப்பட்டது. அதை கேள்வி கேட்கமுடியாத, திருத்த முடியாத, தனது மாற்று அபிப்பிராயத்தை பேச முடியாத இனமாக இருந்து விட்டதை உணர்ந்து கொஞ்சம் விட்டுக் கொடுப்புடன் மாற்றுப் பாதை ஊடான பயணத்தை விரும்புகின்ற முடிவை தற்போதாவது தமிழ் மக்கள் எடுத்துப் பார்த்தால் எப்படி இருக்கும்.

இப்படி பல கேள்விகள், எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் பல தரப்பிடமும் உண்டு. அதை சாத்தியமாக்குவதற்கு தேவை கொஞ்சம் விட்டுக்கொடுப்பு தான். ஆனால், அதற்கான துணிச்சல் துளியளவும் எவருக்கும் இல்லை. காரணம் விட்டுக்கொடுத்தால் தாம் சார்ந்த மக்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள். தமது அரசியல் எதிரிகள் தமது விட்டுக்கொடுப்பை இயலாத்தனமாகவும், காட்டிக் கொடுப்பாகவும் அர்த்தப்படுத்திக் கொள்வார்கள் என்ற அரசியல் பயம்.

பல ஆயிரம் பேரின் உயிர்கள் பலிகொடுக்கப்பட்டுள்ளது, ஒரு இனத்தின் இருப்பும், அடையாளங்களும் அழிக்கப்பட்டுள்ளது. பிரச்சினைக்கான அடிப்படையை இனம்காணாமல் அதை திருத்தாமல், அதன் பாதிப்புகளுக்கு கௌரவமான பரிகாரம் காணாமல் அதை அப்படியே மூடிமறைக்க முயற்சிக்கப்படுகின்றது. இந்த நிலையில் விட்டுக்கொடுப்பை எந்த நம்பிக்கையிலிருந்து ஆரம்பிப்பது என்பது பொதுவான கேள்வி.

விட்டுக்கொடுப்புக்கூடாக பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால் தமது அரசியல் இருப்புக்கான அவசியம் அற்றுப்போய்விடும் என்ற அச்சங்கள். அரசியலில் இருப்பதாக நம்பும் தமது முன்னுரிமைகள் அர்த்தமற்றதாகி விடுமோ என்ற பீதிகள். இடைத்தரகர்களுக்கு அவசியமில்லாமல் எல்லோரும் பொது மையத்தை நோக்கி நகர்கின்ற சூழலில் தாம் ஒதுக்கப்பட்டுவிடக்கூடும் என்ற அங்கலாயப்புகள் காரணமாகவே இந்தக் கொஞ்சம் விட்டுக்கொடுப்புக்கு யாரும் தயாராக இல்லை.

கொஞ்சம் விட்டுக்கொடுப்பு என்பது சின்ன வார்த்தைப் பிரயோகம்தான். அதற்காக அரசியலில் இருப்பவர்களும், தம்மைத் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு வைக்கோல் பட்டறையில் உள்ள நாலுகால் ஜீவனைப் போன்றவர்களும் எதையும் தியாகம் செய்யத் தயாராக இல்லை. இந்த சூழல்தான் பிரச்சினைகள் தீராப்பிரச்சினையாகத் தொடர்வதற்கும், மக்களின் துயரங்கள் தொடர்வதற்கும் மூலகாரணமாக உள்ளது.

மதியூகி

எக்ஸ்ரே ரிப்போர்ட்



பகுதி - 3

# அக்காவுக்கும் பொதுமன்னிப்பு

தெற்கின் சிறையில் வாழ்வும் போய் வயிற்றில் சுமந்த குழந்தையையும் பிரிந்து அப்படியொரு அம்மாவின் குழந்தைதான் தானென்பதைக்கூட அறியாது மறந்துபோன குழந்தையின் நினைவுகளையே தனது கனவாக்கிக்கொண்டு நடைப்பிணமானாள்.

தண்டனை பெற்ற கைதிகள் வேலைக்கு அழைத்துச்செல்லப்படும் வாகனத்தில் இவளும் ஏற்றப்படுவாள். அதிகாரிகளின் ஏவலுக்கு எல்லாக் கழனங்களையும் மாய்ந்து மாய்ந்துசெய்து தொலையவேண்டிய தனது விதியை நினைத்து அழுவாள். உடல்வலிக்க செய்கிற வேலைக்கு உகந்த உணவும் கிடைக்காது. உடல் அசந்து ஓய்வாய் உறங்கவும் முடியாத கடந்த காலத்துயரம் சிறையோடு வாழ்வே இனி முடிவென்றாயிற்று.

இலங்கையில் இப்படியொரு உலகம் இருக்கின்றதென்பதனை இலங்கை ஜனாதிபதிகூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. அத்தகைய கொடுமைகளும் அசிங்கங்களும் அந்தச் சிறைச்சாலைக்குள் ஒளிந்திருந்தது. போதைவஸ்து, விபச்சாரம், கொள்ளை, கொலை , களவென எல்லாக் குற்றங்களுக்கும் தண்டனை பெற்ற சிங்களக் கைதிகள் நடுவில் இவளும் இவள் போன்ற தமிழ் அரசியல் கைதிகளும் படுகிற வலிகளையும் தாங்கியபடி அவள்.....

2012ஆம் ஆண்டு புதுவருடப்பிறப்பில் ஆயுள்தண்டனை பெற்ற சில கைதி களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்போவதாகவும் அதற்கான படிவங்களை நிரப்புமாறும் சொன்னார்கள். இப்படி எத்தனையோ கடிதங்கள் மன்னிப்பு மன்றாட்ட மனுக்கள் இந்த 19 வருடத்தில் அனுப்பியிருப்பாள். இதுவரையில் ஒரு ஜனாதிபதியும் அவளுக்குக் கருணை காட்டவுமில்லை கண்திறக்கவுமில்லை. இம்முறை இந்த நாடகத்தில் அவள் பங்கேற்பதில்லையென்றே ஒதுங்கியிருந்தாள். ஆனால், அவளோடிருந்தவர்கள் சிலர் அவளது பெயரையும் இணைத்து ஜனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளார்கள்.

புதுவருடத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் யாரோ கொடுத்த உதவியில் அவர்களுக்கெல்லாம் புரியாணி சாப்பாடு கிடைத்திருந்தது. புழு அரிசியும் வேகாத சூத்தைக்கத்தரிக்காய் வெண்டக்காய் அவியல் சாப்பிட்ட வாய்க்கு புரியாணி சோறு தேவாமிர்தம் போலிருந்தது. அந்தச் சோற்றில் கைவைக்க ஒருத்தி சொன்னாள்; அக்காவுக்கும் பொது மன்னிப்புக் கிடைக்கும்.

நீண்டகாலம் கட்டிவைத்த அழுகை அந்தக் கணத்தில் வந்து குதித்தது. புதுவருடத்தில் கிடைத்த புரியாணிச் சோற்றின் முன்னிருந்து கதறியழுதாள். இந்தச் சிறையை ஜனாதிபதியை வந்து பார்க்கச் சொல்லி மனுப்போடுங்கோ எனக்கத்தினாள். ஆசையோடு எடுக்கப்பட்ட புதுவருடப் புரியாணிச் சோறு சுவையிழந்து போக அவளது கண்ணீர்போல எல்லாக் கண்களும் கண்ணீரால் நிறைந்தது.

(முற்றும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 93

மணியம்

பல்கலைக்கழகம் போன்ற புத்திஜீவிகள் நிறைந்த ஒரு இடத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்த சிவரஞ்சித். அவருடைய நெருங்கிய தோழர் ரவிசேகர் போன்றோருக்கு. புலிகளின் அராஜகச் செயல்களால் இக்கட்டான ஒரு நிலை இருந்துவந்தது. இயல்பாகவே ஓரளவு நேர்மையான தன்மையைக் கொண்டிருந்த சிவரஞ்சித். புலிகளின் இத்தகைய நடவடிக்கைகளை வெறுத்தாலும். தமிழ் தேசியத் தின்பால் அவர் கொண்டிருந்த அவா. அவரைப் புலிகளின் வாலைப் பிடித்தவண்ணம் ஓட வைத்துக்கொண்டிருந்தது.

இருப்பினும் மண் சுமந்த மேனியர் நாடகம் அரங்கேற்றப் பட்ட பின்னர். அந்த நாடகத்தைத் தயாரித்து அளித்த பல்கலைக்கழ கலாசாரக் குழுவுக்குள் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் ஏற பட்டன. இந்தக் குழுவில். அன்றைய காலகட்டத்தில் இயங்கிய எல்லா ஆயுதப் போராட்ட இயக்கங்களையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

முக்கியமாக சிவரஞ்சித். தில்லை. செல்வி. அம்பிகா. மோகன். யோகர். சர்வேந்திரா. அ.ரவி. விந்தன். விஜயரத்தினம் எனப் பலர் அதில் இருந்தனர். அவர்களை வழி நடாத்தியவராகக் கருதப்பட்ட க.சிதம்பரநாதன் பல்கலைக்கழகம் சாராத வெளி ஆளாக இருந்தார். (அப்பொழுது அவர் இப்பொழுது இருப்பது போல பல்கலைக்கழக விரிவுரையாளராக இருக்கவில்லை) அவர் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் தவிர அதில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு வெளி ஆள் நான் மட்டுமே.

மண் சுமந்த மேனியர் கதைக்கான கரு உருவாக்கப் பட்ட சூழ்நிலைமை சுவாரசிய மானது. அந்தக் காலகட்டத்தில் க.சிதம்பரநாதன் என்னுடன் மிகநெருக்கமான தொடர்பில் இருந்தார். என்னைச் சந்திக் காத நாட்கள் இல்லையென்றே சொல்லலாம். அவருக்கு புலிகளின் அப்போதைய அரசியல் பொறுப்பாளர் திலீபனுடனும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அதன்காரணமாக புலிகளின் உள் பிரச்சினைகள் உட்பட புலிகளின் பல விடயங்கள் சிதம்பரநாதன் ஊடாக எனக்கும் கிடைத்துவந்தது. என்னுடன் இருப்பதுபோலவே சிதம்பரநாதனுக்கு அவருடன் ஒன்றாகக் கற்பித்த எனது நண்பரும் அயலூரவருமான பொன்.சிவராசா மாஸ்டருடனும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதேபோல எமது கட்சித் தோழரும் ஆசிரிய சங்கச் செயலாளருமான தோழர் எம்.குமாரசாமி மாஸ்டருடனும் சிதம்பரநாதனுக்குத் தொடர்பு இருந்தது. எமது கட்சித் தோழர்கள் பலருடனும்கூட எம்மூலமாக அறிமுகம் இருந்தது.

இலங்கையில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி விடுமுறை தினமாகையால். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் நான். சிவராசா மாஸ்டர். சிதம்பரநாதன். ஓய்வுபெற்ற தபாலதிபர் தோழர் பதஞ்சலிநாதன் ஆகியோர் குமாரசாமி மாஸ்டர் வீட்டில் அன்றைய இரவுகூடி பல விடயங்களையும் கலந்துரையாடுவதுடன். சிறிது மதுவும் அருந்தி இரவு உணவும் உண்பது ஒரு குறிப்பிட்ட காலம்வரை வழக்கத்தில் இருந்துவந்தது. இரண்டொரு தடவை சிவராசா மாஸ்டரின் சொந்தக் கிராமமான உடுத்துறைக்குச் சென்று இரவு தங்கி. இரவிரவாகக் கடற்கரையில் இருந்து கதைத்துவிட்டும் வந்திருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பங்களில் சிவராசா மாஸ்டர் சிதம்பரநாதனைப் பார்த்து. "சிதம்பரநாதன் உம்முடைய நிலைப்பாடு என்ன?" என கேலியாகக் கேட்பதுண்டு. அவர் நகைச்சுவையாகக் கேட்டாலும் அதற்கு ஒரு அர்த்தம் இருந்தது. சிதம்பரநாதன் தான் ஓர் இயக்கத்தையும் சாராத ஒரு நடுநிலை நபர் எனச் சொல்லிக் கொண்டாலும். அவர் புலிகள் மீது அதிகமான விசுவாசம் கொண்டிருந்தார் என்பது சிவராசா மாஸ்டருக்குத் தெரியும். எமக்கும் கூட அது தெரிந்திருந்தது.

சிதம்பரநாதனின் நிலைப்பாடு பற்றிய சிவராசா மாஸ்டரின் கேள்விக்கு. சிதம்பரநாதன் நேரடியாகப் பதில்சொல்லாமல் சிரித்துச் சமாளித்துவிடுவார். ஆனாலும் எமக்குள்ளான உறவு மிகவும் அந்நியோந்நியமாகவே இருந்துவந்தது.

சிதம்பரநாதனைப் பொறுத்தவரை. எமக்குத் தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் இருந்த தொடர்புகள் பற்றி நிறையத் தெரியும். அவர் என்னிடம் அடிக்கடி கூறும் ஒரு விடயம் உண்டு கடந்தகால தமிழ் தேசியவாதத் தலைமைகள் தென்னிலங்கை முற்போக்கு சகதிகளுடன் தொடர்புகொள்ளாமல் இருந்தது தவறு என்றும். தென்னிலங்கையிலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புசக்திகளையும். தற்போதைய தமிழ் தேசிய விடுதலை சக்திகளையும் (புலிகள்?) ஒரு சமாந்தரமான பாதைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்வார். அவரது மனைவி பத்மினியும் (புலிகளின் காலத்தில் அவர்களால் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டவர்) தென்னிலங்கையில் இருந்த சில சிங்கள முற்போக்குப் பெண்ணியவாதிகளுடன் தொடர்புகொண்டிருந்ததுடன். யாழ்.பல்கலைக்கழகத்திலும் சில முற்போக்கு பெண் விரிவுரையாளர்கள். மாணவிகளுடன் தொடர்பில் இருந்தார்.

1983 ஜீலை 23ம் திகதி இரவு புலிகள் திருநெல்வேலியில் இராணுவ ட்ரக் வண்டிமீது தாக்குதல் நடாத்தி 13 இராணுவ வீரர்களைக் கொன்றபோது. அதற்குப் பதிலடியாக அடுத்தநாள் காலை இராணுவத்தினர் பெருந்தொகையாக அவ்விடத்துக்கு வந்து திருநெல்வேலியிலிருந்து கந்தர்மடம் சந்திவரை பல பொது மக்களைச் சுட்டுக்கொன்றனர். அந்த நேரத்தில் இராணுவத்தினரின் கைகளில் அகப்பட்டு உயிர்தப்பியவர்களில் சிதம்பரநாதனும் ஒருவர்!

## திருநெல்வேலியில் இராணுவத்தினருடன் கூடவே தாக்குதலுக்குள்ளாகி இறந்த செல்லக்கிளி

1983 ஜூலை 23ம் திகதி திருநெல்வேலியில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தி அவர்களில் 13 பேரைக் கொலை செய்த அன்று இரவு. சம்பவம் நடந்த இடத்துக்கு மிக அருகாமையில் நான் வாடகைக்குக் குடியிருந்த வீட்டில் நானும் சில தோழர்களும் தங்கியிருந்தோம். அந்த வீடு பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் பரமேஸ்வராச் சந்தியிலிருந்து சிவன் கோவில் செல்லும் வீதியில் தபால் கந்தோருக்கு முன்னால் அமைந்துள்ளது. புலிகள் கண்ணிவெடிமூலம் இராணுவத்தைத் தாக்கிய பின்னர் இரு தரப்பும் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டபோது. துப்பாக்கிக் குண்டுகள் பறந்து வந்து நாம் தங்கியிருந்த வீட்டின் மீதும் படபடவென விழுந்தன. அன்றிரவு நாம் யாரும் நிம்மதியாகத் தூங்கவில்லை.

அடுத்த நாள் காலை நானும் சில தோழர்களும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றபோது பெரும் தொகையான மக்கள் அவ்விடத்தில் குழுமி இருந்தனர். குண்டுவெடிப்பாலும் துப்பாக்கிச் சூடுகளாலும் அயல்வீடுகள் சில சேதமடைந்திருந்தன. புலிகள் அயலிலிருந்த வீடுகளின் மதில்களுக்குப் பின்னால் மறைந்திருந்து கண்ணிவெடியை வெடிக்கவைத்துவிட்டு. பின்னர் துப்பாக்கியால் இராணுவத்தினர் மீது சுட்டதாக அயல்வீடுகளில் குடியிருந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் நடந்த இடம் பல்கலைக்கழகச் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்திப்பக்கமாக உள்ள 'தபால்பெட்டி' சந்தியாகும். அந்தச் சந்தியில் மேற்குப்புறமாக ஒரேயொரு கடை மட்டும் இருக்கிறது. அதன் மேல்புறம் சீமெந்து பிளாட்டினால் ஆனது. இராணுவத்தின் மீதான தாக்குதலின்போது. புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான 'செல்லக்கிளி' இந்தக்கடையின் மேல்தளத்தில் நின்றுதான் தாக்குதலில் ஈடுபட்டார். பிரபாகரன் அவருக்கு எதிர்ப்புறமாக வீதிக்கு அந்தப் பக்கம் இருந்த ஒரு வீட்டின் மதிலின் பின்னால் சிலருடன் மறைந்திருந்து தாக்குதலில் ஈடுபட்டார்.

தாக்குதலின் உச்சக்கட்டத்தில் திடீரென செல்லக்கிளிமீது சரமாரியான துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டு. அவர் அந்த இடத்திலேயே சரிந்து விழுந்து இறந்துவிட்டார். அந்த மர்மமான சூட்டை செல்லக்கிளி மீது நடாத்தியவர் பிரபாகரன் தான் என்ற விடயம். பிற்காலத்தில் பரவலாக எங்கும் பேசப்பட்டது. அவ்வளவு உறுதியாக பிரபாகரன்மீது குற்றம் சாட்டப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று. பிரபாகரன் செல்லக்கிளியைச் சுட்டதை அவருடன்கூட இருந்த சிலர் கண்டதாகச் சொல்லப்பட்டது.

இரண்டாவது. செல்லக்கிளிமீது பிரபாகரனுக்கு எப்பொழுதுமே ஓர் அச்சம் இருந்துவந்ததாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செல்லக்கிளி அந்தச் சமூகத்துக்குப் பொதுவாக உள்ள போர்க்குணம் மிக்கவர். புலிகள் இயக்கத்தில் அஞ்சாமையுடன் வீரதீரமாகச் செயற்பட்ட ஒருவராகவும். பிரபாகரனைவிட உயரமானவராகவும். ஆளுமை மிக்கவராகவும் அவர் இருந்தார். இயக்கத்தில் எல்லாவிடயங்களலும் தன்னையே முதன்மைப்படுத்துபவராக இருந்த பிரபாகரனுக்கு செல்லக்கிளியின் வளர்ச்சி பிடித்திருக்க நியாயமில்லை. எனவே. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைத் தீர்த்துக் கட்டிவிட்டதாக செய்திகள் உலாவின. இந்த விடயம் உண்மைதானா என்பதை என்னால் உறுதியாகச் சொல்வதற்கு என்னிடம் ஆதாரங்கள் எதுவும் இல்லை.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 82

பா.ராகவன்

ஏனெனில் பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் என்கிற மூன்று தேசங்கள் தான் அப்போது உலகின் மாபெரும் வல்லரசுகள் என்று சொல்லப்பட்டன. இந்த மூன்றையும் ஒதுக்கிவிட்டு எங்கே அமெரிக்கா முன்னால் வந்து விடுமோ என்கிற பிரிட்டனின் நியாய மான கவலையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

உலகெங்கும் தனது காலனிகள் மூலம் தனது வல்லரசுத் தன்மை யைப் பறைசாற்றிக் கொண்டிருந்த பிரிட்டன், இஸ்ரேலை உருவாக்கித் தருவதன்மூலம் சர்வதேச அரசியல் அரங்கில் இன்னொரு புதுப் பரிமாணம் பெற்று, மேலும் முக்கியத்துவம் உள்ள தேசமாக உருவாவதற்கு இருந்த சாத்தியங்களை யோசித்துப் பார்த்தது.

அரசு என்பது என்ன? சில மனிதர்களாலான ஓர் அமைப்பு. அவ்வளவுதானே? யூதர்களுக்கு இதுமிக நன்றாகப் புரிந்திருந்தால், பிரிட்டிஸ் அரசின் மிக உயர்ந்த பதவிகளில் இருந்தவர்களை மிகக் கவனமாக கவனித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள். எல்லாமாகச் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தன.

1917 ஆம் ஆண்டு பிரிட்டன் துருக்கியின் ஆளுகைக்கு உட்பட்டி ருந்த பாலஸ்தீனைத் தாக்கியது.

அமெரிக்கா ஒரு வல்லரசாக உருப்பெறுவதற்கு முன்னர், உலகமே பார்த்து பயந்த தேசம், இங்கிலாந்து. அன்றைய இங்கிலாந்தின் படைபலம், பொருளாதார பலம் இரண்டும் இதற்கான காரணங்கள். இவற்றை விட முக்கிய காரணம், அன்றைக்கு இங்கிலாந்துக்கு இருந்த காலனிகள் பலம். உலகெங்கும் பரவலாகப் பல்வேறு தேசங்களைத் தன் ஆளுகையின் கீழ்கொண்டு வந்து ஆட்சி புரிந்துகொண்டிருந்தது இங்கிலாந்து. இதன் மறைமுகப் பொருள் என்னவென்றால், எந்தெந்த தேசமெல்லாம் இங்கிலாந்தின் காலனியாக உள்ளதோ, அந்தந்த தேசத்தின் இராணுவமெல்லாம் இங்கிலாந்து இராணுவத்தின் ஒரு பகுதி. அந்தந்த தேசத்தின் இயற்கை வளங்களெல்லாம் இங்கிலாந்தின் வளங்கள். ஆகவே, நினைத்த மாத்திரத்தில் ஒரு மாபெரும் இராணுவத்தை எந்த இடத்துக்கும் அனுப்பும் வல்லமை பெற்றிருந்தது இங்கிலாந்து. (முதல் உலகப்போர் சமயத்தில், ஒரே நேரத்தில் எட்டு இராணுவங்களை அனுப்பிய அனு பவமும் அத்தேசத்துக்கு உண்டு.)

ஆனால், இங்கிலாந்தால்கூட அப்போது முடியாத ஒரு காரியம் உண்டென்றால், அது மத்திய கிழக் கில் தன் வேர்களை ஊன்றுவது. நூறு சதவீதம் இஸ்லாமிய ஆட்சி நடந்துகொண்டிருந்த பூமி அது. ஒரு பக்கம் ஒட்டாமான் துருக்கிய சாம்ராஜ் ஜியம். இன்னொரு பக்கம், பழைய கலீபாக்களின் மிச்சங்களாக, பக்தாத்தை மையமாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்த சுல்தான் கள். ஆங்காங்கே இவர்களுக்குக் கப்பம் கட்டும் குறுநில மன்னர்கள். எப்படிப் பார்த்தாலும் இஸ்லாமியர்கள் தான். அவர்களைத் தவிர இன்னொரு வர் கிடையாது.

மத்திய கிழக்கில் காலூன்றுவதற்கு ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எல்லா மேற்கத்திய தேசங்களுமே கனவு கண்டு கொண்டிருந்த காலம் அது. உலகப்போர் அதற்குச் சரியான சந்தர்ப்பமாக அமைந்தது.

பிரிட்டனும் பிரான்ஸும் போட்டி போட்டுக்கொண்டு கூட்டணி அமைத்துத் தம் தாக்குதல் வியூகங்களை வகுத்தன.

முந்திக் கொண்டதென்னவோ பிரிட்டன்தான்.



ஒட்டாமான் சாம்ராஜ்ஜியம் என்று பெருமையாகச் சொன்னாலும் பிரிட்டனின் இராட்சசப் படை பலத் துக்கு முன்னால் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாமல் போனது. உக்கிர மாகப் போரிட்டுக் தோற்றுப்போனார் கள் முஸ்லிம்கள்.

இதற்கு இன்னும் சில நுணுக்க மான காரணங்களும் இருக்கின்றன. துருக்கியில் அப்போது நடந்து கொண்டி ருந்தது முஸ்லிம்களின் ஆட்சிதான் என்றபோதும், புவியியல்ரீதியில் துருக்கி ஓர் ஐரோப்பிய தேசம். ஆனால் பிற ஐரோப்பிய தேசங்களுடன் ஒட்டமுடியாமல் மத்திய கிழக்கின் இஸ்லாமிய தேசங்களுடன் மட்டுமே உறவுகொண்ட தேசம்.

இந்தக் கடுப்பு அனைத்து ஐரோப்பிய தேசங்களுக்கும் உண்டு.

> **“அமெரிக்கா ஒரு வல்லரசாக உருப் பெறுவதற்கு முன்னர், உலகமே பார்த்து பயந்த தேசம், இங்கிலாந்து. அன்றைய இங்கிலாந் தின் படைபலம், பொருளாதார பலம் இரண்டும் இதற்கான காரணங்கள். இவற்றைவிட முக்கிய காரணம், அன்றைக்கு இங்கிலாந்துக்கு இருந்த காலனிகள் பலம். உலகெங்கும் பரவலாகப் பல்வேறு தேசங்களைத் தன் ஆளுகையின் கீழ்கொண்டு வந்து ஆட்சி புரிந்து கொண்டிருந்தது இங்கிலாந்து.”**

ஆகவே, அவர்கள் திட்டமிட்டு துருக்கியை மத்திய கிழக்கின் பிற பகுதி களிலிருந்து சித்தாந்த ரீதியில் பிரித்துக் காட்டுவதற்காக ஒரு தந்திரத்தை மேற்கொண்டார்கள். அதன்படி, முஸ்லிம்கள் என்று பொதுவாகக் குறிப்பிடாமல், துருக்கி யர்கள் – அராபியர்கள் என்று இரு தரப்பினரையும் எப்போதும் பிரித்தே குறிப்பிட்டுவந்தார்கள். இதனை ஒரு திட்டமிட்ட பிரசார உத்தியாகவும் மாற்றி, மிகத் தீவிரமாகப் பேசியும் எழுதியும் வந்தார்கள்.

இதன்விளைவு, பாமர அராபியர் களுக்கு, தாங்கள் வேறு, துருக்கியர் கள் வேறு என்னும் எண்ணம் மெல்ல மெல்ல ஏற்பட்டு , காலப்போக்கில் அது மிகத் தீவிரமாக மனத்தில் வேரூன்றத் தொடங்கிவிட்டது.

உலகப் போர் சமயத்தில் பிரிட்டன் இதனைத் தனக்குச் சாதகமான ஓர் அம்சமாகப் பயன்படுத்திக்கொண்டு, கிராமப்புற அராபியர்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி, துருக்கி சுல்தானுக்கு எதிராகத் தகவல்கள் சேகரிக்க, ஒற்றறிந்துவரப் பயன்படுத் திக் கொண்டுவிட்டார்கள்.

ஒட்டாமான் சாம்ராஜ்ஜியம் என்பது எத்தனை பெரிய அரசு! ஒரு பேரரசு என்று சொல்வதற்கு முற்றிலும் பொருத்தமான அரசாக இருந்தது அது. அதுவும் எத்தனை நூற்றாண்டுகளாக!

ஆனால் அந்தப் பேரரசு, உலகப் போரில் விழுந்தபோது, அதற்காகக் கண்ணீர் சிந்தக்கூட யாருக்கும் அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

ஒட்டாமான் துருக்கிய சாம்ராஜ்ஜியம் யுத்தத்தில் விழுந்தது என்கிற தகவல் வந்ததுமே இங்கிலாந்தும் பிரான்சும் மிகக் கவனமாகத் திட்டமிட்ட, பேரரசின் பகுதிகளை எப்படிப் பிரிப்பது என்று ஆலோசித்தார்கள். இறுதியில் ஓர் ஒப்பந்தமும் அரங்கேறியது.

இன்றுவரை இங்கிலாந்தும் பிரான்சும் அப்படி ஒரு ஒப்பந்தம் நடைபெறவேயில்லை என்று அடித்துக்கூறி வந்தாலும் அந்த ஒப்பந்தத்துக்கு ஒரு பெயர்கூட இருக்கிறது. ஸ்கைஸ் பிகாட் ஒப்பந்தம். நடக்கவேயில்லை என்று இரு தேசங் களும் அடித்துக்கூறும் ஓர் ஒப்பந்தம், பெயருடன் எப்படி வெளியே வந்தது?

அது சுவாரசியமான கதை. முதல் உலகப் போர் சமயத்தில்தான் ரஸ்யா வில் உள்நாட்டுப் புரட்சி உச்சக்கட்ட தைத் தொட்டிருந்தது. ஜோர் மன்னர் களுக்கு எதிராகத் திரண்டெழுந்த மக்கள் கம்யூனிஸ்டுகளைத் தம்மைக் காக்கவந்த கர்த்தராகவே கருதிய சமயம் அது . புரட்சியின் உச்சக்கட்ட காட்சிகளுக்குள் ஒன்றாக, கம்யூனிஸ்ட் வீரர்கள், அமைச்சர்கள், அதிகாரிகளின் அலுவலகங்கள், வீடுகள் ஆகியவற்றை ஒரு சமயம் சூறையாடிக் கொண்டிருந்தார்கள். அப்படி சூறையாடியபோது அகப்பட்ட ஆவணங்களுள் ஒன்று இந்த ஸ்கைஸ் பிகாட் ஒப்பந்தம்!

படித்துப் பார்த்தார்கள். அடடா. இங்கிலாந்தும் பிரான்சும் மத்தியக் கிழக்கைக் கூறுபோட திட்டம் வகுக் கிறார்களே என்று கவலைப்பட்டு, உடனடியாக அந்த ஒப்பந்த நகலை நம்பகமான தூதுவர் ஒருவர் மூலம் துருக்கிக்குக் கொண்டு அனுப்பினார்கள்.

இப்படித்தான் முஸ்லிம்களுக்கு அந்த ஒப்பந்த விவரமே தெரிய வந்தது. கம்யூனிஸ்டுகளின் மூலம்! உடனே அவர்கள், இங்கிலாந்தின் மிகத் தீவிர ஆதரவாளராக அப்போது இருந்த மெக்கா நகரில் ஷெரீப், ஹுசேன் என்பவரிடம் கொடுத்து, விசாரிக்கச் சொன்னார்கள்.

(தொடரும்...)

# திருமண வாழ்வில் நுழையும் முன்...

“ஒரு பெண்ணை மணம் முடித்துக்கொள்ளும் முன் அவளுடைய உடன்பிறந்தவர்களின் ஒழுக்கநலன்களையும் கவனி. ஏனெனில் பெரும்பாலான குழந்தைகள் மாமனின் குணங்களை ஒத்திருக்கின்றனர்” மனைவி என்பவள் கண்ணால் மட்டும் பார்த்து தேர்ந்தெடுக்கப்படவேண்டியவள் அல்லள். காதால்கேட்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவள் என்பதை அவர்கள் உணர்வார்களா?

நவீன நாகரிகம் ஆண், பெண்ணிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குடும்ப வாழ்வை நாசமாக்கி வருகின்றது. நவநாகரிகப் பெண்களை மணமுடித்துக்கொள்ள இளைஞர்கள் விரும்பு கிறார்களேயன்றி அவர்களிடம் இருக்கவேண்டியவை, இருக் கின்றனவா என்பதைப் பார்க்கத் தவறுகிறார்கள். பெண்களிடம் இருக்கவேண்டிய ஒழுக்கம், பண்பு, கணவன் நலம் பேணல், குடும்பத்தைச் சீரான முறையில் நடத்தும் தகுதி, குழந்தை களைப் பராமரிக்கும் பொறுப்பு, உறவினர்களுடன் இனிமை யாகப் பழகும் முறை, தற்காத்துக்கொள்ளும் ஆற்றல், கல்வி போன்றவை இருக்குமா என்று ஆழ்ந்து சிந்திப்ப தில்லை. இதேநேரத்தில் ஆண்கள் ஒன்றை மறக்கக்கூடாது.

அப்பழக்கற்ற மனைவியை பெற்றுக்கொள்ள நினைப்பது சரிதான்! அந்தளவு நீங்கள் இருக்கிறீர்களா? என்பதையும் சிந்திக்கவேண்டும். மனைவி சகல சிறந்த குணங்களுடனும் இருந்தும் கணவன் ஊதாரியாக, திருடனாக கொலைகாரனாக, மங்கையரை நாடும் மைனராக, மனைவியைத் துன்புறுத்தும் அரக்கனாக, கல்வியறிவு இல்லாதவனாக இருப்பது எப்படிப் பொருந்தும்! இத்தகைய கணவனைப் பெற்ற பெண், என்ன செய்வாள்? கணவனின் தவறை, குற்றத்தை மன்னிக்கத் தயாராகவுள்ள சமூகம் பெண்களைப்பார்க்கும் பார்வை வேறாகத்தான் இருக்கின்றது.

இந்த இடத்தில் பெண்ணுக்கு, கணவனைவிட்டுப் பிரிந்து செல்ல உரிமையுண்டு; காட்டுமிராண்டிக் குணமுடையவனும் பண்பாடுடைய எந்தப்பெண்ணும் பொறுமையை இழக்கத்தான் செய்வாள். தமிழ் மூதாட்டியின் காலத்தில் “பெண், ஏறுமாறாக இருப்பாளேயாயின் கூறாமல் சந்தியாசம் கொள்” என்று உபதேசித்தது சரியானது. இன்று ஆண்களுக்கும் சேர்த்துக் இந்தக் கருத்தைப் பார்க்கவேண்டும். அன்றைய காலம் ஆண், குடும்பத்திற்காக உழைத்தான். பெண்வீட்டுக் கடமைகளைச் சரிவரச் செய்துகொண்டிருந்தாள். அக்காலத்து நிலை தற்போது இல்லை. எனவே மாற்றம் அவசியமானது. அவசியமான மாற்றம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

மனைவியை இழந்த கணவனுக்கு மறுதாரத்தை ஏற்படுத்த சமூகம் அங்கீகரித்தது. ஆனால் இன்று அடிப்படியில்லை. பெண்களுக்கும் அந்த உரிமையுண்டு எனும் நிலை ஏற்பட்டி ருப்பதை யாவரும் நினைவில்கொண்டு திருமண பந்தத்தில் சரியான முடிவுக்கு வரவேண்டும். அல்லாவிடின் இன்பத்தின் விளைவாகப் பிறந்த குழந்தைகளின் நிலை பரிதாபமாகிவிடும்!

சேக்ஸ்பியர், “அவசரத் திருமணங்கள் நன்றாக இருப்ப தில்லை” என்றும் வேறோர் இடத்தில் “அவசரமாக மணம் முடிப்பின் பின்னர் அமைதியாக இருந்து வருந்தநேரிடும்” என்றும் எச்சரிக்கிறார். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் அறிஞர்கள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு கோணத்திலும் எதிரொலிக்கிறது. ஆம். இன்று வெளிநாட்டு மாப்பிள்ளை” என்று பித்துப்பிடித்து அலையும் பெற்றோரையும், மணப்பெண்களையும் காண்கின்றோம்.



சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

(தொடரும்)




# மலையகத்தின் தேவையில் கிராம சேவகரின் அவசியம்!

மலையகத்தின் சனத்தொகைக்கு ஏற்ப கிராமசேவகர் பிரிவுகளும் பிரதேச செயலாளர் பிரிவுகளும் அமைக்கப்படவேண்டும் கோரிக்கை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வந்தன. அதன்விளைவாக நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் புதிய கிராமசேவகர் பிரிவுகள் அமைக்கப்பட்டன.

ஆனால், அந்த வேலைத் திட்டத்தினை மலையகத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கையினை முறையாக மேற்கொள்ளவில்லை. அதனால் அத்திட்டம் இன்னும் கிடப்பிலேயே இருக்கிறது.

மலையகத்தின் சனத்தொகை எண்பலுக்கேற்ப கிராமசேவகர் பிரிவுகள் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையானது 1996 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே வலியுறுத்தப்பட்டு வந்தன. அதன்பின்னர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் மலையக அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் பல கட்ட பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன.

இவ்வாறு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து மலையகத்தின் அரசியல் கட்சி உறுப்பினர்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என இந்த விடயத்தில் அக்கறை செலுத்தியதுடன் தனியாக ஆலோசனைகளை நடத்தி மலையகத்தில் புதிய கிராம சேவர் பிரிவுகளை அமைப்பது தொடர்பிலான சிபாரிசினை முன்வைத்தனர்.

மலையகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 350 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு என்ற அடிப்படையிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மலையகத்திலோ, 3 ஆயிரம் தொடக்கம் 5ஆயிரம் வரையிலான குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் பிரிவு என்ற நிலைப்பாடே காணப்படுகிறது. ஆகையால் அதனை குறைந்தது 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் என்ற அடிப்படையிலாவது மாற்றவேண்டும் என்ற சிபாரிசு முன்வைக்கப்பட்டது.

இவ்வாறு மலையகத்தில் புதிய கிராமசேவகர் பிரிவுகளை அமைப்பது தொடர்பிலான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன் முதற்கட்டமாக நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுக்கான மாதிரி வரைபினையும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

> ***மலையகத்தில் புதிய கிராமசேவகர் பிரிவுகள் அமைக்கப்படுகின்ற போது தோட்டங்கள் என்ற நிலை மாறி அது கிராமசேவகர் பிரிவுகளாக மாற்றம் பெறும். அத்தோடு அது புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.***
>
> ***புதிய கிராமசேவகர் பிரிவுகளை அமைக்கின்ற போது மலையகத்தில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கப்பெறும். அதனூடாக மலையகச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அது ஒரு உந்துசக்தியாகவும் அமையும். அரச சேவையில் மலையகத் தமிழர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது மிகவும் குறைவானதாகவே உள்ளது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன்மூலம் அதனை ஓரளவாயினும் அடையமுடியும்.***

அந்தச் சந்தர்ப்பத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க மலையகப் புத்திஜீவிகள் சமர்ப்பித்த சிபாரிசினை பெற்றுக்கொண்டதுடன் அதில் சில மாற்றங்களை மேற்கொண்டு இந்த விசயம் தொடர்பாக அவர்களுடைய விளக்கத்தையும் கூறினார். அதனடிப்படையில் பெருந்தோட்ட குடியிருப்புக்கள் நெருக்கமாக இருப்பதால் 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு அமைக்கப்படுவது சாத்தியமில்லை எனக் கூறப்பட்டது.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கூறியதையடுத்து குறைந்தது 1000 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் பிரிவு என்ற அடிப்படையிலாவது உருவாக்க வேண்டும் என மலையக அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் வலியுறுத்தினர். அதனடிப்படையில் 1000 தொடக்கம் 1500 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவகர் பிரிவு என்ற அடிப்படையில் அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதனடிப்படையில் 1999 ஆம் ஆண்டு நுவரெலியாவில் 63 புதிய கிராமசேவகர் பிரிவுகளும் பதுளையில் 38 கிராமசேவகர் பிரிவுகளும் அமைக்கப்பட்டன.

இதன்விளைவாக, அதிகமான தமிழர்கள் கிராமசேவகர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் மலையகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறு புதிய கிராமசேவகர்கள் பிரிவுகளை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், அதில் கூடுதல் அக்கறை காட்டப்படவில்லை. எனவே அந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

இந்த அரசாங்கம் இலகுவில் தமிழர்களுக்கோ அல்லது தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கோ நல்ல விடயங்களை செய்யப்போவதில்லை. எனவே தமிழர்கள்தான் மீண்டும் மீண்டும் நச்சரித்து தமது உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இல்லையேல் ஒருபோதும் அது சாத்தியப்படப்போவதில்லை.

எனவே, மலையகத்தின் சனத்தொகைகளுக்கேற்ப கிராமசேவகர் பிரிவுகளை அமைப்பது தொடர்பிலான திட்டத்தை கைவிடாமல் அதனை மலையகத்தின் சகல பகுதிகளுக்கும் விரிவுப்படுத்துவதற்கான முயற்சிகளை மலையக அரசியல் தலைவர்கள் முன்னெடுக்கவேண்டும்.

தனிப்பட்ட அரசியல் விருப்பு வெறுப்புகளை மறந்து சமூக நலன் கருதி இந்த விடயத்தில் ஒருமித்து செயற்படவேண்டும்.

மலையகத்தில் புதிய கிராம சேவகர் பிரிவுகள் அமைக்கப் படுகின்றபோது தோட்டங்கள் என்ற நிலை மாறி அது கிராம சேவகர் பிரிவுகளாக மாற்றம் பெறும். அத்தோடு அது புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.

புதிய கிராமசேவகர் பிரிவுகளை அமைக்கின்றபோது மலையகத்தில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கப்பெறும். அதனூடாக மலையகச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அது ஒரு உந்துசக்தியாகவும் அமையும்.

அரசசேவையில் மலையகத் தமிழர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது மிகவும் குறைவானதாகவே உள்ளது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன்மூலம் அதனை ஓரளவாயினும் அடைய முடியும்.

இது ஒருபுறமிருக்க தற்போதைய தேர்தல் முறையில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. எனவே அவ்வாறான தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இந்த கிராம சேவகர் பிரிவு அதில் பாரிய செல்வாக்கு செலுத்தும். எனவே இந்த விடயத்தில் மலையக அரசியல் தலைவர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

---

**அளவெட்டி, ப. உதயகுமார்**

# எத்தனை காலந்தான் ஏமாற்றுவர் இந்த நாட்டிலே...

நடைபெற்றுமுடிந்த தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிகளை குவித்துக்கொண்டது. இதன்மூலம் பிரதேச சபைகளும், மாகாண சபைகளும் இவர்கள் வசமாகியது. இந்தச் சபைகளினால் எங்களின் வாழ்வு விடியும் என்று நம்பி வாக்குப்போட்டு ஏமாந்துபோனவர்கள் ஏமாந்துகொண்டிருப்பவர்கள் மக்கள்தான்.

மக்களை நம்பி போட்டியிட்டு பெரு வெற்றி பெற்றுவிட்ட தமிழ்த் தலைமைகள் இப்போது வேறு, வேறு பாதைகளில், பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உண்மையை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள்: "எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்கள் இந்த நாட்டிலே" என்று எண்ணவும் தொடங்கிவிட்டார்கள்: உங்களுக்கு வாக்குப்போட்டு பாராளு மன்றம் அனுப்பியது நீங்கள் சுகபோக வாழ்க்கை வாழவா??, எங்களைப் பற்றி சிந்தித்தீர்களா??, அடுத்த முறை எங்களிடம் ஓட்டுக்கேட்டு வருவீர்களா?? என்று யாழ். பொதுநூலக வாசலில் வைத்து தலைவர் சம்பந்தனின் சட்டையைப்பிடித்து கேள்வி கேட்கவும் மக்கள் துணிந்து விட்டார்கள்: இந்தத் தமிழ் தலைமைகள் பிழைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு தேர்தல் காலங்களில் மட்டும் வந்து தலைகாட்டுவோரின் கபட நாடகத்தை, நயவஞ்சகத்தை இனிமேலும் மக்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதே நிதர்சனமாகும்.

உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்றவர்கள், வெட்டிப்புடுங்குவோம் என்று வீராப்பு பேசினார்கள். இன்று தேசியக் கூட்டமைப்புவசமுள்ள எத்தனையோ பிரதேச சபைகள் தட்டுத் தடுமாறித் தடம் புரண்டுகொண்டிருக்கின்றன. ஆளும் தரப்புக்குள்ளேயே அடிதடிகள், சபைகளை நடாத்தமுடியாமல் தவிசாளர்களே இராஜினாமாச் செய்துகொள்கின்றனர்.

சபை உறுப்பினர்களில் பலர் தமிழ் மக்களுக்கு உதவி செய்யமுடியாத சபைகளில் இருந்து என்ன பயன்?? என்று கேட்டு வேறு கட்சிகளில் சேர்ந்துள்ளனர். வருடந்தோறும் வெளியிடப்படும் வரவு செலவுத் திட்ட வரைவுகளையே நிறைவேற்ற முடியாத அளவுக்கு இழுபறிகள் தொடர்கின்றது.

பிரதேச சபைகளால் உள்ளூர் மட்டச் செயற்பாடுகளை மட்டுமே செய்யமுடியும். ஆனால், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆளுக்கொரு திசையில் பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடுவதிலும் சாதனை புரிகின்றார்கள். ஒரு விடயத்தை அறிக்கையாக்கும் போது அதன் விளைவுகள், மற்றும் சட்ட விதிகளுக்கு உட்பட்டதா?? என்றெல்லாம் ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

ஆனால் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அவ்வாறு செய்வதில்லை. மாகாண சபை தேர்தல் முடிவுற்ற கையோடு ஒரு பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் மாவீரர் துயிலும் இல்லங்களை புனரமைப்புச் செய்யவேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்தார். இதுவரை காலமும் எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்காமல் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு இப்போது நடந்தது என்ன? "சும்மா கிடந்த சங்கினை ஊதிக் கெடுத்த நிலை" தான் இது.

இது இவ்வாறிருக்க வலிகாமம் பகுதியில் (வலி தென்மேற்கு பிரதேச சபை) உள்ள பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் மோதல் உச்சமடைந்து கட்சியின் உயர்பீடம் வரை விடயம் சென்றிருக்கிறது. தேர்தல் கால தேர்தல் விஞ்ஞாபனங்களில் நாம் அது செய்வோம், இது செய்வோம் சந்திர மண்டலத்தில் குடியிருக்க இடம்பெற்றுத் தருவோம் என்றெல்லாம் புழுகுமூட்டைகளை அவுட்டுவிட்டு பதவிக்கு வந்தவர்கள் இன்று சபைகளை நடாத்தமுடியாமல் தடுமாறுகின்றார்கள். மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்துகொண்டார்களா? இல்லையே... நிலைமை இப்படியே போனால் சபைகளை மத்திய அரசு கலைத்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

யானை தன் தலையிலே மண் அள்ளிப் போட்ட கதையாகியது நம்பிய மக்களின் கதை. சரி பதவிக்கும் வந்து மந்திரி பதவிஉகளையும் எடுத்துவிட்டார்கள். இனியாவது இவர்களின் செயற்பாடுகள் மக்களுக்காக அமையுமா? என்றால் அதுவும் இல்லை.

தமிழர்களுக்கு விடிவுகாலம் மாகாண சபையுடன் வருமென்று நம்பி ஓட்டுப் போட்டவர்கள்தான் பாவங்கள். இப்போதுள்ள சூழ்நிலையில் இந்த மாகாண சபை மூலமாக சிங்கள மக்களினதும் மத்திய அரசினதும் நல்லெண்ணங்களைப் பெற்று எமது பிரச்சினையை தீர்த்துக் கொள்வதே சிறந்த வழி. இதைவிடுத்து, பிரச்சினைகள் எங்கோ இருக்க இவர்கள் குழப்பங்களை உருவாக்கி தமிழர் பிரச்சினையை தீர்க்கவிடாமல் காலங்களை கடத்தப் போகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. வடக்கு மாகாண சபைக்கு அதிகளவான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றினை பயன்படுத்தி அவலப்பட்டுக் கொண்டிருக்கும் எங்கள் மக்களுக்கு என்ன செய்யலாம் என்பதை யோசியுங்கள்.

இழந்து நிற்கும் உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று சிந்தியுங்கள். பிரிந்துசென்றுள்ள மாகாணங்களை எவ்வாறு சேர்க்கலாம் என்றுகூடி ஆராயுங்கள். அதற்கான வழிவகைகளை கண்டு பிடியுங்கள். மீள்குடியேற்றம், கைது செய்யப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வைக்காண முயற்சியுங்கள்.

நீண்டகாலம் சிறையிருப்போரை மீட்டெடுக்க வழிதேடுங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சபையாக மாற்றுங்கள். இதையெல்லாம் மறந்துவிட்டு நீங்கள் செயற்படுவீர்களானால் கடவுள்கூட உங்களை மன்னிக்கமாட்டான் என்றால் தமிழர்கள்...!

# தேவயானி விவகாரத்தில் அமெரிக்கா - இந்தியா இராஜதந்திர மோதல்!

தொகுப்பு: வேணு கிருஷ்ணா

தேவயானி கோப்ரகாடே, 39, என்ற பெண், ஐ.எப்.எஸ்., அதிகாரி, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள, இந்திய தூதரகத்தில், துணை தூதராகப் பணியாற்றுகிறார். இவரது வீட்டு வேலைக்கார பெண்ணுக்கு, 'விசா' பெறுவதற்காக, மோசடியான, சில சான்றிதழ்களை வழங்கினார் என, தேவயானிமீது அமெரிக்கா குற்றம் சாட்டியது. கடந்த வாரம், தன் குழந்தையை பள்ளியில் விடுவதற்காக, தேவயானி காரில் சென்றபோது, நடுரோட்டில், அமெரிக்க பொலிசாரால் கைது செய்யப்பட்டார். கை விலங்கிடப்பட்ட தேவயானி, சிறையில் அடைக்கப்பட்டார்.

முன்னதாக, அவர் உடைகளை களைந்து, சோதனை செய்த பொலிசார், அவரை, பயங்கர குற்றவாளிகள் அடைக்கப்படும் சிறையில் அடைத்து விசாரணை நடத்தியுள்ளனர். அதன்பிறகு, 1.5 கோடி ரூபாய் செலுத்தியபின், ஜாமினில், தேவயானி விடுதலை செய்யப்பட்டார். "தேவயானியை அவமானப்படுத்தியதற்காக, அமெரிக்கா மன்னிப்புக் கேட்கவேண்டும் அமெரிக்காவுக்கு எதிராக, தீர்மானம் கொண்டுவர வேண்டும்" என, பாராளுமன்றில், பல எம்.பி.க்கள் கோரினர். தேவயானியை நடத்தியவிதம் குறித்து, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர், ஜோன் கெர்ரி, வருத்தம் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, தேவயானியை கௌரவிக்கும்பொருட்டு, இந்திய மத்திய அரசு, அவரை ஐ.நா. பிரதிநிதியாக பதவி உயர்வு அளித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி, மேரி ஹேரர்ப் கூறியதாவது: விசா மோசடி மற்றும் வேலைக்காரப் பெண்ணை கொடுமைப்படுத்தியது போன்ற வழக்குகளில், தீவிரமாக நடவடிக்கை எடுப்போம். ஏனவே, தேவயானிக்கு மன்னிப்பு கொடுப்பதோ, அவர் மீதான வழக்குகளை வாபஸ் பெறவோ முடியாது. அவர், ஐ.நா. பிரதிநிதியாக சென்றாலும், அவர்மீதான வழக்குத் தொடரும். உண்மைநிலை தெரியாமல், இந்திய தரப்பில் கூறப்படும் புகார்களுக்கு, நாங்கள் செவிசாய்க்க முடியாது. தேவயானி, தன்வீட்டில் வேலை செய்த சங்கீதாவை கொடுமைப்படுத்திய வழக்குத்தொடர்பாக, இந்தியாவிடம் சில விவரங்களை கேட்டுள்ளோம். சங்கீதாவை மீண்டும் அவர் குடும்பத்துடன் சேர்ப்பதற்காகத்தான், அவர்களை, அமெரிக்காவுக்கு அழைத்துவந்தோம். இவ்வாறு, அவர் கூறினார்.

நியூயோர்க்கில் உள்ள, சங்கீதாவின் உறவினர்கள் கூறியதாவது: சங்கீதாவின் கணவர் பிலிப், குழந்தையுடன் சைக்கிளில் சென்றபோது, அடையாளம் தெரியாத நபர், துப்பாக்கியை காட்டிமிரட்டி, சங்கீதாவை, இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்படி மிரட்டியுள்ளார். தேவயானியின் தந்தையும், பிலிப்பை, தொலைபேசியில் மிரட்டியுள்ளார். பிலிப், இந்தியா சென்றபோது டில்லி பொலிசார், அவரிடம், சங்கீதாவின் இருப்பிடம் குறித்து விசாரித்துள்ளனர். இவ்வாறு, சங்கீதாவின் உறவினர்கள் கூறினர்.

அவரின் கண்ணியத்தையும், மாண்பையும் மீட்டளிக்காமல், மீண்டும் நான் இந்த சபையில் கால் வைக்கமாட்டேன்.

### தேவயானி விவகாரம், இந்திய பாராளுமன்றத்தில் பலத்த விவாதத்தை ஏற்படுத்தியது

எம்.பி.க்களின் கண்டனத்திற்கு பதிலளித்து பேசிய, வெளியுறவுத்துறை அமைச்சர், சல்மான் குர்ஷித், "தேவயானியை இந்தியா கொண்டுவராமல், அமெரிக்காவில் இழந்த, அவரின் கண்ணியத்தையும், மாண்பையும் மீட்டளிக்காமல், மீண்டும் நான் இந்த சபையில் கால் வைக்கமாட்டேன்" என, உறுதியளித்தார்.

'விசா' முறைகேடு புகார் தொடர்பாக, நியூயோர்க்கில், நடுரோட்டில் கைது செய்யப்பட்ட, இந்திய துணைத் தூதர், தேவயானி, 39, சாதாரண, 'கிரிமினல்' போல் நடத்தப்பட்டார். இதற்கு, மத்திய அரசு, கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. நாட்டில் உள்ள, அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுவரும் சலுகைகள் பல, கடந்த வாரம் விலக்கிக் கொள்ளப்பட்டன.

அமெரிக்காவில், இந்திய தூதரகத்தில் பணியாற்றும், பெண் அதிகாரி தேவயானியை, அந்த நாட்டு பொலிசார் கைதுசெய்து, அவமதித்த சம்பவம், இந்தியா முழுவதும், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு கண்டனம் தெரிவிக்கும்வகையில், மாணவர்கள் மற்றும் சமூகநல அமைப்புகளை சேர்ந்தவர்கள், டில்லியில் உள்ள, அமெரிக்க தூதரகம்முன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### ஆடைகளைக் களைந்து சோதனை

தூதரக பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்து, நீதிமன்றத்தின் நேரடி ஆணைகளை ஏற்றுச் செயற்படும் (மார்ஷல்) பொலிஸ் பிரிவிடம் ஒப்படைத்தனர். இந்நிலையில் காவல் நிலையத்துக்கு தேவயானியை அழைத்துச்சென்ற பொலிஸார், அவர் அணிந்திருந்த உடையை அகற்றி சோதனை செய்துள்ளனர். நீதிமன்றத்துக்கு அழைத்துச்செல்லும் முன்பு, போதைமருந்து வழக்கில் கைதுசெய்யப்பட்டோருடன் தேவயானியை தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

இதுதொடர்பாக அமெரிக்க மார்ஷல் பொலிஸ் பிரிவு (யு.எஸ்.எம்.எஸ்.) செய்தித் தொடர்பாளர் நிக்கி கிரெடிக் பரெட் கூறுகையில், "எங்கள் பொலிஸ் பிரிவின் சார்பில் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளின்போது பின்பற்றப்படும் நடைமுறைகளின்படிதான் தேவயானி கைதுசெய்யப்பட்டார். அவரின் ஆடையை அகற்றி சோதனைசெய்தது உண்மைதான். கைது செய்யப்பட்டவரிடம் இதுபோன்று சோதனை நடத்துவது எங்களின் வழிகாட்டு நெறிமுறையில் உள்ளது. நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படவிருந்த மற்றப் பெண் கைதிகளுடன் ஒரே அறையில் தேவயானியை அடைத்து வைத்திருந்தோம். அதுவும் விதிமுறையின் படியான நடவடிக்கைதான்." என்றார்.

### சட்டப் பாதுகாப்பு உள்ளது

இந்த விவகாரம் குறித்து தேவயானியின் வழக்கறிஞர் டேனியல் என்.அர்சாக் கூறுகையில், "துணைத் தூதர் என்ற அடிப்படையில், தேவயானிக்கு தூதரகரீதியாக சட்டப் பாதுகாப்பு உள்ளது. தூதரக அதிகாரியை கைது செய்யும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை மார்ல் பொலிஸார் கடைப்பிடிக்கவில்லை."

### 'கதறி அழுதும் விடவில்லை' - தேவயானி அனுப்பிய ஈ.மெயில்

நியூயோர்க் பொலிஸாரின் அத்துமீறிய கைது மற்றும் விசாரணை நடவடிக்கையின் போது நான் பலமுறை கதறி அழுதேன் என தேவயானி கூறியுள்ளார்.

இதுகுறித்து தேவயானி டெல்லியில் உள்ள வெளியுறவுத் துறை அலுவலகத்துக்கு அனுப்பியுள்ள இமெயில் கடிதத்தில், "துணைத் தூதர் என்ற அடிப்படையில், எனக்கு தூதரக ரீதியிலான பாதுகாப்பு உள்ளதை, கைது செய்த அதிகாரிகளிடம் நான் பலமுறை எடுத்துக்கூறினேன்.

என்றாலும் அவர்கள் தொடர்ந்து என்னை பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தினார்கள். மீண்டும் மீண்டும் கை விலங்கிட்டனர். ஆடைகளைக் களைந்தனர். உடலின் அந்தரங்க பகுதிகளிலும் சோதனையிட்டனர். டி.என்.ஏ சோதனைக்காக மாதிரி எடுத்தனர். கிரிமினல்களுடனும், போதைப் பொருள் கடத்தல்காரர்களுடனும் என்னை அடைத்துவைத்தனர். நான் மனமுடைந்து பலமுறை கதறி அழுதும் விடவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

### தேவயானி மீதான வழக்கை கைவிட இந்தியா வலியுறுத்தல்

அமெரிக்காவில் தேவயானி கோப்ராகடே மீது தொடுக்கப்பட்ட வழக்கை நிபந்தனை எதுவும் இல்லாமல் உடனடியாக கைவிட இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், அமெரிக்காவிடம் கைது நடவடிக்கை குறித்து தெளிவான விவரங்களை கோரியுள்ளதாகவும், தேவயானிமீது போடப்பட்ட வழக்கை திரும்பப்பெறவும், எந்தவித நிபந்தனையும் இல்லாமல் வழக்கை உடனடியாக கைவிடவும் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் கூறினார்.

### பா.ஜ.க., இடதுசாரிகளும் கண்டனம்

இந்நிலையில் கைது நடவடிக்கை அமெரிக்க சட்டவிதிப்படி நடைபெற்றதாகவும், கைது செய்யப்படும்போது, இதுபோன்ற கைதுகளில் பின்பற்றப்படும் வழக்கமான செயல்முறையே பின்பற்றப்பட்டது என்வும் அமெரிக்க அரசின் வழக்கறிஞர் ப்ரீத் பராரா விடுத்துள்ள அறிக்கைக்கு பா.ஜ.க., கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தேவயானிமீது புகார்கொடுத்த பணிப்பெண் சங்கீதா ரிச்சர்ட்ஸ், காணாமல் போனது தொடர்பாக இந்தியத் தூதரகம் கொடுத்த பல புகார்கள் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்கவில்லை என்று இந்தியத் தூதரகம் குற்றம் சாட்டியிருக்கிறது.

தேவயானி, தனது பணிப்பெண்ணாக வேலை செய்ய இந்தியாவில் இருந்து அழைத்துவந்த சங்கீதா ரிச்சர்ட்ஸ் என்ற பெண் ஜூன் மாதம் 23ம் திகதியிலிருந்தே காணாமல் போய்விட்டார். இதுகுறித்து உடனடியாக நியூயோர்க்கில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள் அலுவலகத்துக்கும், நியூயோர்க் போலிசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

### சங்கீதாவை இந்தியாவுக்கு திருப்பியனுப்ப கோரிக்கை

சங்கீதா ரிச்சர்ட்ஸின் பாஸ்போர்ட் ஜூலை 8ஆம் திகதியிலிருந்து ரத்து செய்யப்பட்ட நிலையில் அவர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதால், அவரை அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு திரும்பி அனுப்ப அமெரிக்கா உதவவேண்டும்.

தேவயானி கோபர்கடேயின் வீட்டிலிருந்து ரொக்கப் பணம், மொபைல் தொலைபேசி மற்றும் ஆவணங்களை எடுத்துச்சென்றுவிட்டதால், அவரைக் கைது செய்ய உதவவேண்டும் என்று இந்திய தூதரகம் கூறியிருக்கிறது.

இதுதவிர, சங்கீதா ரிச்சர்ட்ஸ் தொடர்பாக இந்தியாவில் டில்லி உயர்நீதிமன்றம், கோபர்கடேவுக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் இந்தியாவுக்கு வெளியே எடுக்கக்கூடாது என்று செப்டம்பரில் அளித்த உத்தரவை அமுல்படுத்தவும் அமெரிக்கா உதவவேண்டும் என்று இந்திய தரப்பில் கோரப்பட்டது என்று இந்தியத் தூதரகம் கூறியிருக்கிறது.

நவம்பர் 19ம் திகதி டில்லி மெட்ரோபாலிட்டன் நீதிபதி, சங்கீதா ரிச்சர்ட்ஸைக் கைது செய்யப் பிறப்பித்த ஜாமீன் பெறமுடியாத வாரண்டை, டிசெம்பர் மாதத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு இந்திய அதிகாரிகள் அனுப்பினர் என்று கூறும் இந்தியத் தூதரகம், இந்த கடிதங்கள் எவற்றுக்கும் அமெரிக்கத் தரப்பிடமிருந்து பதில் இல்லை என்றும் கூறியிருக்கிறது.

### ஐ.நா. இந்திய தூதரகத்தில் பணி அமர்த்தப்பட்டாலும் தேவயானிக்கு சிறப்பு சலுகைகள் கிடைப்பதில் சிக்கல்?

ஐ.நா. இந்திய தூதரகத்தில் பணி அமர்த்தப்பட்டாலும், தேவயானிக்கு சிறப்பு சலுகைகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 'வியன்னா உடன்படிக்கை'யின்படி, தூதரகப்பணியில் உள்ள தேவயானிக்கு விலக்குரிமை உள்ளிட்ட சலுகைகளை தரமுடியாது என அமெரிக்கா அறிவித்தது: இதையடுத்து அவரை ஐ.நா. தூதரகத்தில் கவுன்சலராக நியமித்து, இந்தியா கடந்த சில தினங்களுக்கு முன் அறிவிப்பு வெளியிட்டது. இதன்மூலம் அவருக்கு விலக்குரிமை உள்ளிட்ட சிறப்பு சலுகைகள் கிடைக்கும் என எதிர்பார்ப்பு உருவானது.

இந்த நிலையில், தேவயானியின் பணி நியமனம் தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூனுக்கு இந்தியா முறைப்படி கடிதம் எழுதி உள்ளது. இந்தக் கடிதத்தை இந்தியாவின் சார்பில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் அசோக் முகர்ஜி எழுதி உள்ளார். அத்துடன், தேவயானி தொடர்பான ஆவணங்கள், பாஸ்போர்ட்டு விவரங்களையும் அவர் அனுப்பி வைத்தார்.


இது தொடர்பாக அவர் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அதில் அவர் கூறியதாவது:-

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூனுக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளேன். அதில் எங்கள் தூதரகக்குழுவில் ஆலோசகராக தேவயானி கோப்ரகடே நியமனம் செய்யப்பட்டிருப்பது பற்றியும், அவருக்கு தூதரக அதிகாரிக்குரிய அனைத்து சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்பது குறித்தும் எழுதி



விசா மோசடி மற்றும் வேலைக்கார பெண்ணை கொடுமைப்படுத்தியது போன்ற வழக்குகளில், தீவிரமாக நடவழக்கை எடுப்போம். எனவே, தேவயானிக்கு மன்னிப்பு கொடுப்பதோ, அவர் மீதான வழக்குகளை வாபஸ் பெறவோ முடியாது. அவர், ஐ.நா. பிரதிநிதியாக சென்றாலும், அவர் மீதான வழக்கு தொடரும். உண்மைநிலை தெரியாமல், இந்திய தரப்பில் கூறப்படும் புகார்களுக்கு, நாங்கள் செவிசாய்க்க முடியாது. தேவயானி, தன் வீட்டில் வேலைசெய்த சங்கீதாவை கொடுமைப்படுத்திய வழக்கு தொடர்பாக, இந்தியாவிடம் சில விவரங்களை கேட்டுள்ளோம். சங்கீதாவை மீண்டும் அவர் குடும்பத்துடன் சேர்ப்பதற்காகத்தான், அவர்களை, அமெரிக்காவுக்கு அழைத்துவந்தோம்.

# பின்னப்படும் மாயவலைகள்!




**எந்த** ஒரு புதிய தொழில்நுட்பம் வந்தாலும் அதை முதலில் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்பவர்கள் கெடு மதி படைத்தவர்கள்தான். அவர்களது கிரிமினல் மூளைதான் அந்தத் தொழில் நுட்பத்தின் சாத்தியக்கூறுகளை முழுவதுமாக ஆராய்ந்து முதலில் புரிந்து கொள்ளும். இணையமும் சமூக வலைத்தளங்களும் இதற்கு விதி விலக்கல்ல.

உதாரணமாக, நைஜீரிய ஏமாற்றுவித்தைகளை குறிப்பிடவேண்டும். ஏதோ ஓர் ஆபிரிக்க நாட்டின் சர்வாதிகாரி பல நூறு மில்லியன் டொலர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும், அதைக் கைப்பற்ற உங்கள் உதவி தேவைப்படுகிறது என்றும், அந்த சர்வாதிகாரியின் துணைவி அன்புடன் உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருப்பார். ஒரே ஒரு சின்ன பிரச்சினை. முதலில் நீங்கள் கொஞ்சம் பணத்தை ஒரு குறிப்பிட்ட வங்கி எண்ணுக்கு அனுப்பவேண்டும். பல நூறு மில்லியன் டொலரில் நம் பங்கு கணிசமாக வரும்போது கொஞ்சம் பணத்தைப் பற்றி ஏன் கவலைப்படுவானேன் என்று சிலர் பணத்தை அனுப்பியும்விடுவார்கள். இப்படித் தொடங்கி இன்னும் பல நூறு ஏமாற்று வித்தைகள் இணையத்தில் உலாவருகின்றன.

மற்றொரு பக்கம், இணையத் தேடு பொறிகள் சர்வசக்தி வாய்ந்தவையாக ஆனபோது, கூகுளில் நீங்கள் ஒரு விஷயத்தைத் தேடும்போது ஒரு இலட்சம் சுட்டிகள் கிடைக்கும். ஆனால், முதலில்வரும் சில சுட்டிகளைத்தாண்டி நீங்கள் போகமாட்டீர்கள். எப்படி முதல் சில சுட்டிகளில் ஒன்றாக நாம் வருவது என்ற நோக்கில் பலரும் தத்தம் இணையப் பக்கங்களில் சிறுசிறு மாற்றங்களைச் செய்யத்தொடங்கினர். இதைத் தடுக்கும்நோக்கில் கூகுள் போன்றோர் தங்கள் தேடுதல் அல்காரிதத்தில் பல மாற்றங்களைச்செய்து, உண்மையிலேயே உபயோகமான தளங்கள் மட்டும் முதலில் வருமாறு பார்த்துக்கொண்டனர். ஆனாலும் இந்தத் திருடன் - பொலிஸ் விளையாட்டு இன்னும் தொடர்ந்து நடக்கிறது.

இதுபோன்ற தகிடுதத்தங்கள் ஒருபுறம் இருக்க, இப்போது சமூக வலைத்தளங்கள் குறித்து வெளியே கசியும் சில செய்திகள், இணைய ஊடகவெளிமீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கும்வண்ணம் உள்ளன.

ட்விட்டர், பேஸ்புக் போன்ற தளங்களை சாதாரண மக்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லும் களமாகவும் நண்பர்களுடன் உரையாடும் இடமாகவும் வைத்திருக்கின்றனர். இது ஒருவிதத்தில் மக்களாட்சி முறைக்கு வலுச்சேர்க்கும் விதமாகவும் உள்ளது. ஆனால் பல அரசியல்வாதிகளும் தொழில் நிறுவனங்களும் இவற்றை வேறு கண்களுடன் பார்க்கின்றனர். அரசியல், தொழில்போட்டிகளைச் சமாளிக்கவும் எதிரிகளை ஒழிக்கக் காய்நகர்த்தவும் இணையத்தைப் பயன்படுத்த இவர்கள் முன்வந்துள்ளதாகத் தெரிகிறது. இவர்களுக்கு உதவுவதற்கு என்றே பல இணைய மார்க்கெட்டிங் நிறுவனங்களும் முளைத்துள்ளன.

அதுமட்டுமா, நிழல் உலக தாதா ஒருவரைச் சந்தித்து "என் தொழில்முறை எதிரியுடைய போட்டோவும் முகவரியும் இவைதான். இவரைப் போட்டுத்தள்ளிவிடு, இந்தா பணம்" என்று ஒருவர் சொல்வதைப்போல, ஒரு தொழிலதிபர் ஓர் இணைய மார்க்கெட்டிங் ஏஜென்சியை அணுகி பிசினஸ் பேசலாம். பணம் கை-மாறும். அந்த இணைய மார்க்கெட்டிங் ஏஜென்சி, அந்தக் குறிப்பிட்ட தொழிலதி-பருடைய நிறுவனத்தின் ட்விட்டர் எக்கவுண்ட்டை ஒரே நாளில் சில ஆயிரம் மாயக்கணக்குகள் பின்பற்றுமாறு செய்வார்கள். அவர்களுடைய ஃபேஸ்புக் பக்கத்தில்வரும் தகவல்களுக்கெல்லாம் சில மாயக்கணக்குகள் பொய் லைக்குகள் போட்டுக்கொண்டே இருக்கும்.

அதோடு விடமாட்டார்கள். எதிரி நிறுவனம் பற்றிப் பொய் வதந்திகளைப் பரப்பும் ஓர் இணையத்தளம் இரவோடு இரவாகத் தோன்றும். ஊர் பேர் போடாமல் தெருவில் ஒட்டப்படும் கண்டன போஸ்டர் போல அல்லது அலுவலகத்துக்கு வரும் மொட்டைக் கடுதாசிபோல. பின்னர், மாயக் கணக்குகள் இந்தப் பொய்த்தகவல்களை ட்விட்டரிலும் பேஸ்புக்கிலும் பரப்பும். எல்லாவற்றுக்கும் ஒரு குறிப்பிட்ட விலை உண்டு.

இந்தத் தகவல்களை உண்மை என்று நம்பும் உண்மையான பலரும்கூட இவற்றை பேஸ்புக்கில் லைக் செய்து, ட்விட்டரில் ரீட்வீட் செய்து மேலும் மேலும் பரப்புவார்கள். மின்னஞ்சல்மூலம் பல்லாயிரம் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

இன்று, ஓர் அரசியல்வாதியின் பிம்பத்தைக் கட்டியெழுப்புவது முதல், ஒரு முழு அரசியல் பிரசாரத்தையுமே இணையத்தின் மெய்நிகர் உலகில் செய்துவிட முடியும். அந்த அரசியல்வாதிக்கென்று ஓர் இணையத்தளத்தையும் ட்விட்டர், பேஸ்புக் கணக்குகளையும் தொடங்குவதிலிருந்து இந்தப் பிரசாரம் ஆரம்பிக்கும். பின்னிருந்து இயக்கும் மார்க்கெட்டிங் ஏஜென்சியின் உதவியால் அரசியல்வாதியின் இணைய பிம்பம் வலுவாகிக்கொண்டே போகும். அவர் அனைத்தைப் பற்றியும் கருத்து சொல்வார். அறிக்கைகள் விடுவார். அவரது எதிரிகள் குறித்து இணையத்தில் வம்பும் வதந்தியும் பெருகும். இதன் நீட்சியாக அவர் தேர்தலில் ஜெயித்தாலும் ஜெயிக்கலாம்.

இவற்றையெல்லாம் புலன்விசாரித்து, உண்மையைக் கண்டுபிடிப்பது சாத்தியமே. ஆனால் நேரம் ஆகும். அந்த நேரத்தில் தேர்தலே நடந்து முடிந்துவிடலாம்.

கெடுமதியாளர்கள் கையில் சிக்கிச் சின்னாபின்னமாகும் சமூக வலைத் தளங்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட நேரிடும். ஒரு கட்டத்தில் யார் உண்மை பேசுகிறார்கள், யார் பொய் பேசுகிறார்கள் என்பதே தெரியாமல் போய்விடும்.

நிஜ வாழ்க்கையில்கூட எதை நம்பலாம் என்ற தெளிவு நம்மிடம் ஓரளவுக்கு இருக்கிறது. ஆனால், இணைய வாழ்க்கையில் எதை நம்புவது என்று தெரியாமல் தடுமாறும் நிலையை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கிறோம். பயன்படுத்துவதற்கு எளிமையாக உள்ள இணையம், சாதாரண மக்களைவிட கிரிமினல் எண்ணம் கொண்டவர்களுக்குச் சாதகமாக ஆகிவிடுமோ என்ற அச்சம் எழுகிறது!?






# பாப்பா முரசு

## பகைமை உணர்வும் பழிவாங்கும் குணமும்

ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்தி கொண்டிருக்கும்போது மாணவர்களிடம் இந்த கேள்வியை கேட்டார்.

"மன்னிக்க முடியாத கோபம் யார் மீதேனும் இருக்கிறதா உங்களுக்கு? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழிவாங்கத் துடிக்கிறீர்களா, நீங்கள்?" மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியர்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'ஆம்... சேர்' என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு, ஒவ்வொருவராக அழைத்து "மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?" என்று கேட்டார்.



ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள். மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரியவைக்க நினைத்தார். ஒவ்வொரிடமும் ஒரு பையை கொடுத்தார். வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டுவரப்பட்டது. யார்மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளை தாங்கள் பையில் எடுத்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்த தக்காளி பையை எப்போதும் உனக் கூடவே இருக்கவேண்டும், தூங்கும்போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். ஒன்றும் அறியாமல் தலையை ஆட்டினார்கள் மாணவர்கள்.

ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். ஒரு கட்டத்தில்... ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

மெல்லப் புன்னகைத்த ஆசிரியை, "நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழிவாங்கும் குணமும் மனதுக்குள் அழுகிநாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகை - பழியை மறந்து மன்னித்துவிடுவதாக இருந்தால், தக்காளி பையை தூக்கி எறியுங்கள்" என்றார்! அப்போதுதான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது.

அப்போதே தக்காளி பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள், பகைமறந்து ஒருவரையெ-ாருவர் ஆரத் தழுவிக்கொண்டு வகுப்பறைக்குத் திரும்பினர்.

நாம் ஒவ்வொருவரும் இப்படி பழிவாங்கும் எண்ணத்தோடு காத்திருக்கிறோம். தக்காளி பை நாற்றத்தோடு பகைமை மறப்போம். பகுத்தறிவோடு பயில்வோம்.

## வாரம் ஒரு திருக்குறள்

கள்ளுண்ணாமை

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.



நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப்படும் விரும்பத் தகாத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிராக நிற்காமல் செல்வாள்.

குறள்:924

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## பன்னிரண்டு!

- 12 ஒரு மகாமகம் என்பது 12 ஆண்டுகள்.
- 12 ஓர் ஆண்டுக்கு 12 மாதங்கள்.
- 12 ஒரு டஜனுக்கு 12 உருப்படிகள்.
- 12 ஓர் அடிக்கு 12 அங்குலங்கள்.
- 12 ஒரு கலம் என்பது 12 மரக்கால் அளவு.
- 12 தமிழில் உயிர் எழுத்துகள் 12.
- 12 தமிழில் தொகுக்கப் பெற்ற திருமுறைகள் 12.
- 12 குறிஞ்சிப் பூ 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்.
- 12 ஏசுநாதரின் சீடர்களின் எண்ணிக்கை 12.
- 12 இந்தியா சுதந்திரம் பெற்ற நேரம் நள்ளிரவு 12 மணி.




## அழகுத் தமிழில் பேசுங்கள்



அம்மா என்று அழையுங்கள்
அழகுத்தமிழில் பேசுங்கள்!
மம்மி என்றால் பிணமன்றோ?
மறந்தும் அப்படிச் சொல்லாதீர்.

இன்பத் தமிழைப் பேசுங்கள்
இனிமை பொங்க வாழுங்கள்
அம்மா அப்பா உம் தெய்வம்
அறிய வேண்டும் குழந்தைகளே.

உறவின் சுகத்தை உணருங்கள்
உன்னதத் தமிழில் அது தெரியும்
அறிவைக் கொடுக்கும் ஆசிரியர்
அவரை உளத்தில் ஏந்துங்கள்.

பரிவு பண்பு பாசத்தைப்
பைந்தமிழ் மொழியில் பயிலுங்கள்
அன்பு ததும்ப, உளம் துள்ள
அத்தை மாமா - அழையுங்கள்.

இன்னும் குடும்ப ஆலயத்தில்
இருக்கும் சொந்த பந்தமுள்ள
அண்ணா அக்கா தம்பி தங்கை
அனைவர்க்கும் தமிழே உறவுமொழி.

அன்னைத் தமிழை இதயத்தில்
அழகாய் ஏந்தி மகிழுங்கள்
தன்னிகரற்ற தமிழ்த் தாயின்
தாளைப் போற்றித் தொழுதிடுங்கள்.

## 'சே' தன் குழந்தைகளுக்கு

### எழுதிய கடிதம்



சேகுவாரே யுத்த களத்தில் இருக்கும்போது எழுதியது...

அன்புள்ள ஹில்டா,
அலெய்டா, காமிலா, சிலியா,
எர்னஸ்டோ! நீங்கள் இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது நான் உங்களுடன் இருக்க மாட்டேன். உங்களுக்கு என்னை அதிகம் நினைவிருக்காது. உங்கள் தந்தை தனது நம்பிக்கைகளுக்கு நேர்மையாக இருப்பவன். தனது தத்துவத்துக்கு விசுவாசமாக இருப்பவன். நீங்கள் அனைவரும் நல்ல புரட்சிக்காரர்களாக வளரவேண்டும். நன்றாகப் படிக்கவேண்டும். தொழில்நுட்பத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். தனிப்பட்ட முறையில் நாம் முக்கியமல்ல. புரட்சி ஒன்றே மிக முக்கியமானது. உலகத்தில் எங்கேனும் யாருக்காவது கொடுமைகள் நடந்தால், அவர்களுக்காக வருத்தப்படுங்கள். குழந்தைகளே, உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். மீண்டும் உங்களை காண்பேன் என்று நம்புகிறேன்.

அன்பு முத்தங்கள், அப்பா.

## வெள்ளி



தூய தங்கத்தில் செம்பு கலந்து கடின மாக்குவதுபோல, வெள்ளி யுடன் தாமிரத்தைச் சேர்த்து கடினமாக்கித்தான் நகை கள் செய்கிறார்கள். வெள்ளியுடன் தாமிரம், துத்தநாகம், நிக்கல் சேர்த்துத்தான் நாணயங்கள் செய்யப் படுகின்றன.

ஒரு கிராம் வெள்ளியை ஒரு மைல் நீளமுள்ள கம்பியாக நீட்டலாம். வெள்ளியை சாம்பல் நிறமாக்க கந்தக வாயுக்களைப் பயன்படுத்துகின்றனர். வெள்ளி உற்பத்தி யில் மெக்சிக்கோ முதல் இடத்தையும், அமெரிக்கா, கனடா, பெரு, ஆஸ்திரேலியா அடுத்தடுத்த இடங்களையும் வகிக்கின்றன.

## உங்களுக்குத் தெரியுமா?

### மிருகங்களின் கொம்புகள்



யானையின் தந்தம் சுண்ணாம்பால் ஆனது.

காண்டாமிருகத்தின் கொம்பு ரோமங்களால் ஆனது.

மானின் கொம்பு எலும்பால் ஆனது.

மாட்டின் கொம்பு கரட்டினால் உருவானது.

எறும்பின் உடல் 1000 தசைகளால் உருவானது.

கம்பளிப் பூச்சியின் உடல் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தசைகளால் ஆனது.

- ஒருவர் கைரேகையைப் போல் இன்னொருவருக்கு இருப்பதில்லை என்ற உண்மையைக் கண்டுபிடித்தவர் கால்ரன் என்ற இங்கிலாந்துக்காரர்.
- பிறந்த நாள் கேக்கில் மெழுகுவர்த்திகளை ஊதி அணைக்கும் பழக்கம் ஜெர்மனியர் உண்டாக்கியது.
- உலக சாதனைகள் அடங்கியுள்ள கின்னஸ் புத்தகம் தனக்குத்தானே ஒரு கின்னஸ் சாதனை படைத்துள்ளது. உலகிலேயே மிக அதிக மாக திருட்டுப்போவது கின்னஸ் புத்தகம்தான்,

### அலுமினியம்

19ஆம் நூற்றாண்டில் கண்டறியப்பட்ட அலுமினியம் தங்கத்தைவிட விலை அதிகமாக மதிக்கப்பட்டது. அலுமினியத்தை பிரெஞ்சு அரசு பெரிதாக மதித்தது. நெப்போலியன், மேலைநாட்டு மன்னர்களுக்குக் கொடுத்த விருந்தின்போது அலுமினியக் கரண்டி களையே பரிசாகக் கொடுத்துக் கௌரவித்தான்.

* * * * * * *

### சிங்கப்பூர்

சிங்கப்பூரில் சுமத்திரா தீவின் அரசகுமாரர் கடல் பயணத்தின்போது இத்தீவில் உலவிய புலி ஒன்றைப் பார்த்தார். தூரத்திலிருந்து பார்த்ததால் அதைச் சிங்கம் என்று நினைத்தார். அதனால் 'சிங்கபுரா' என்று இத்தீவுக்குப் பெயர் சூட்டினார். தான் பார்த்தது சிங்கம் அல்ல புலியே என்பது பின்னர்தான் அவருக்குத் தெரிந்தது. ஆனால் அதற்குள் 'சிங்கபுரா' பெயர் நிலைத்துவிட்டது. நாளாவட்டத்தில் 'சிங்கப்பூர்' ஆகியது.

### உங்கள் எதிர்காலம்

உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள். அவையே சொற்களாகின்றன. உங்கள் சொற்களைக் கவனியுங்கள். அவையே செயல்களாகின்றன. உங்கள் செயல்களைக் கவனியுங்கள். அவையே பழக்கங்களாகின்றன. உங்கள் பழக்கங்களைக் கவனியுங்கள். அவையே சுபாவங்களாகின்றன. உங்கள் சுபாவங்களைக் கவனியுங்கள். அவையே உங்கள் எதிர்காலத்தை உருவாக்குகின்றன.



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 08.01.2014

வர்ணம் தீட்டும் போட்டி இல.1024
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1022

பரிசுக்குரியவர்: 1022

எம்.டிலக்ஷனா, கண்டி வீதி, பளை.

பாராட்டுக்குரியவர்கள்

- 01. டொ.மரீனா, உடப்பு, புத்தளம்.
- 02. வி.பிரணவன், ஆலங்கேணி, கிண்ணியா.
- 03. எஸ்.மயூரி, கோவில் வீதி, பதுளை.
- 04. க.கஸ்தூரி, தும்பளை, பருத்தித்துறை.
- 05. யோ.பிரிந்தன், கல்வளை, சண்டிலிப்பாய்.
- 07. க.வினோஜன், கரணவாய், கரவெட்டி.
- 08. சி.ஜினித்திகா, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

**இதுவரை**

ஜனாதிபதி ஒபேடே சிங்கப்பூரில் இருக்க, உகண்டாவில் அவரைப் பதவிநீக்கி ஜனாதிபதியாகிறான் இடி அமீன். தனது விசுவாசிகளுக்கு பதவிகொடுக்கிறான். உகண்டாவில் நடைபெற்ற படுகொலைகளை ஆராய இரு அமெரிக்கர்கள் வருகின்றனர்...

**இனி...**

அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

**அதிர் இடி (18)**



இடி அமீனின் முன்னாள் கார்ச் சாரதியும், அப்போதைய டோரா மாநில ஆளுநருமான ஜூமா எய்காவால் அமெரிக்கர்கள் வரவேற்கப்பட்டனர்.

வரவேற்கப்பட்ட முறையே வித்தியாசமாகவும், விபரீதத்துக்கு முன்னோட்டமாகவும் இருந்தது.

கைகுலுக்குவதற்காக தன் கரத்தை நீட்டினார் ரொபட் சீடில்.

கைகுலுக்காமல் சிரித்த ஆளுநர் ஜூமா எய்கா, வெள்ளைக்காரர்களுடன் நாங்கள் கைகுலுக்கமாட்டோம் ஏனென்றால் எங்களுக்கு வெள்ளைத் தோல் என்றாலே வெறுப்பு!" என்றார் முகத்தில் அடிப்பதுபோல்.

இருவரும் அதிர்ந்து நிற்க, அந்த அறையின் இடதுபக்கக் கதவு சட்டென்று திறந்துகொள்ள, கரும் மலைபோல கடகடவென்று சிரித்தபடி வந்தது - இடி அமீன்.

ஆளுநர் தலைகுனிந்து பணிவுகாட்ட நடந்துசென்று ஆளுநருக்கு உரிய ஆசனத்தில் அமர்ந்த அமீன், என்ன எங்கள்



மரியாதை எப்படி?" என்றான்.

அவர்கள் பதில் சொல்லமுன்னரே மற்றுமொரு மரியாதை செய்யப்பட்டது.

அமீனுடன் கூடவந்த இரண்டு மெய்க்காப்பாளர்களும் இரண்டு அமெரிக்கர்களுக்கு பின்புறமாக நின்றுகொண்டிருந்தனர்.

அமீனின் கண்களின் அசைவை வைத்தே, குறிப்புணர்ந்து அமெரிக்கர்கள் இருவரையும் பின்புறத்தில் எட்டி உதைத்தனர்.

உதைத்த வேகத்தில் அமெரிக்கர் இருவரும் முன்னால் சரிந்து இடி அமீனுக்கு முன்னால் இருந்த மேசையில் தாடை மோதச் சரிந்தனர்.

இடி அமீன் உரத்து நகைத்தபடி, எனக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் தலைநிமிர்ந்து நின்றால் எனக்குப் பிடிக்காது என்றான். நிமிர முயன்றவர்கள் அமீனின் மெய்காப்பாளர்களால் பிடறியில் அழுத்தப்பட்டனர்.

கறுப்பர்கள் என்றால் உங்களுக்கு கேவலம் என்ன?, இப்போது காற்று மாறி அடிக்கிறது. இந்தக் கறுப்பன் முன்னால் நீங்கள் இரண்டுபேரும் அடிமைகளடா அடிமைகள்! என்று உறுமினான்.

அவர்கள் இருவருக்கும் தங்கள் உயிர் போகப்போவது சர்வநிச்சயம் என்பது தெரிந்துவிட்டது. கடைசி முயற்சியாக அமீனுடன் பேசிப்பார்க்க விரும்பினார்கள்.

மேசையில் தாடையால் ஊன்றிக் கொண்டே, "நாங்கள் உங்கள் எதிரிகளல்ல, எங்களை நம்புங்கள்!" என்றார் நிக்கலஸ்.

"அப்படியா, சந்தோசம், இங்கே எதற்காக வந்தீர்கள்? சி.ஐ.ஏ. நாய்கள்தானே நீங்கள்?"

"நோ... நோ..." என்று அவர்கள்கூற, "யெஸ் யெஸ்" என்றான் அமீன்.

என்றவன் கண்இமைக்கும் நேரத்தில் தன் பிஸ்டலை உருவி தன்னெதிரே மேசையில் கவிழ்ந்திருந்த நிக்கலஸின் நெற்றி மையத்தை குறிவைத்து விசையை அழுத்த,

"டுமீல்"

நெற்றி மையத்தில் சின்னப்பொத்தல் தன் சகா தன் கண் எதிரேயே சுடப்பட்டு, பயங்கரமாக செத்துப்போக, பயத்தில் ரொபட்டின் காற்சட்டை நனைந்துவிட்டது.

நாற்காலியைவிட்டு எழுந்துவந்த இடி அமீன், "அவனை விடுங்கடா!" என்றுவிட்டு.

"இந்தா என் பூட்ஸைத் துடை!" என்றான். ரொபட் சீடில் தயங்கிய போதே அமீன் குத்து அவர் முகத்தில் விழுந்தது. "இதுதான் இடி அமீன் குத்து, துடையடா!" என்று உறுமிய உறுமலில் சடாரென்று மடங்கி அமர்ந்து பூட்ஸ் துடைக்க தன் கைக்குட்டையை எடுத்தார்.

அடுத்த நொடியே கைக்குட்டை அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

"முட்டாள் வெள்ளையேனே, துணியால் துடைக்காதே உன் நா நுனியால் துடை!" என்றான் இடி அமீன்.

பின்னால் அடிபட்டார் ரொபட் சீடில். இனி தப்பவே முடியாது என்று தெரிந்தது. நாவால் இடி அமீனின் பூட்ஸை துடைக்கத் தொடங்கினார் ரொபட் சீடில்.

இரண்டு பூட்சுகளையும் துடைத்து முடிந்ததும், "உன்னை உயிரோடு விடலாம்தான், ஆனால் வெளியே போய் இங்கு நடந்ததையெல்லாம் ஒன்றுவிடாமல் ஒப்பிப்பாய், அதனால்..." என்று நிறுத்திய அமீனின் பிஸ்டல் வெடித்தது.

இரு அமெரிக்கர்களின் உடல்களும் டோரா மாநிலத்திலேயே புதைக்கப்பட்டன.

ஒரு வாரம் சென்றபின் விழித்துக் கொண்ட உகண்டாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம், "எங்கே எங்கள் இரு பிரஜைகள்?" என்று கேட்டது.

இரகசியத் தகவல்கள் சிலவும் அமெரிக்கத் தூதரகத்துக்குக் கிடைத்தன. அமெரிக்கத் தூதரகத்திற்கு சில தகவல்கள் கிடைத்துவிட்டன. என்ற தகவல் அமீனுக்கும் கிடைத்தன.

டோரா மாநில ஆளுநர் ஜூடா எய்காவுக்கு ஒருநாள் நள்ளிரவு அமீனிடம் இருந்து ·.போன் வந்தது.

"அந்த இரண்டு நாய்களையும் புதைத்தாயா? எரித்தாயா?"

"தாங்கள்தானே புதைக்கச் சொன்னீர்கள்...!"

"அப்படியா சொன்னேன்?" தினமும் எத்தனையோ பேரை புதைக்கிறோம், எரிக்கிறோம். எதைத்தான் ஞாபகத்தில் போட்டு வைத்திருப்பது? சரி, இரண்டு நாய்களையும் தோண்டி எடுத்து எரித்துவிடு. சாம்பலை அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பிவிடு!"

அமெரிக்கர் இருவரையும் புதைத்த இடம்பற்றிய தகவல் கிடைத்த திருப்தியில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் சிலவற்றுக்கு திட்டமிட்ட அமெரிக்கத் தூதரகம், சாம்பல் பொட்டலம் கிடைத்ததும், தனது திட்டத்தை மூட்டை கட்டிப்போட்டுவிட்டது.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

சிங்கப்பூரில் உகண்டா முன்னாள் ஜனாதிபதியாகிவிட்ட ஒபேடேயின் அந்தரங்க செயலாளரான சியம்பா தனது செயலாளரின் அணைப்பில் திணறிக்கொண்டிருந்தார்.

அவரது வெற்றுடம்பில் சாய்ந்திருந்த அவரது செயலாளர் கூறினாள்; "நீங்கள் பேசாமல் இடி அமீனுடன் சேர்ந்துவிடுங்கள்"

"எப்படி? என்னையும் பிடித்துக் கொன்றுவிடமாட்டானா?" என்றார். அவளது சட்டையின் கடைசிப் பொத்தானையும் விடுவித்து பிரமித்தபடி.

"அவர் கழுத்தை வளைத்து தன் கழுத்துக்குக் கீழே அவர் முகத்துக்கு தரிப்பிடம் தந்தபடி அதனை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றவளை பிரமிப்புடன் பார்த்தவரை தன் முத்தத்தால் பிரமிக்கச் செய்தாள்.

சியம்பா கட்சி மாறினார். ஒபேடேவுக்கு துரோகம் செய்யத் துணிந்தார்.

இடி அமீனுடன் தொடர்பு கொள்ளுமாறு ஒரு ·.போன் இலக்கத்தை அவள் கொடுத்தாள்.

தொடர்புகொண்டபோது இடி அமீன் மறுமுனையில் "சியம்பா! நாங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நீயும் அங்கே கட்டிலில் கொண்டாடியிருப்பாய்? பொல்லாத ராட்சசி, உயிரை எடுத்திருப்பாளே?" என்று சிரித்தவன்; "இங்கே எப்போது வருகிறாய், நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்!" என்றான் அமீன்.

சியம்பாவை அமீன் அத்தனை கரிசனையுடன் வரவேற்றதுக்கு காரணம் இல்லாமல் போகுமா? இருந்தது!

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 553

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **08.01.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 553
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 551 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி 1 | ம் 2 | பு 3 | | தீ 5 | தை 6 |
| லை 7 | | க் 9 | ப 10 | ம் 11 | க 12 |
| வ 13 | ம் 14 | க 15 | ரா 16 | | |
| டி 19 | | ல 21 | ச 22 | த 23 | ம் 24 |
| வ 25 | த 26 | லை 27 | க் 28 | க 29 | ச 30 |
| ம் 31 | கா 32 | | தி 34 | க் 35 | கு 36 |

**இடமிருந்து வலம்**

01. கணவன், கொளுநன்.
06. ஏவல் ஒன்றைக் குறிக்கும்.
07. காட்டு விலங்கொன்று. ஆடுதின்னாப் பாலை. (குழம்பியுள்ளது)
11. ஆடிமாதம். வெண்மை.
17. ஓர் அசைச்சொல்.
19. ஓரலங்காரம். (குழம்பியுள்ளது)
25. அப்படி. அவ்விதம்.
28. தற்போதைய யுகம்.
33. உலகிலே ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கின்ற இனங்களுக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாக, நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. அண்மைக்காலத்தில் சினிமாவில் கிராமத்துப் பெண்ணாக நடித்த நடிகை. (பிற்பாதி கோவலனை நினைத்தால் வரும்)
02. மன்மதன் தேவி.
03. மனிதன் பூமியில் இயற்கைக்கு மாறாக பலவேலைகளைச் செய்வதால் பூமியின் இது பாதிப்படைகின்றது.
06. பிரிட்டன் கணினிச் சமூகத்தின் தகவல் தொழில்நுட்ப பட்டத்தை (BCS IT) உலகில் ஆகக்குறைந்த வயதில் பெற்றுக்கொண்ட இலங்கைத் தமிழ் பெண்பிள்ளை.
11. தானாக. சுயேட்சையாய்.
20. ஏற்று. சரியான.
22. கயிறு. பொறிவைத்தல் என்றும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
29. கலியாணப் பட்டு. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 551 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஆர்.ஜோசெப், கடற்கரை வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. மு.சாரங்கன், அராலி மத்தி, அராலி.
02. க.சாளினி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
03. எம்.இஷார், தர்ஹாநகர்.
04. ம.கம்சா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
05. எம்.மூர்த்தி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
06. து.ஸ்ரீகாந்த், பூவரசங்குளம், வவுனியா.
07. அ.சந்திரமதி, பிரதான வீதி, நுவரெலியா.
08. ச.கல்பனா, புலோலி தெற்கு, புலோலி.
09. வ.சிவசங்கர், கண்டாவளை, கிளிநொச்சி.






# புத்தாண்டில் ரசிகர்களை குஷிப்படுத்துகிறார் பிரியங்கா சோப்ரா

ரசிகர்களின் கனவுக்கன்னியாக இருப்பவர் பிரியங்கா சோப்ரா. இந்திப்படங்களில் நடிக்க பல கோடி சம்பளம் வாங்குகிறார். விளம்பர படங்களில் நடித்தும் பணம் குவிக்கிறார். சென்னையில் நட்சத்திர ஹோட்டலில் நடக்கும் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சியில் ஆட பிரியங்கா சோப்ராவை அணுகினர். அவரும் சம்மதித்து உள்ளார். இதில் ஆடுவதற்காக ரூ. 6 கோடி சம்பளம் கேட்டதாக செய்திகள் வெளியானது.

31ஆம் திகதி இரவு இந்த நடன நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார். பிரியங்கா சோப்ராவின் நடனத்தை காண அதிக விலைக்கு டிக்கெட்கள் விற்கப்படுகின்றன. இது குறித்து பிரியங்கா சோப்ரா கூறும்போது, 2014ஆம் ஆண்டை சென்னையில் நடனம் ஆடி வரவேற்கப் போகிறேன் என்னுடன் சிவமணியும் இணைகிறார். அற்புதமான நிகழ்ச்சியாக அது இருக்கும்.

பொழுதுபோக்கு மூலம் ரசிகர்களை குஷிப்படுத்துவதே என் நோக்கம். ரசிகர்களுக்கு மறக்கமுடியாத புத்தாண்டு கொண்டாட்ட மாக அது இருக்கும் என்றார்.

# 68 நடிகர்கள்; 80 நடிகைகள்

தமிழ் சினிமாவில் ஆண்டுதோறும் வெளியாகும் படங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு இதுவரை 150 படங்களை தாண்டிவிட்டது. ரிலீசான படங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த ஆண்டு அறிமுகமான நடிகர், நடிகைகளின் எண்ணிக்கையும் அதிகம். இதில் ஹீரோவாக அறிமுகமானவர்கள் மட்டும் 68 பேர்.

இவர்களில் கார்த்திக் மகன் கௌதம் (கடல்), சேது (கண்ணா லட்டு தின்ன ஆசையா) ஆகியோர் மட்டுமே அடுத்த படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக கௌதம் மூன்று படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். முக்கியமான இளம் ஹீரோக்கள் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார். இவர்கள் தவிர மலையாளத்திலிருந்து வந்த நிவின் (நேரம்), சந்தோஷ் (ஆதலினால் காதல் செய்வீர்), ராம் (தங்க மீன்கள்), விக்ரம் ஆனந்த் (நிர்ணயம்), அசோக்ஷெல்வன் (பீட்சா-2) ஆகியோர் தங்கள் நடிப்பின்மூலம் கவனத்தை ஈர்த்தார்கள்.

2013ம் ஆண்டு 80 ஹீரோயின்கள் அறிமுகமாகி இருக்கிறார்கள். இது எந்த ஆண்டிலும் எந்த மொழியிலும் இல்லாத சாதனை அளவாகும். இவர்களில் மலையாளத்திலிருந்து தமிழுக்கு வந்த நஸ்ரியா நாசிம் (நேரம்), ராதா மகள் துளசி (கடல்), நிவேதா தாமஸ் (நவீன சரஸ்வதி சபதம்), மிருத்திகா (555), சுரபி (இவன் வேற மாதிரி) ஆகியோர் கவனிக்கப்பட்டவர்கள். இவர்கள் தவிர, விபா (மதில்மேல் பூனை), அஷ்ரிதா ஷெட்டி (உதயம் என்.எச்-4), சுர்வின் (மூன்று பேர் மூன்று காதல்), ஸ்ரீரம்யா (யமுனா), இஷா தல்வார் (தில்லுமுல்லு) ஆகியோர் ரசிகர்களை கவர்ந்திருக்கிறார்கள்.


டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் சிறிய பட்ஜெட்டில்கூட படம் எடுத்துவிட முடிகிற சூழ்நிலை இருப்பதால் புதியவர்கள் சினிமா நோக்கி வருகிறார்கள். நான்கு பேர் சேர்த்து ஒரு படத்தை எடுத்துவிடுகிறார்கள்.

# அளவுக்கு

சர்ச்சை கருத்துக்களால் நடிகை
சிக்கலில் மாட்டியுள்ளார். ஆந்திராவி
இருந்து வெளியேறும்படி மகேஷ்பாபு
ரசிகர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள
டுவிட்டரில் சமந்தா வெளியிடும் கருத்
சர்ச்சைகளை கிளப்பிவிடுகின்றன. ஏ
டெல்லி சட்டமன்ற தேர்தல் முடிவுகள்
தொடக்கம் என்று கூறியது காங்கிரசா
கொதிப்படைய செய்தது.

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஆதரவ
கருத்தாக அது கருதப்பட்டது
மகேஷ்பாபு பட போஸ்டரை ர்சித்
எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளார். மகேஷ்
நடித்த ஒன் மீ நினோக்டின்
தெலுங்கு படம் ரிலீசுக்கு
கிறது. இந்த படத்தின்
வெளியீட்டுக்கான போ
ஐதராபாத்தில் ஒட்ட
இருந்தன. மகேஷ்பா
காலடி பின்னால்
நடிகை நாய்





கார்த்தி, பிரேம்ஜி இருவரும் சதா பார்ட்டி, பெண்கள் என ஜாலியாக வலம்வரும் வாலிபர்கள்.

என்னதான் கார்த்திக்கு ஹன்சிகா மாதிரி ஒரு செம லவ்வர் இருந்தாலும், தன் நண்பன் பிரேம்ஜி உஷார் செய்யவிரும்பும் பெண்களையும் விட்டுவைப்பதில்லை. எப்படியோ மடக்கிவிடுகிறார்.

இப்படி குஷியாக போய்க் கொண்டிருந்த இவர்கள் வாழ்க்கையில், ஒரு நாள் பிரியாணியை சாப்பிடுவதற்கு ஆம்பூரில் அலைகிறார்கள். இவங்க தேடலுக்கு செம விருந்தாக பிரியாணியோடு சேர்த்து லெக் பீஸாக மேண்டி டக்கரும் சிக்குகிறார்.

கொஞ்ச நேரத்தில் இவர்கள் வலையில் சிக்கிய மேண்டி டக்கர் மாயமாகிவிட, இன்னொரு பக்கம் பொலிஸ் கார்த்தி, பிரேம்ஜியை வலைவீசி தேடி

# பிரி
# தி

வருகிறது.

அப்புறம் என்
மான அந்த டே
இவர்களுக்கு ப
கண்டுபிடித்து த
என்பது காரசார

கார்த்தி தொ
வித்தியாசமான
ஹன்சிகா பாட்டு
மோதி கொள்வத

பிரேம்ஜி த
க்லேப் அடிக்க
ஏற்றுக்கொள்ள

மேலும் ராம்
மதுமிதா, நிதின்






# ...க்கு பிடிச்சினால்...?

...ால் நடிகை சமந்தா
ஆந்திராவில்
மகேஷ்பாபு
...தாக்கியுள்ளனர்.
...ியிடும் கருத்துக்கள்
...கின்றன. ஏற்கனவே,
...ல் முடிவுகள் நல்ல
...து காங்கிரசாரை

...க்கு ஆதரவாக
...ட்டது ...தற்போது
...ரை ...ர்சித்து
...ார். மகேஷ்பாபு
நினோக்டின்
...ம் ரிலீசுக்கு தயாரா-
...த படத்தின் இசை
...டுக்கான போஸ்டர்கள்
...த்தில் ஒட்டப்பட்டு
... மகேஷ்பாபு
பின்னால்
நாய்

போல் தரையில் ஊர்ந்துபோவது போல் அந்த போஸ்டர் இருந்தது. பெண்களை கேவலப்படுத்துவது போல் இந்த போஸ்டர் உள்ளது என்று டுவிட்டரில் சமந்தா கண்டித்தார்.

பிற்போக்குத்தனமான சிந்தனை என்றும் வர்ணித்தார். இதற்க மகேஷ் பாபு ரசிகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆந்திராவில் இருந்து சமந்தாவை வெளியேற்ற வேண்டும் என்று அவர்கள் டுவிட்டர்களில் வற்புறுத்திவருகின்றனர். இப்பிரச்சினையில் சமந்தாவுக்கு சித்தார்த் ஆதரவு தெரிவித்து உள்ளார்.

கருத்து சுதந்திரம் இருப்பதற்காக தீவிரமாக பேசக்கூடாது. அப்படிக்கூறினால் தீவிரவாதிகள் போல் ஆகிவிடுவீர்கள். முதலில் நீங்கள்தான் வெளியேற வேண்டும் என்று மகேஷ்பாபு ரசிகர்களை கண்டித்து உள்ளார். மகேஷ்பாபு ரசிகர்களுக்கு பயந்து சமந்தாவை தெலுங்கு டைரக்டர்கள் ஓரம்கட்ட முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஐவருக்கு ஐந்து இலட்சம்!

தன்னை வைத்து படம் தயாரித்த 5 தயாரிப்பாளர்களுக்கு தலா ரூ.5 லட்சம், நடிகர் விஜய் வழங்கினார்.

நடிகர் விஜய் திரைத் துறைக்கு வந்து 22வருடங்கள் ஆகிவிட்டது. இவர் தற்போது தனது 56-ஆவது படமாக 'ஜில்லா' படத்தில் நடித்து வருகிறார். இப்படம் பொங்கல் வெளியீடாக வருகிறது. இந்நிலையில், விஜய் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகும்போது தன்னைவைத்து தயாரித்த 5 தயாரிப்பாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கும் நிகழ்ச்சி இன்று சென்னையில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. இந்த விழாவில், நடிகர் விஜய், 'ஜில்லா' பட இயக்குனர் நேசன், இசையமைப்பாளர் டி.இமான் ஆகியோர் கலந்து கொண்டனர். தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரியும் கலந்துகொண்டார். இவ்விழாவில் விஜய்யை வைத்து 'வசந்த வாசல்' என்ற படத்தை தயாரித்த எம்.ராஜராம், 'ராஜாவின் பார்வையிலே' படத்தை தயாரித்த எஸ்.சௌந்திரபாண்டியன், 'மின்சார கண்ணா' படத்தை தயாரித்த ஆர். சாந்தா கே.ஆர்.ஜி., 'ஒன்ஸ்மோர்' படத்தை தயாரித்த சி.வி.ராஜேந்திரன், 'விஷ்ணு' படத்தை தயாரித்த எம். பாஸ்கர் அவருடைய மகன் பாலாஜி பிரபுவுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கி கௌரவித்தார். மனிதநேய அடிப்படையில் இந்த பணத்தை விஜய் வழங்கியது அனைவரையும் நெகவைத்தது.

இந்த விழாவில், 'ஜில்லா' படத்தின் ஓடியோவும் வெளியிடப்பட்டது. உதவி வழங்கும் விழாவின் ஒரு நிகழ்வாக ஜில்லா படத்தின் ஓடியோவையும் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.



# தயாரிப்பாளர்களை தவிக்க விடும் நடிகை!

பால் நடிகைதான் அறிமுகமான முதல் படத்திலேயே சரியான குடிகாரி என கிசுகிசுக்கப்பட்டவர். தற்போது கோடியில் புரள்கிறவர் சும்மாவா இருப்பார். தற்போது காஸ்டிலியான பானங்களைத்தான் இவர் குடிக்கிறாராம். தினமும் சரக்கு அடிக்காமல் இவருக்கு தூக்கமே வருவதில்லையாம். சர்வ சாதாரணமாக 2 போத்தல், 3 போத்தல் என அடித்து தள்ளுகிறாராம்.

படப்பிடிப்புக்காக இவர் தங்கும் ஹோட்டல்களில் அதிக விலையுயர்ந்த பாரின் சரக்குகளை வாங்கித்தான் குடிக்கிறாராம்.

அப்படி குடிக்கும் பில்லை அந்த படங்களின் தயாரிப்பாளர் தலையிலேயே கட்டிவிடுகிறாராம் நடிகை.




# பிரியாணி திரைவிமர்சனம்

...கிறது.

...அப்புறம் என்ன, இந்த சிக்கலுக்கு காரண-...ா அந்த டேஸ்டி தம் பிரியாணியை சுடச்சுட ...ர்களுக்கு பரிமாறிய மேண்டி டக்கர் இவர்கள் ...டுபிடித்து தங்களை காப்பாற்றிவிட்டார்களா ...பது காரசாரமான க்ளைமாக்ஸ்.

...கார்த்தி தொடர் சரிவுக்கு பின்பு, இப்படத்தில் ...தியாசமான தோற்றத்தில் கவருகிறார்.

...ன்சிகா பாட்டுக்கும், இடையில் கார்த்தியுடன் ...தி கொள்வதுக்கும் மட்டும் பயன்பட்டிருக்கிறார்.

...பிரேம்ஜி தனது சில பன்ச் வசனங்களில் ...லப் அடிக்க வைத்தாலும், நடிப்பில்தான் ...துக்கொள்ளவே முடியவில்லை.

...மேலும் ராம்கி, நாசர், பிரேம், ஜெயப்ரகாஷ், ...மிதா, நிதின் சத்யா, சுப்பு பஞ்சு, உமா ரியாஸ், சம்பத், ஷண்முகசுந்தரம், விஜயலக்ஷ்மி ஆகியோரின் நடிப்பு கதையின் தேவைகேற்ப தூவப்பட்டுள்ளது. யுவனின் இசையில் இது 100ஆவது படம் என்று டைட்டில் கார்டில் போடும்போது மட்டும்தான் தெரிகிறது.

ஆனால், படத்தில் "பே ஒப் பெங்கால், எதிர்த்து நில்" பாடல் மட்டுமே ஓரளவுக்கு ஈர்க்கிறது. பின்னணி இசையும் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு இல்லை.

சக்தி சரவணனின் ஒளிப்பதிவும், பிரவீன்-ஸ்ரீகாந்தின் கட்டிங்க்ஸும் செம சார்ப். வெங்கட் பிரபு படம் என்றாலே, பெரிய நட்சத்திர பட்டாளம், குறிப்பாக 'மகா நடிகன்' பிரேம்ஜி, பின் இன்றைய இளசுகளுக்கு பிடிக்கும்வகையில் ரொம்ப ஜாலியான ஒரு கதையில் மசாலாவாக, கொஞ்சம் தூக்கலாக தடவித்தருவது வழக்கம். ஆனால், பிரியாணியில் கொஞ்சம் திட்டம் தெரியாமல் மசாலாவை பூசிவிட்டார்.

## மீண்டும் வருவேன்; மனிஷா கொய்ராலா

சினிமாவில் மீண்டும் நடிப்பேன் என்று அறிவிப்புவிடுத்துள்ளார் மனிஷா கொய்ராலா. பம்பாய், முதல்வன், இந்தியன் உள்ளிட்ட பல தமிழ் படங்களில் நடித்தவர் மனிஷா கொய்ராலா இந்தியிலும் முன்னணி நடிகையாக இருந்தார்.

இந்நிலையில் இவருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டது. இதற்காக வெளிநாட்டில் பல மாதங்கள் தங்கி சிகிச்சைபெற்ற இவர் தற்போது உடல் நிலை குணமாகி இந்தியா திரும்பியுள்ளார்.

இந்நிலையில் தனது நடிப்பு குறித்து பேட்டியளித்த இவர், மீண்டும் சினிமாவில் நடிக்க எனக்கு வாய்ப்புகள் வந்துள்ளன. கதைகேட்டு பிடித்து இருந்தால் நடிப்பேன், என்று கூறியுள்ளார்.

## தேன் கிண்ணம்

# மீட்பரே வருக...



மீட்பர் வந்தார்
எங்கள்
மீட்பர் வந்தார்
பாரினில் எங்களை
மீட்க வந்தார்....

பாலகன் யேசுவாய்
மீட்பர் வந்தார்
பாவப்பட்ட எங்களை
பார்க்க வந்தார்....

எம் இல்லங்களும்....
உள்ளங்களும்
மகிழ்வுற மீட்பர் வந்தார்
என்றென்றும்
பாலகன் யேசுவை
வாயார வாழ்த்திப் பாடி
நிற்போம்.



து.திலக், யாழ்.உரும்பையூர்.

---

மொட்டுவிட்ட புதுமலரே
பாசமான - என் தங்கையின்
தோழி நீ - என்பதை
அறிந்தபின்
உன்னைக் கேளாமல் -
எனக்குள்
உன்னைச் சிறை வைத்தேன்
- உன்
விழிகளின் வீச்சில் - நான்
தாக்கப்படும் வேதனையை நீ
அறியமாட்டாய்....
சொல்லவும் முடியாமல்...
மெல்லவும் முடியாமல்...
உன்னைச் சுற்றி...
வட்டமடிக்கும் - என்
இதய வண்ணத்திப் பூச்சியை
- உனது
பூக்கரங்களால் - அன்போடு
பிடிக்கும்வரை - நான்
உன்னைச் சுற்றி
வட்டமிடுவேன்.



## உன்னைச் சுற்றி வருவேன்!

வீ.அருள்ராஜா, கொம்மந்துறை.

---

## உனக்கு நான் அடிமை

ஒரு தாயின் மடியில்
தாய் மண்ணில் பிறந்தேன்!
ஆடினேன் பாடினேன்
உண்டேன் உறங்கினேன்
அப்போது நான் உனை
நினைக்கவில்லை
பிறகென்ன
இறந்தும் தஞ்சமென்று
உன்னிடமே வந்திருக்கிறேன்
என் உயிரற்ற உடலையும்
நீயே ஏற்றுக் கொள்வதால்
பூமித்தாயே உனக்கு நான்
அடிமை!



அன்பு, கறுக்காய்

---

வழமை போல்...
பேருந்து மத்திய
நிலையத்தைச் சுற்றி
உலாவரும் என் விழிகள்,
பயணிகளின் அணி வகுப்பின்
அந்தத்தில் அழகெல்லாம்
அள்ளி வைத்திருக்கும்
அந்த எழிலரசியின் மேல்
நிலை குத்தி நிற்கின்றன.
என்னையறியாமல்
என் பாதங்கள்
அவளண்டை நகர்கின்றன.

முடி முதல் அடிவரை
என் நயனங்கள் மேய்கின்றன
பொன்னிகர் மேனிக்கு
முலாம்பூசியது போல்
இளமஞ்சள் சேலை
அளவோடு நீண்ட கழுத்து
அதில் நூல் நரம்பென
நெளியும் தங்கச் சங்கிலி
தோள்தொட ஆடும்
காதணி வளையங்கள்

பெட்டைக் கோழி
இறகினைப் பிளந்து
பதித்தது போலிரு
புருவங்கள் மத்தியில் தேன்
சொட்டுப் போல் தொட்டு
வைத்த பொட்டு!

தோடம்பழச் சுளை
இதழ் அதன் கீழ்
ஓரத்தில் சன்னம்
போல் கரும்புள்ளி!
ஆடவர் கண்படுமென
பிரமன் பதித்த மறுவோ!

அவள் விழி மலரம்பு
என்மேல் பாயாதா?
கட்டழகுக் கன்னியின்
புன்னகை மலர்
மொட்டவிழாதா?
நெருங்குகிறேன் அதற்குள்...
அவளை பேருந்து
சுமந்து செல்கிறது!
நாளையும் அவள்
வருவாளா?!

# அவள் வருவாளா!



கின்னியா
முத்தாலிப்.

---

நிசப்தம்
நிறைந்த இராப்பொழுது
முற்றத்து
நிலா ஒளியில்
தூக்கம் துறந்து
வாய் திறந்தபடி
பேய் கதை கேட்டோம்!

தாத்தா கதை சொன்னால்
இதயம் குளிரும்
நேரில் நடப்பது போல்
இருக்கும்!

வழமைபோல்
அன்று
தாத்தாவின்
கதையோடு புதைந்தோம்,
சலங்கை ஒலி போல்
சத்தமிடும் கடலலையாய்
இடையிடையே
அச்சமும்
வந்து போனது!

திடீரென
அறுந்து விழும்
விண்மீண் போல்
காற்றைக்கிழித்து வந்து
தாத்தாவை
தாக்கியது ரவை ஒன்று!

பரஸ்பரம்
துப்பாக்கி வேட்டுக்களால்
பலிபோனது
அப்பாவி தாத்தா!

அன்றைய நிலைமை
இன்று இல்லை
சந்தோசம்...
நாளைய தாகமும்
இதுதான்.



A.பாரிஸ்,
மிகிந்தலை.

---

# ஈழத்துக் கவிஞர்கள்

## எம்.ஐ.எம்.அஷ்ரப்



ஈழத்துக் கவிஞர்களில் எம்.ஐ.எம். அஷ்ரப் தனக்கென ஒரு இடத்தைத்தக்க வைத்துக் கொண்டுள்ளார். அஷ்ரப் யாரையும் பின்பற்றி கவிதை எழுதவில்லை. நல்லறம் குறித்தும் இவர் பல கவிதைகளில் பேசுகின்றார். அயலவர்களோடு கூடி வாழ்தல், ஆழந்த அன்பு செலுத்துதல் பற்றி இவரது கவிதைகள் பேசுகின்றன. பல்துறைகளிலும் நிறைந்த அறிவாற்றல் கொண்டு சிறந்த கலைப்படைப்புகளை செய்யக் கூடியவர்.

சாய்ந்தமருதை -07 பிறப்பிடமாகக் கொண்டவர் அஷ்ரப். குறிப்பாக கவிதை, சிறுகதை என்பவற்றில் பல தேசிய உள்ளூர் விருதுகளை மட்டுமல்ல, ஒரு சர்வதேச விருதையும் வென்றவர். நாளிதழ்கள், சஞ்சிகைகளில் பெரும் பங்குவகித்து எழுதிவருபவர். 1980 ஆம் ஆண்டு இலக்கிய உலகில் சஞ்சரித்தார்.

எம்.எஸ்.எம். இஸ்மாயில் அவர்களின் ஏக புதல்வரான இவர் அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் உயர்தர வகுப்புவரை கல்விகற்றவர். அங்கிருந்து இவருக்குக் கிடைத்த தமிழ்மொழி அறிவு இவரை ஒரு எழுத்தாளராகக் கொண்டுவந்தது. தற்போது சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

அண்மையில் தனது முதல் கவிதை நூலான 'இன்னும் உயிரோடு' எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

தினமுரசு பத்திரிகையில் அஷ்ரப் கவிதைகளை எழுதியுள்ளார்; எழுதிக்கொண்டிருக்கின்றார். 600ஆவது முரசு நடாத்திய போட்டியில் 1ஆம் இடமும், 1000ஆவது முரசு நடாத்திய சிறுகதைப் போட்டியில் 2ஆம் இடமும் பெற்றுள்ளார்.

'இன்னும் உயிரோடு' என்னும் கவிதை நூலில் இவரது கவிகள் சமூகம், சமாதானம், மனிதநேயம், ஏக்கங்கள், உறவுகள் என்பவற்றை சித்தரிப்பதாக இருக்கின்றது. இந்நூலில் இடம்பெற்ற 'விடியல்கள் ஏன் வரவேண்டும்' என்னும் கவிதையில் இருந்து சிலவரிகள் -

**வெறுமையாய் இருக்கும்**
**இந்த அகத்தில்**
**வேதனைகளை**
**நிரப்பிடத் துடிக்கும்**
**பண்பற்ற**
**சமூக உணர்வுகளை**
**எச்சமாக்கிடும்**
**பொல்லாத விடியல்கள்**
**ஏன் வரவேண்டும்?**




### இலக்கியப் பாதையில் பதிந்த சுவடுகள்

1994 அரச சாகித்திய விழா பிரதேச மட்டப் போட்டியில் கவிதை முதலாமிடம்.

1998 ஐரோப்பிய யூனியனில் அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்.

2007 அரச சாகித்திய விழா மாவட்ட மட்டப்போட்டியில் சிறுகதை.பாடலாக்கம், கவிதை, கட்டுரை முறையே 1ஆம், 2ஆம், 2ஆம் 3ஆம் இடங்கள்.

2008 உழைக்கும் மக்கள் கலைவிழாவின் 'வியர்வையின் ஓவியம்', 2010 மன்னார் தமிழ்ச் சங்கத்தின் 'செம்மொழி விழா' ஆகிய கவிதைப் போட்டிகளில் ஆறுதல் பரிசுகள்.

2010 கிழக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களம் நடத்திய 'முதியோர்தின' கட்டுரைப் போட்டியில் முதலாமிடம்.

கலை கலாசார அமைச்சின் அரச ஊழியர்களுக்கான போட்டியில் 2004 கவிதை, 2006, 2011 சிறுகதைகள், 2012 பாடலாக்கம் மற்றும் சிறுவர் கதையாக்கம் போன்றவற்றுக்கு ஆறுதல் பரிசுகள்.

2011 யாழ்.முஸ்லிம் இணையத்தளமும், இருக்கிறம் பத்திரிகையும் இணைந்துநடத்திய 'புலம்பெயர் வடக்கு முஸ்லிம்கள்' என்ற சர்வதேச ரீதியிலான கவிதைப்போட்டியில் முதலாமிடம்.

2011 தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சிறுகதைப் போட்டியில் நான்காமிடம்.


2013 வாமி நிறுவனம் நடாத்திய முஸ்லிம்களின் கல்விக்கு பங்களிப்புச் செய்தோர் என்ற கட்டுரைப் போட்டியில் ஆறுதல் பரிசு.

2013 தினமுரசு பத்திரிகை 1000 ஆவது முரசுக்காக நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடம்.





பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர். **Dr. சி.நவநீதன்**



# கர்ப்ப காலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள்




**ஏன் குறைமாத பிரசவம் ஏற்படுகிறது?**

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இதற்கென தனிக்காரணங்கள் இருப்பதில்லை. எனினும் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் குறைமாத பிரசவம் ஏற்படும் சாத்தியங்கள் அதிகம்.

1. இரட்டைப் பிரசவம்.
2. கருப்பைக்கழுத்து விரிந்து இருத்தல்.
3. பெண்ணுறுப்பில் கிருமித்தாக்கம்.
4. தாய்க்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுதல்.
5. முன்னைய குறைமாத பிரசவங்கள்.
6. பன்னீர்க்குடம் உடைந்து நீர் வெளியேறல்.

முன்னைய பிரசவங்களில் குறைமாத பிரசவங்கள் இருப்பவர்கள் முன் கூட்டியே நிபுணத்துவ ஆலோசனை பெறுதல்வேண்டும். குறைமாத பிரசவத்தின்போதும் வலி ஏற்படும். சிலருக்கு வலி ஏற்படாமல் பன்னீர்க்குடம் உடைந்து நீர் வெளியேறும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்திய சாலையை அணுகவேண்டும்.

குறைமாத பிரசவத்தை முற்றாக தடுத்துநிறுத்த இதுவரை மருந்துகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் குழந்தையின் சுவாசப்பையின் வளர்ச்சியை தூண்ட சில ஊசி மருந்துகள் செலுத்தப்படும். குழந்தை குறைமாதமாக பிறக்குமாயின் அதற்கு தேவையான வளர்ச்சியை அடையும்வரை குறைமாத சிசு பராமரிப்பு நிலையத்தில் இருக்கவேண்டி வரலாம். (Premature baby unit)

**குருதிவகை Rh(-) நெகட்டிவ் என்றால் பிரச்சினையா?**

இல்லை. Rh(-) உள்ள தாய்மாரில் 1 வீதத்துக்கும் குறைவானோருக்கே பிரச்சினைகள் ஏற்படும். குருதியில் A,B,AB,O என வகைகள் உள்ளன. இவை மேலும் Rh(+), Rh(-) என இருபிரிவுகளாக உள்ளன.

இவ்வகைகளில் Rh(-) பிரிவைச் சார்ந்த தாய்மார்கள் கர்ப்பகாலத்தில் விசேடமாக கவனிக்கப்படுகின்றனர். ஏனெனில், Rh(-) தாய் ஒருவர் Rh(+) குருதிவகையுள்ள குழந்தையை கொண்டிருந்தால், சிலவேளைகளில் குழந்தையின் Rh(+) குருதி தாயின் குருதியுடன் கலக்கும் சந்தர்ப்பங்கள் எழலாம். அதன்போது தாயின் உடலில் Rh(+) விற்கு எதிரான காரணிகள் தோன்றும். இதன்விளைவாக, அடுத்த கர்ப்பத்தின்போது Rh(+) குழந்தை தங்கினால் அது பாதிக்கப்படலாம். இதனை தவிர்ப்பதற்காக Anti D எனப்படும் ஊசி குழந்தை பிறந்தவுடன் தாய்க்கு போடப்படும். (தேவை ஏற்படின் முன்னரே போடப்படும்)

தாய், தகப்பன் இருவரும் Rh(-) எனில் குழந்தை Rh(-) ஆகவே இருக்கும். பிறக்கும் குழந்தை Rh(-) எனில் ஊசி தேவையில்லை.

**விசேட கவனங்கள்**

1. நீங்கள் Rh(-) எனில் பிரசவத்திற்கு நீங்கள் செல்லும் வைத்தியசாலையில் Anti D உள்ளதா என அறியுங்கள்.
2. உங்கள் கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிபுணத்துவ ஆலோசனை பெறவும்.
3. குழந்தை பிறந்ததும் மஞ்சட்காமாலை (Jaundice) அல்லது குழந்தையின் உடல் நிலையில் வித்தியாசங்கள் ஏதேனும் தென்படின் வைத்தியரை உடனே அணுகவும்.

(தொடரும்)

# அந்த மூன்று நாட்கள்!



**பெண்களுக்கு** உண்டாகும் ஹோர்மோன் கோளாறுகளுக்கும், அவை உண்டாக்கும் பிரச்சினைகளுக்கும் பஞ்சமே இல்லை. அவற்றில் முக்கியமானது 'டியுபி' என்பப்படுகிற Dysfunctional uterine bleeding. காரணமே இல்லாமல் மாதவிலக்கின்போது இரத்தப்போக்கு அதிகமிருப்பவர்களுக்கு இந்தப் பிரச்சினை பின்னணியாக இருக்கலாம்.

இதைப் பற்றி விரிவாக தெரிந்துகொள்ளலாம். மாதவிலக்கான முதல் 2 வாரங்களில் பெண்களின் உடம்பில் ஈஸ்ட்ரோஜென் ஹோர்மோன் சுரக்கும். 2 வாரங்கள் கழித்துத்தான் கருமுட்டை வெளியாகும். அதுக்குப்பிறகுதான் பிராஜெஸ்ட்ரோன் ஹோர்மோன் சுரக்கும். இதுதான் முறை. சிலருக்கு கருமுட்டை உற்பத்தியே இருக்காது. ஈஸ்ட்ரோஜென் சுரப்பு அதிகமாகி, பிராஜெஸ்ட்ரோன் சுரப்பே இல்லாமல், மாதவிலக்கு தள்ளிப்போகும். எதிர்பாராத நேரத்தில் இரத்தப்போக்கு அதிகமாகும். இவர்களுக்கு பிராஜெஸ்ட்ரோனுக்கான மருந்துகள் கொடுத்துத்தான் இதை குணமாக்கவேண்டும்.

அடுத்து தைரோய்ட் பிரச்சினை இருக்கின்றவர்களுக்கும், அதிக இரத்தப்போக்கு இருக்கும். அதை சரிபார்க்க வேண்டியது அவசியம். மூளையிலிருந்து சுரக்கக்கூடிய புரோலேக்டின் ஹோர்மோன் அதிகமானாலும், இரத்தப்போக்கு அதிகமாகும். சோதனையின்மூலம், காரணத்தைக் கண்டுபிடித்து, சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கருத்தடை மாத்திரைகளுக்கு, இந்த ஈஸ்ட்ரோஜென், பிராஜெஸ்ட்ரோன் ஹோர்மோன்களை சமன்படுத்துகின்ற குணமுண்டு. கல்யாணமாகாத பெண்களுக்குக்கூட இந்த மாத்திரைகளை 3 முதல் 6 வாரங்களுக்குக் கொடுத்தால், ஹோர்மோன் பிரச்சினையை குணமாக்கி, இரத்தப்போக்கு கட்டுப்படும்.

மாத்திரைகளுக்கும் கட்டுப்படாத பட்சத்தில் மாதம் ஒரு ஊசி மூலமாக மருந்து செலுத்த வேண்டியிருக்கும். கல்யாணமாகி, குழந்தைபெற்ற பெண்களுக்கு இந்தப் பிரச்சினை இருந்தால், 'மெரீனா' என்ற கருவியை கர்ப்பப்பைக்குள்ளே செலுத்தலாம். இது காப்பர் டி மாதிரியான சின்னக் கருவி. சரியான அளவில் ஹோர்மோன் சுரக்க இது உதவி செய்யும்.

5 வருஷங்களுக்குப் பிறகு அதை எடுத்துக்கொண்டு, தேவைப்பட்டால் புதிதாக பொருத்திகொள்ளலாம். கல்யாணமாகாத மற்றும் குழந்தை பெறாத பெண்களுக்கு இது ஏற்றதில்லை.

இதுதவிர பலூன் தெர்மல் அப்லேஷன் என்று ஒரு சிகிச்சையும் இருக்கின்றது. கர்ப்பப்பைக்குள் பலூன் மாதிரியான ஒன்றைவைத்து, வெந்நீரை செலுத்துவோம்.

கர்ப்பப்பையின் உள்புறமுள்ள லேயர்களை அது சுருக்கிவிடும். அதன்விளைவாக அதிகப்படியான இரத்தப்போக்கு கட்டுப்படும். அடுத்து ஹிஸ்டெரஸ்கோபிக் என்டோமெட்ரியம் இந்த சிகிச்சையில் கர்ப்பப்பையின் உள்பக்கத்தில் உள்ள அழுத்தமான, கெட்டியான சவ்வை, பொசுக்கி, அகற்றுவோம்.

கர்ப்பப்பையை எடுக்காமலே இந்த சிகிச்சை சாத்தியம். மேல் சொன்ன அத்தனை சிகிச்சைகளுக்குமே குணமாகாதபோதுதான், கடைசி கட்டமாகத்தான் கர்ப்பப்பையை அகற்றுவதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

அதனால் அளவுக்கதிக இரத்தப்போக்கு உள்ளவர்கள், அதெல்லாம் அந்தந்த வயதில் அப்படித்தான் இருக்கும் என்கிற அலட்சியத்தில், பரிசோதனையையோ, சிகிச்சையையோ தவிர்க்கவேண்டாம். அதன் பின்னணியில் உள்ள காரணம் தெரிந்து, சரியான சிகிச்சையை எடுத்துக்கொண்டால், அந்த 3 நாட்கள், அவதியில்லாமல் இருக்கும்.

# இயற்கை மருத்துவக் குறிப்புகள்



**தலைவலி குறைய:** கற்பூரவல்லி, நல்லெண்ணெய், சீனி ஆகியவற்றை கலந்து நன்கு கலக்கி நெற்றியில் பற்றுப் போட்டு வந்தால் தலைவலி குறையும்.

**மூட்டு வலிகுறைய:** கஸ்தூரி மஞ்சள், சாம்பிராணி, கடுகு ஆகியவற்றை சம அளவு எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து சுடவைத்து அதை இளம் சூட்டில் சிறிது கற்பூரம் கலந்து வீக்கம், வலி உள்ள இடங்களில் தடவிவந்தால் மூட்டுவலி குறையும்.

**காதுவலி குறைய:** கடுகை அரைத்து காதுக்கு பின்புறம் பற்றுப்போட்டு வந்தால் குளிர்ச்சியினால் ஏற்படும் காதுவலி குறையும்.

**கண் உஷ்ணம் குறைய:** வெள்ளை நத்தியாவட்டைப் பூவை எடுத்து கண்களில் மேல்வைத்து அடிக்கடி ஒற்றிக்கொண்டே இருந்தால் கண்களில் ஏற்படும் உஷ்ணம் குறையும்.

**வாய்ப்புண் குறைய:** பலா இலையை எடுத்து சிறியதாக நறுக்கி தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி அதனுடன் பனங்கற்கண்டை கலந்து காலையில் குடித்துவந்தால் வாய்ப்புண் குறையும்.



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடிஸ் ஸ்பெஷல்



## அழகுடன் திகழ வேண்டுமா?

அழகு குறிப்புகள் எவ்வளவு சொன்னாலும், கேட்டுக் கொண்டேயிருப்பது, பெண்களின் குணம். ஆனால், அதைச் செயற்படுத்துவது ஒரு சிலரே! அதற்கு, குடும்பம், சூழ்நிலை, பொருளாதாரம், நேரமின்மை என, ஏதாவது ஒரு காரணம் இருக்கும். எளிய முறையில், சிக்கனமாக (நேரத்திலும்தான்) செய்யக்கூடிய டிப்ஸ்தான், கீழே கொடுக்கப்பட்டவை.

ஃ தினந்தோறும், குறைந்தது, 2 முதல் 3 லீற்றர் வரை, தண்ணீர் பருகுங்கள்.

ஃ பீட்ரூட் சாறை முகத்தில் பூசி, 15 நிமிடம் கழித்து, தண்ணீரால் கழுவுங்கள். முகம் பொலிவுபெறும்.

ஃ பன்னீரும், சந்தனத்தூளும் கலந்த கலவையில், ஐந்து துளி பால்சேர்த்து முகத்திலும், உடம்பிலும் பூசிக்கொள்ளுங்கள். 15 நிமிடம் சென்றபின், வெதுவெதுப்பான வெந்நீரில் தேகம் பளபளப்பாகும்.

ஃ உடல் பளபளப்பும், பொலிவும்பெற, தினமும், காலையில், தண்ணீரில் தேன் கலந்து குடியுங்கள்.

ஃ மஞ்சள் தூளும், சந்தனத் தூளும் ஒலிவ் எண்ணெயில் கலந்து, உடம்பில்பூசி, 10 நிமிடம் கழித்து குளிக்க, முகமும், தேகமும் மினுமினுக்கும்.

ஃ தோல் பளபளப்பாக இருக்க, விற்றமின் 'ஏ' மற்றும் விற்றமின் 'சி' நிறைந்த உணவு வகைகளை உட்கொள்ளுங்கள்.

ஃ புளோரின் சத்து நிறைந்த ஆட்டுப்பால், பாலாடைக்கட்டி, கரட், வெள்ளரி, முட்டைக்கோஸ் போன்ற காய்கறிகளை சாப்பிடுவதால் சருமம் வனப்புடன் திகழும்.

ஃ சோடியம் சத்துக் குறைந்தால், தோலில் சுருக்கம் ஏற்படும். வெயில் காலத்தில், சோடியம் சத்து மிகுந்த வெள்ளரிக்காய் சாப்பிட்டுவந்தால், தோல் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம். இது, உடல் சூட்டை தணித்து, குளிர்மை தரும்.

## 250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-400

**கேள்வி:** எத்தனை வயதுக்கு மேல் கருத்தரிக்கும் பெண்களுக்கு கருச்சிதைவு ஏற்படுகின்றது?

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 08.01.2014**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 400
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 398 இற்கான விடை :- டியர் லைஃப்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- வ.கோபாலகிருஷ்ணர், மந்திகை, புலோலி.

400

பெயர் : ..................

முகவரி : ..................

..................

தே.அ. அட்டை இல : ..................

விடை : ..................

..................

கையொப்பம் : ..................

# உரிமைகளும் உணர்வுகளும்

பெண்ணுரிமை, பெண் விடுதலை பற்றிப் பேசப்படும் இன்றைய காலகட்டத்தில்தான் பெண்களுக்கு எதிரான பல கொடுமைகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. அதாவது உருவத்தோற்றத்தில் மாத்திரமே ஆண்-பெண்களுக்கிடையே வேறுபாட்டை ஆண்டவன் படைத்துள்ளானே தவிர உணர்வு, திறமை, கல்வி, உழைப்பு ரீதியாக எந்த வேறுபாடும் இல்லை என்பதை ஆண்வர்க்கம் என்றும் நினைவில்கொள்ளவேண்டும்.

ஆண் - பெண் சமத்துவம் நடைமுறையில் பேணப்பட வேண்டும். பெண்கள் என்றால் இந்த வேலையை மட்டும்தான் செய்யக் கூடியவர்கள் என்ற எழுதாவிதி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பத்தில் முதலாவதாக பிறக்கும் குழந்தை ஆணாக இருக்க வேண்டும் என்று விரும்புவதும், பெண்ணாக பிறந்துவிட்டால் கடவுளை நொந்துகொள்வதும் படித்தவர்கள் முதல் பாமரர்வரை அனைவரது மனங்களிலும் இன்றும் நெருடலாகவே உள்ளது.

முதலில் இத்தகைய அடிப்படையான மனப்பாங்கு மாற்றமடைய வேண்டும்.

யுத்தத்தை எதிர்கொண்ட நாடுகளில் வாழும் பெண்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். உழைக்கும் தகப்பன், சகோதரன், கணவர் ஆகியோரை இழந்தவர்களாக, பெற்றோரை இழந்த அனாதைகளாக, காணாமல் போதல், கடத்தப்படுதல், இடப்பெயர்வு, பாலியல் தொந்தரவு, பாலியல் வல்லுறவு போன்ற பல சூழ்நிலைகளில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுபவர்களாகவும், சுமைகளைத் தாங்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

அதிகமான இடங்களில் பெண்களின் குடும்ப வறுமை, அறியாமை ஆகியவற்றை தமக்கு சாதகமாக்கி பெண்களை அடக்கி ஒடுக்குகின்றனர். இன்னும் சில ஆண்களோ தங்கள் முயற்சியின்மை, முன்னேற்றமின்மை, தங்களுக்கு ஏற்படுகின்ற கடினமான சூழலுக்கு தங்கள் மனைவியே காரணம் எனப் பழிபோட்டு அவர்களை அடக்கி ஒடுக்க முற்படுகின்றனர்.

பெண்கள் தம் வீடுகளிலும், வெளியிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சீராகக் கையாண்டு நிலைமைக்கு ஏற்றவாறு மனோதிடத்துடன் தன்னை நிலைநிறுத்துவதன் மூலமே உலகில் உயர்நிலையை



அடையமுடியும் என்பதை ஒவ்வொரு பெண்ணும் மனதில் கொள்ளவேண்டும்.

பெண்கள் தாம் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதனைச் சுயபரிசோதனை செய்பவர்களாக இருக்க வேண்டும். உலகையே உற்பத்திசெய்யும் தாய் தனது படைப்புக்கு முன் தோற்றுப் போவதும், தலைகுனிவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. வீட்டிலிருந்து அலுவலகங்கள் வரை அன்றாடம் பெண்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் அனைவரும் மதித்து நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

# பருவத்தே பயிர் செய்



இன்றைய இளவயது பெண்கள், பொருளாதாரரீதியில் முன்னேறுவதற்காக, தன்னுடைய திருமண வயதை தள்ளிப் போடுகின்றனர். அப்படியே, 24 - 26 வயதிற்குள் திருமணம் முடிந்தாலும், நல்ல நிலைக்கு வந்தபின், குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென, நினைத்து, பெரும்பாலானவர்கள் கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

கருத்தடை சாதனங்களை உபயோகித்து, பல ஆண்டுகள் கழித்து, குழந்தை பெறவிரும்பும் காலத்தில், அவற்றை நீக்கிக்கொண்டால், உடனடியாக கருத்தரிக்கலாம் எனத் திட்டம் தீட்டுகின்றனர். அது அவ்வளவு சுலபமல்ல. இவர்கள், இந்த எண்ணத்தை முதலில் மாற்றிக் கொள்ளவேண்டும்.

உடலில் மற்ற உறுப்புகளைவிட, பெண்ணின் இனப்பெருக்க உறுப்புக்கள் விரைவாக முதிர்ச்சி அடைந்துவிடுகின்றன. பெண்ணின் நடுத்தர வயதிலேயே, மாதவிலக்கு முற்றுப்பெறுவதால், கருத்தரிப்பதற்கான வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது.

பெண்ணின் வயதைப் பொறுத்து, அவளது கருமுட்டைகளும் பாதிக்கப்படுகின்றன. உடல்ரீதியாக, கருப்பை முதிர்ந்து, கருத்தரிப்பதற்கான வாய்ப்பை குறைக்கிறது.

முப்பது வயதுக்கு மேற்பட்டநிலையில், செயற்கை முறையில், கருத்தரிப்பு ஏற்படுத்திக்கொள்ளும் பெண்களின் கர்ப்பம் நிலைப்பதில், பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

வயது ஆகஆக, உடலின் ஆற்றல் குறைகிறது. மேலும், உடலில் ஹோர்மோன் மாற்றங்கள் பல நிகழ்கின்றன. உயர் இரத்த அழுத்தம், கருப்பையில் கழலைகள், சினைப்பையின் செயல்திறன் குறைதல், நோய் எதிர்ப்பு திறன் குறைவு, உடல் பருமன், நீரிழிவு, இரத்தச்சோகை போன்ற பிரச்சினைகளை, பெண்கள் சந்திக்கநேரிடுகிறது. இதில், பெரும்பங்கு வகிப்பது மாதவிலக்கு குறைபாடு. ஹோர்மோன் குறைவினால், ஒழுங்கற்ற உதிரப்போக்கு. அதாவது, விட்டுவிட்டு வருதல், சினைப்பையால், கருமுட்டைகளை உருவாக்க இயலாதநிலை போன்றவை ஏற்படுகின்றன.

கருத்தடை மாத்திரைகளை சாப்பிடுபவராக இருந்தால், அவற்றை நிறுத்திய மூன்று மாதங்களுக்கு பிறகு, கருத்தரிக்கும் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வது நல்லது. ஏனெனில், இந்த மூன்றுமாத இடைவெளியில், உடலில் உள்ள ஹோர்மோன்களின் நிலை, பழைய நிலைக்கு திரும்பிவிடும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

மேலும், 30 வயதுக்கு மேல் கருத்தரிக்கும் பெண்களுக்கு, கருச்சிதைவு அதிகளவில் ஏற்படுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல், பயணம், மனநிலை போன்றவை, இளம்வயதினரைவிட, வயது முதிர்ச்சி அடையும் நிலையில், அதிக பாதிப்பை ஏற்படுத்துவதால் கருச்சிதைவு தவிர்க்க இயலாததாகிவிடுகின்றன.

முதிர் வயது பெண்கள் பிரசவிக்கும்போது, இடுப்புக்கூட்டு பகுதியிலுள்ள எலும்புகளின் விரிந்துகொடுக்கும் தன்மை வெகுவாக குறைந்துவிடுவதால், சுகப்பிரசவம் நடப்பது அரிதாகிறது. இதனால், சிசேரியன் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

இவை அனைத்தும் அறிவியல்பூர்வமானது என்பதாலேயே, மருத்துவர்கள், உரிய வயதில், குழந்தைப்பேறு அடையவேண்டும் என்கின்றனர்.

உள்ளேன். அவரது பெயர், எங்கள் தூதரகக்குழுவில் எந்த இடத்தில் இடம்பெறும் என்பதையும் குறிப்பிட்டுள்ளேன்.

நான் அனுப்பியுள்ள ஆவணங்களை ஐ.நா.சபை, அமெரிக்காவில் வெளியுறவுத் துறையின்கீழ் இயங்கி வருகிற வெளிநாட்டு தூதரகங்களுக்கான அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும். அங்குதான் மரபுரிமைப்படி அனுமதி அளிக்கப்படவேண்டும்.

ஐ.நா. துணைப் பொதுச்செயலாளர் ஜன் எலியாசனையும் நேரில் சந்தித்துப் பேசினேன். தேவயானி தொடர்பான பிரச்சினைகளை ஐ.நா. அறியும். எங்கள் தரப்பில் அனைத்து ஆவணங்களையும் அனுப்பியாகிவிட்டது. அந்த ஆவணங்களுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை பதில் அளிக்கவேண்டும். இனி இந்த விவகாரம் ஐ.நா.வுக்கும், அமெரிக்க வெளியுறவுத் துறைக்கும் இடையேதான் கையாளப்படும்.

தேவயானியைப் பொறுத்தமட்டில், அவர் ஆலோசகர் பதவியுடன் தூதரக அதிகாரியாக இருப்பார். அந்தவகையில் தூதரக அதிகாரிக்கான அடையாள அட்டையை அவருக்கு எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தேவயானி ஐ.நா.வில் பணியில் சேர்ந்த பிறகுதான் அவருக்கு விலக்குரிமை உள்ளிட்ட சிறப்புச் சலுகைகள் வந்துசேரும், தேவயானிக்கு சிறப்புச் சலுகைகள் வழங்க வேண்டியது தொடர்பாக ஐ.நா. பங்களிப்பு ஏதும் கிடையாது, இதில் முடிவு எடுக்க வேண்டியது அமெரிக்காதான் எனத் தகவல்கள் கூறுகின்றன.

வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்குவது தொடர்பாக ஐ.நா.வுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே உடன்படிக்கை உள்ளது. தேவயானிக்கு புதிய பதவிகாரணமாக கூடுதல் சிறப்புச்சலுகை வந்து சேரமுடியும், ஆனால் கிரிமினல் வழக்கிலிருந்து விலக்கு கிடைக்குமா என்பது குறித்து தெளிவான தகவல் இல்லை.

தற்போது விசா மோசடி வழக்கில் சிக்கியு[illegible] நிலையில், தேவயானிக்கு சிறப்புச்ச[illegible]கைகளை அமெரிக்கா வழங்குமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. ஐ.நா.வில் பணியாற்றுவதற்கான அடையாள அட்டையையே அமெரிக்க வெளியுறவுத்துறை தான் வழங்க வேண்டும் என தகவல்கள் வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## தேவயானியைக் கைது செய்ததில் என்ன தவறு?

இச்சர்ச்சை தொடர்பில், செழியன் எனும் இந்திய எழுத்தாளர் வினவு தளத்தில் உண்மை நிலைவரங்களை விரிவாக ஆராய்கிறார். வாசகர்களுக்காக அதனைத் தொகுத்துத் தருகின்றோம்( செழியனுக்கும் வினவு தளத்திற்கும் நன்றியுடன்)

"கையால் மலம் அள்ளுவதையே யோகமாக செய்யச் சொல்லும் மோடி போன்றவர்களுக்கு சங்கீதாக்கள் தமது ஆண்டைகளுக்கு சேவை செய்யும் இந்து கர்மயோகத்திலிருந்து பிறள்வது மன்னிக்க முடியாத குற்றம்."

"தேவயானி கோப்ரகடேயின் தந்தை உத்தம் கோப்ரக[illegible] மகாராஷ்டிரா மாநில இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர். மும்பையில் பிறந்துவளர்ந்த தேவயானி மவுண்ட் கார்மல் பள்ளியில் படித்து சேத் ஜி.எஸ் மருத்துவக் கல்லூரியில் மருத்துவர் பட்டம் பெற்றார். மருத்துவராக பணிபுரிவதை தியாகம் செய்து, அவரது உறவினரான 1985ம் ஆண்டு இந்திய வெளியுறவுப் பணி அதிகாரி அஜய். எம் கோண்டானேவின் அடியொற்றி 1999ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுப் பணியில் சேர்ந்தார்."

"பாகிஸ்தான், இத்தாலி, ஜெர்மனி நாடுகளில் இந்திய தூதரகங்களின் அரசியல் பிரிவில் பணியாற்றிய பிறகு, பெரிதும் விரும்பப்படும் அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகத்தில் பணி நியமனம் பெற்றார்."

"2012ம் ஆண்டு நியூயோர்க்கில் இந்திய தூதரகத்தின் அரசியல், பொருளாதாரம், வணிகம் மற்றும் பெண்கள் விவகாரங்களுக்கான துணைத் தூதராக நியமிக்கப்பட்டதும், அங்கு தனக்கு வீட்டுவேலை செய்வதற்காக ஆள் தேட ஆரம்பித்திருக்கிறார் தேவயானி."

"சங்கீதா ரிச்சர்ட் என்ற பெண் மும்பையில் உள்ள தேவயானியின் வீட்டில் அவரை சந்தித்திருக்கிறார். அமெரிக்காவில் தனது வீட்டில் தங்கி குழந்தைகளை பார்த்துக்கொள்ளவும், வீட்டுவேலைகள் செய்யவும் ஆள்தேடிக் கொண்டிருப்பதாகவும் ரூ 25,000 சம்பளமும், ரூ 5,000 ஓவர் டைம் ஊதியமாகவும் தருவதாக சொல்லியிருக்கிறார். சங்கீதாவின் வீட்டுவேலை செய்யும் திறனை மதிப்பிடும்விதமாக தேவயானி தனது வீட்டில் அவரை பல நாட்கள் வேலை வாங்கியிருக்கிறார்."

"தூதரக பாஸ்போர்ட் பெறப்போவதாக சொல்லி சங்கீதாவின் சாதாரண இந்திய பாஸ்போர்ட்டை தேவயானி வாங்கிக் கொண்டிருக்கிறார்."

"ஒக்டோபர் (2012) மாதம் சங்கீதாவின் சார்பாக தேவயானி அனுப்பிய விசா விண்ணப்பத்தில், சங்கீதாவுடன் பேசியிருந்த சம்பளத்துக்கு மாறாக, வீட்டுவேலைகள் செய்வதற்கான மாதச் சம்பளமாக சங்கீதாவுக்கு $4,500 வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். நவம்பர் 1ஆம் திகதி விசா நேர்முகத்துக்கு சென்ற சங்கீதாவிடம் பணி ஒப்பந்தம் முதலான ஆவணங்களை கொண்டு வரும்படி கூறியிருக்கிறார் அமெரிக்க தூதரக அதிகாரி."

"அமெரிக்க வெளியுறவுத் துறையின் விதிமுறைகளின்படி அமெரிக்காவில் பணிபுரிய நியமிக்கப்படும் வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் தமது தனிப்பட்ட ஊழியர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், அல்லது வேலையாட்களை அமெரிக்கா அழைத்துவருவதற்காக ஏ-3 விசாவுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்ப நடைமுறையின்போது வேலைக்கு அமர்த்தப்படுபவரை நேர்முகம்கண்டு, அவர் வேலைசெய்யவிருக்கும் அமெரிக்க பகுதியில் பொருளாதாரரீதியாக சுதந்திரமாக வாழ்வதற்கு போதுமான சம்பளம் அவருக்கு வழங்கப்படும் என்பதை உறுதிசெய்ய வேண்டும்."

"அதற்காக பணிக்கு அமர்த்தப்படுபவரும், பணிக்கு அமர்த்துபவரும் கையொப்பமிட்ட ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படவேண்டும். அந்த ஒப்பந்தத்தில், என்ன வேலை செய்யப் போகிறார் (வீட்டுவேலை, தோட்ட வேலை, குழந்தைகளை பார்த்துக்கொள்ளுதல்) என்ற விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். வேலை நேரத்தையும், ஒரு வாரத்துக்கு வேலை செய்யும் கால அளவையும் வரையறுத்திருக்க வேண்டும். வீட்டுவேலை செய்பவர்கள் வாரத்துக்கு 35 - 40 மணிநேரம் வேலை செய்யவேண்டும். வாரத்துக்கு குறைந்தது ஒரு நாள் விடுமுறையாக வழங்கப்படவேண்டும். சம்பளத்துடன்கூடிய விடுப்புகள், மருத்துவ விடுப்புகள், விடுமுறை விடுப்புகள் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்."

"வேலைக்கான ஊதியம் அமெரிக்க மத்திய மற்றும் உள்ளூர் சட்டங்களின் படியான குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகமாக இருக்கவேண்டும். தங்குமிடம், மருத்துவச் செலவு, மருத்துவக் காப்பீடு, பயணம், உணவு போன்றவற்றுக்காக சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படக்கூடாது."

"வழக்கமான வேலை நேரத்துக்கு அதிகமாக வேலைசெய்தால் அந்த நேரத்துக்கு ஓவர் டைம் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். சம்பளம் ஊழியரின் வங்கிக்கணக்கில் போடப்படவேண்டும். அந்த வங்கிக் கணக்கை வேலை கொடுப்பவரோ அவரது குடும்ப உறுப்பினர்களோ கட்டுப்படுத்தக் கூடாது. ஊழியரின் பாஸ்போர்ட், பணி ஒப்பந்தம் முதலான எந்த ஆவணத்தையும் வாங்கி வைத்துக் கொள்ளக்கூடாது."

"இந்த விதிகளின்படி தேவயானி ஒரு பணி ஒப்பந்தத்தை தயாரித்திருக்கிறார். அதன்படி சங்கீதா வாரத்துக்கு 40 மணி நேரம் மட்டும் வேலைசெய்வார் என்றும், ஒரு மணிநேர வேலைக்கு $9.75 ஊதியம் (நியூயோர்க் சட்டப்படி குறைந்தபட்ச ஊதியம்) வழங்கப்படும் என்றும் விசா நேர்முகத்தில் சொல்லுமாறு தேவயானி சங்கீதாவுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். வேலை நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் மதியம் 12 வரை, மாலை 6.30 முதல் 8.30 வரை சனிக்கிழமைகளில் காலை 8.00 முதல் மதியம் 1 மணிவரை என்று சொல்லவேண்டும். ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் விடுமுறை வழங்கப்படும் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அமெரிக்க சட்டப்படி வழங்கப்படவேண்டிய சம்பளத்துடன் கூடிய விடுப்பு நாட்கள், மருத்துவ விடுப்பு நாட்கள், ஆண்டு விடுமுறை விடுப்பு நாட்கள் போன்ற விபரங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. ரூ 30,000 சம்பளம் குறித்து அமெரிக்க தூதரக அதிகாரிகளிடம் எதுவும் சொல்ல வேண்டாம் என்றும் தேவயானி கூறியிருக்கிறார்."

"இந்த பணி ஒப்பந்தத்தின் அடிப்படையில், நேர்முகத்திற்கு பிறகு நவம்பர் 14, 2012 அன்று அமெரிக்க தூதரகம் சங்கீதாவுக்கு விசா வழங்கியிருக்கிறது.

நவம்பர் 23ஆம் திகதி விமான நிலையத்துக்கு போவதற்கு முன்பு சங்கீதாவையும் அவரது கணவர் பிலிப்பையும் தனது வீட்டுக்கு அழைத்த தேவயானி சங்கீதாவை இன்னொரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட சொல்லியிருக்கிறார். அதன்படி சங்கீதாவுக்கு ரூ 25,000 மாதச் சம்பளமும், ஞாயிற்றுக் கிழமைகளிலும், கூடுதல் மணிகளிலும் வேலைசெய்வதற்கு ரூ 5,000 ஓவர்டைம் ஊதியமும் வழங்கப்படும். சம்பளமும் ஓவர்டைமும் சேர்த்து ரூ 30,000-ஐ தாண்டக் கூடாது. ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை என்பதைத் தவிர்த்து வேலை நேரம், வார வேலை நேர வரம்பு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு நாட்கள், விடுமுறை விடுப்பு நாட்கள் பற்றி இந்த ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை."

"நவம்பர் 24ஆம் திகதி தேவயானியும், சங்கீதாவும் நியூயோர்க் போய் சேர்கின்றனர். நவம்பர் முதல் ஜூன் வரை தேவயானியின் வீட்டில் வேலை செய்த சங்கீதா 40 மணி நேர வரம்பைவிட பெருமளவு அதிகநேரம் வேலை (ஒரு நாளுக்கு 18 மணிநேரம் வரை) செய்திருக்கிறார். அவருக்கு ஒத்துக் கொண்ட ரூ 30,000ஐ விட குறைவாகவே சம்பளமே கொடுக்கப்பட்டிருக்கிறது. போகப் போக வேலைச்சுமையும், எதிர்பார்த்த ஊதியம் கிடைக்காததும் தாங்கமுடியாமல் ஆகியிருக்கிறது."

"தனது வாராந்திர ஓய்வு நாளில் வெளியில் வேலை செய்யப்போவதாக அனுமதி கேட்டிருக்கிறார். சங்கீதா. "தூதரக விசா விதிகளின்படி அப்படி செய்வது அமெரிக்க சட்டங்களுக்கு விரோதமானது" என்று அதை தடை செய்திருக்கிறார் தேவயானி. தனக்கு சாதகமாக இருந்தால், அமெரிக்க சட்டங்களை மீறி குறைந்த சம்பளம் கொடுக்கலாம், அதிக நேரம் வேலை வாங்கலாம், விசா விண்ணப்பத்தில் பொய்யான தகவல்களை கொடுக்கலாம், அமெரிக்க தூதரக அதிகாரியிடம் பொய் சொல்லும்படி கற்றுக் கொடுக்கலாம். ஆனால், சங்கீதா ஒரு நாள் வெளியில் வேலைசெய்தால் அமெரிக்க சட்டம் மீறப்பட்டு விடும் என்ற அவரது அக்கறை சுயநலமே அன்றி வேறல்ல."

"ஜூன் மாதம் பொருட்கள் வாங்க கடைக்குப் போன சங்கீதா வீட்டுக்குத் திரும்பவில்லை. ஜூலை 8ம் திகதி சங்கீதா நியூயோர்க்கின் மன்ஹாட்டனில் உள்ள ஒரு குடியேற்றங்கள் தொடர்பான வழக்கறிஞரின் அலுவலகத்துக்குப் போயிருக்கிறார். அதைத் தொடர்ந்து இந்திய தூதரகத்திலிருந்து 4 அதிகாரிகள் அங்குபோய் சேர்ந்திருக்கின்றனர். பேச்சுவார்த்தையின் போதுதான் செய்த வேலைக்கான சம்பளமாக ஒரு தொகையையும், தனது சாதாரண இந்திய பாஸ்போர்ட்டையும் தந்துவிடும்படி சங்கீதா கேட்டிருக்கிறார்."

"இதற்கிடையில் தேவயானியின் தந்தையான ஐ.ஏ.எஸ் அதிகாரியின் செல்வாக்கில் இந்தியாவில் சங்கீதாவின் கணவர் பிலிப்பும் குழந்தையும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அமெரிக்காவிலிருந்து அவர்களுடன் தொலைபேசியில் பேசிய சங்கீதா, வழக்கறிஞர் அலுவலகத்தை விட்டுப்போக மறுத்திருக்கிறார். இந்திய தூதரக அதிகாரிகள் அவர் வெளிவருவதை எதிர்பார்த்து காத்திருந்திருக்கின்றனர். பின்னர், அமெரிக்கக் காவல்துறைக்கு புகார் கொடுக்கப்பட்டு அவர்கள் சங்கீதாவை அழைத்துச் சென்றிருக்கின்றனர்."

"அதே நாளில் இந்திய அரசு சங்கீதாவின் இந்திய பாஸ்போர்ட்டை ரத்து செய்தது. அமெரிக்காவில் சட்டவிரோத குடியேறி ஆகிவிட்ட அவரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்படி அமெரிக்க அரசிடம் இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்தது."

"டெல்லி உயர்நீதிமன்றத்தில் தேவயானி சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டின் அடிப்படையில் தேவயானிக்கு எதிராக இந்தியாவிற்கு வெளியில் எந்த வழக்கும் தொடரக்கூடாது என்று சங்கீதாவுக்கு தடைவிதிக்கும் உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது. சங்கீதாவின் கணவர் பிலிப்புக்கும் சம்மன் அனுப்பியது நீதிமன்றம். சங்கீதா மீது இந்தியக் குற்றப்பிரிவு 387, 420 மற்றும் 120 B-ன் கீழ் தெற்கு டெல்லி மாவட்டத்தின் மாநகர பொலிஸ் வழக்கு பதிவுசெய்து கைது வாரண்ட் பிறப்பித்தது. சங்கீதா இந்தியா திரும்பினால் அவர் உடனே கைது செய்யப்படுவார்."

"இதைத் தொடர்ந்து அமெரிக்க அரசு தேவயானிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. நியூயோர்க் நகரின் நீதித்துறை தலைவர் பிரீத் பரரா தேவயானியை கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறார். டிசம்பர் 12ம் திகதி தனது குழந்தைகளை பள்ளியில் விட்டு விட்டு திரும்பும்போது, அவரை அமெரிக்க அரசு மார்ஷல்கள் கைது செய்து அழைத்துச் சென்றிருக்கின்றனர்."

ஷஷிதேவயானியை அவரது குழந்தைகள் முன்பு கைதுசெய்ததாகவும், கை விலங்கு இட்டு அழைத்துச்சென்றதாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. போதை மருந்து பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களுடனும், பாலியல் குற்றவாளிகளுடனும் சேர்த்து வைத்திருந்ததாகவும், நிர்வாணமாக்கி சோதனை செய்ததாகவும் தேவயானி குற்றம் சாட்டியிருக்கிறார். தனக்கு தூதரக ஊழியர்களுக்கான விதிவிலக்கு இருப்பதாக பலமுறை கூறியும் அமெரிக்க அதிகாரிகள் அதற்கு செவி சாய்க்கவில்லை என்று தேவயானி கூறியிருக்கிறார்."

"நியூயோர்க் நகர நீதித்துறை அரசு வழக்கறிஞர் பிரீத் பரரா, தேவயானி குழந்தைகள் முன்பு கைது செய்யப்படவில்லை. அவருக்கு கை விலங்கு இடப்படவில்லை. அவரது தொலைபேசி கைப்பற்றப்படவில்லை. சுமார் இரண்டு மணி நேரத்துக்கு பல இடங்களுக்கு தொலைபேசியில் தொடர்புகொள்ள அனுமதித்திருக்கின்றனர். தமது காரில் அமர வைத்து தொலைபேசி அழைப்புகளை செய்ய ஏற்பாடு செய்த காவலர்கள், அவருக்கு கோப்பி கொண்டு கொடுத்ததுடன், சாப்பிடுவதற்கான உணவும் வாங்கித் தருவதாக கூறியிருக்கின்றனர். அமெரிக்க காவல்துறை நடைமுறையின்படி தேவயானி தனி அறையில் ஒரு பெண் அதிகாரியால் முழுமையாக சோதனை செய்யப்பட்டார். தனக்கோ, சக கைதிகளுக்கு ஊறு விளைவிக்கும்படியான எந்த பொருளையும் உடலில் மறைத்து வைத்திருக்கக் கூடாது என்பதை உறுதிப் படுத்தும் விதமாக இந்த சோதனை செய்யப்பட்டது என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்."

"இது இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் கர்ஜித்திருக்கிறார்கள். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழுவை சந்திப்பதற்கு நாடாளுமன்ற சபாநாயகர் மீரா குமார் மறுத்திருக்கிறார். காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியும், பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியும் அவர்களை பார்க்க மறுத்து விட்டிருக்கின்றனர். இந்திய தூதரகப் பெண் ஒருவருக்கு அமெரிக்காவில் இழைக்கப்பட்ட அநீதியைத் தொடர்ந்து தான் இந்த நிலையை எடுத்ததாக மோடி டுவிட்டரில் தெரிவித்திருக்கிறார்."

"அமெரிக்காவில் இந்தியத் தூதர் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக இந்தியாவில் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கான சிறப்பு சலுகைகளை ரத்து செய்திருக்கிறது இந்திய அரசு. அமெரிக்க தூதரக அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் சிறப்பு தூதரக அடையாள அட்டைகளை திரும்பக் கொடுத்து விடுமாறு உத்தரவிட்டுள்ளது. அமெரிக்க தூதரகங்கள் இறக்குமதி செய்யும் வெளிநாட்டு மதுவகைகள் இனிமேல் அனுமதிக்கப்படாது என்றும் அறிவித்திருக்கிறது. அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கான சிறப்பு விமான நிலைய அனுமதிச்சீட்டும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, "எங்க ஆள் மேல் கை வைச்சா உங்களுக்கு தருகிற மேட்டுக்குடி சலுகைகளை எல்லாம் பிடுங்கிக் கொள்வோம்" என்று செல்லமாக மிரட்டுகிறார்களாம்."

"அமெரிக்க தூதரகங்களில் பணிபுரியும் இந்திய ஊழியர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் இவற்றின் விபரங்களை கேட்டிருக்கிறது மத்திய அரசு. இந்தியாவில் உள்ள அமெரிக்க பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களின் பட்டியலையும் கேட்டிருக்கிறது. அமெரிக்க தூதரக அதிகாரிகளின் மனைவி அல்லது கணவர் முறையான பணி விசா இல்லாமலேயே பள்ளிகளில் பணிபுரிவது இதுவரை இந்திய அரசுக்கு தெரியாதாம்.

அமெரிக்க குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் தேவயானி கைது செய்யப்பட்டது போலவே, இந்தியாவில் அமெரிக்க தூதரக ஊழியர்களின் 'துணைவர்களாக' விசா வழங்கப்பட்டவர்கள் ஓரினச்சேர்க்கையை தடைசெய்யும் சட்டப் பிரிவின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் யஷ்வந்த் சின்ஹா கூறியுள்ளார்.

"நூறு டொலரை விட்டெறிந்தால், நம் வீட்டுவேலைகளை எல்லாம் செய்து, காலடியில் உத்தரவுக்கு காத்திருக்கும் வீட்டு வேலைசெய்யும் பெண்கள் கிடைப்பது தெற்கு ஆசியாவின் வரம். ஒரு சுல்தானைப் போல வாழ்வதற்கு உலகில் வேறு எந்த இடத்திலும் சாத்தியமில்லை."

இந்தியாவுக்கு வரும் மேற்கத்திய நடுத்தர வர்க்கத்தினரின் புகழுரை இது. வீட்டுவேலைகளை எல்லாம் செய்து, குழந்தையை பார்த்துக்கொண்டு, மிஞ்சியிருக்கும் சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு, கொடுத்த இடத்தில் தூங்கிக் கொண்டு வீட்டோடு வேலைசெய்யும் பெண் என்பது இந்திய நடுத்தர வர்க்கத்தின், குறிப்பாக வட இந்தியர்களின் கனவு வாழ்க்கையின் ஒரு இன்றியமையாத பகுதி. ஓய்வுநேரம், வார இறுதி, வருடாந்திர விடுமுறை என்பதெல்லாம் தேவைப்படாத உழைக்கும் செக்கு மாடுகள்போல பயன்படுத்தப்படும் வர்க்கம் அது."

"சம்பளத்தைக்கூட மொத்தமாக பீன்னர் கொடுத்தால்போதும். பண்டிகை, திருமணம் என்று வரும்போது ஒரு புடைவை வாங்கிக் கொடுத்து அடிமையை மகிழ்விப்பதோடு ஆண்டைகளின் கடமை முடிந்துவிடுகிறது. "குறைந்தபட்சம், இங்கே நல்ல சாப்பாடாவது கிடைக்கிறது. கிராமத்தில் இருந்தா அரைப்பட்டினியாக இருந்து கஷ்டப்படக் கூடியவங்களுக்கு இது சொர்க்கம்" என்று தன்னைத் தானே பாராட்டிக் கொள்கிறவர்கள் நவீன இந்தியாவின் "இந்த நவீன ஆண்டைகளின் பிரதிநிதிதான் இந்திய தூதரக அதிகாரி தேவயானி. வட இந்திய ஊடகங்களிலும், நாடாளுமன்றத்திலும், காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சி தலைவர்களின் அறிக்கைகளிலும், இணையத்திலும், பத்திரிகைகளிலும், தொலைக்காட்சி நிலையங்களிலும் தேவயானிக்காக வெளிப்படும் தேசப்பற்றை இந்த பின்னணியிலிருந்துதான் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது தேசத்தில் சங்கீதாக்களுக்கு உரிமை இல்லை."

# கல்முனைத் தமிழ் பிரிவு

## உள்நுழை பார்வை

> மூன்று இனத்தவர்களும் வாழும் பிரதேசம் என்ற வகையில் கல்முனையின் முக்கியத்துவம் அதன் பின்னணி தமிழ் பிரதேச சபையின் முக்கியத்துவம், அவசியம் என்பவை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தினையும் வலியுறுத்துகிறது என்றே எல்லோரும் கருத்து தெரிவிக்கின்றனர்.
>
> எப்படியிருந்தாலும் பிரதேசத்தின் பெரும்பாலான பராமரிப்புகள், அபிவிருத்திகள், மேம்பாட்டுத்திட்டங்கள் அனைத்து இனமக்களையும் உள்வாங்கும் வகையில் பாரபட்சங்கள் காட்டப்படாது இருக்குமானால் பிரச்சினைகள் தோன்றப் போவதில்லை.

பிரகஸ்பதி

கிழக்கு மாகாணத்தில் இலங்கையிலுள்ள அனைத்து இனங்களும் வாழுதல் என்பது முன்னுதாரணமானதாகக் காட்டப்படுகின்றது. ஆனால், அதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் உதாரணங்கள் வெளிப்பட்டவண்ணமே இருக்கும். அந்தவகையில் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகம் நல்லதொரு அண்மைய உதாரணமாகும்.

அந்தவகையில் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் குறித்து இந்த வாரத்தில் ஆராயப்படுகிறது.

கடந்த வாரத்தின் நடுப்பகுதியில் பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் கிழக்கைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் மிக்கதொரு கூட்டம் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. கிட்டத்தட்ட இந்த கல்முனைத் தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தினை வர்த்தமானி அறிவித்தல்மூலம் பிரகடனப்படுத்துவது என்று முடிவும் செய்யப்பட்டிருந்தது. அந்த அறிவித்தலை விடுக்கும் வகையிலேயே அமைச்சர் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார்.

ஆனால், அந்தத் தமிழ் பிரதேச செயலகம் அமைக்கப்படக்கூடாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர்கள் கூச்சலிடாக் குறையாக மறுப்பைத் தெரிவித்ததுடன், அந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்யவும் தயாராகியிருக்கின்றனர்.

தங்களுக்கு அரசியலிலும் நிருவாகத்திலும் பலம் இருக்கவேண்டும். அதே நேரத்தில் தமிழனுக்கு அவ்வாறான எந்தவொரு பலமும் இருக்கக்கூடாது என்பதற்கு இதனைவிடவும் நல்லதொரு உதாரணம் தேவையில்லை.

கிழக்கைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் தமிழ் பிரதேச செயலகங்கள், முஸ்லிம் பிரதேச செயலகங்கள் என தனித்தனியாக எந்த நிருவாக அலகும் இருந்ததில்லை. ஏனென்றால் அவை இரண்டும் சேர்ந்தே இருந்தன. அப்போது சேர்ந்து என்று சொல்வதைவிடவும் பிரிவு எதுவும் இருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். ஆனால் தமிழ் மக்களோ, தமிழ் அரசியல் தலைவர்களோ பிரிந்து நீங்கள் தனியான நிருவாகத்தினை அமைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவே இல்லை.

தமிழர்கள் இப்போது சேர்ந்திருப்போம் என்றுதான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனாலும், அதிகாரத்தினையும் நிருவாகத்தினையும் அரசியல் பலத்தினால் பெற்றுக்கொண்டும் பெறுவதற்கான முயற்சிகளையும் தொடர்ந்து செய்துகொண்டு தமிழர்கள் பலமுள்ளவர்களாக மாறிவிடக்கூடாது என்பதில் கவனமாகவே இருந்து வருகிறார்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்கள்.

கடந்த வாரத்தில், இந்த விவகாரம் குறித்து தமிழ் அரசியல்வாதிகள் பலர் பலவாறாகக் கருத்துக்களை வெளியிட்ட வண்ணம்தான் இருக்கிறார்கள்.

தமிழ் தேசியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்கள் உரிமைகளையும், சுயநிர்ணயத்தினையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் எல்லாம் குடிமுழுகிப் போய்விடும் என்பதனை மறந்துவிடுகிறார்கள்.

உபதமிழ் பிரதேச செயலகமாக நீண்டகாலமாக தனித்தியங்கும் கல்முனை தமிழ் உபபிரதேச செயலகத்தினை தரமுயர்த்தி அதனூடாக அரசசேவையினை விரிவுபடுத்தி மக்கள் துரிதமான சேவையைப் பெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்திற்காகவே தனித்தமிழ் பிரதேச செயலகம் என்ற நிர்வாகக் கட்டமைப்பை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பது மாத்திரமே அனைவரும் தெளிவடையவேண்டிய விசயமாகும்.

உலக நாடுகள் எல்லாவற்றையும் பெற்றுத்தரும் என்றும், வடக்கு மாத்திரமே முக்கியமானது என்றும் தலைவிரித்தாடிவிட்டு கறிகளுக்கு பயன்படும் கருவேப்பிலைபோல் கிழக்கை சற்று எட்டிப்பார்த்துவிட்டு இருந்துவிடும் நிலையும் காணப்படுகிறது. அதனைவிடவும் தெளிவாகச் சொல்வதானால், கிழக்கில் நடைபெறும் விடயங்கள் பற்றி பேசுவதற்கான பிரச்சினைகள் குறித்த முழுமையான தெளிவும் இல்லாதிருக்கிறது.

காலகாலமாக கல்முனை தொகுதி தமிழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புடனே இணைந்திருக்கின்றனர். இந்த இடத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாகச் செயற்படவேண்டும் என்பது முக்கியமானதொரு விடயமாகும் கல்முனை தமிழ் பிரதேச செயலக விடயத்தில் சமூக ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர் திறம்பட காய்களை நகர்த்தவேண்டும் என்பது மற்றொரு விசயம்.

கடந்த வருடம், கல்முனை தமிழ் பிரதேச சபையின் அவசியம் பற்றிய குரல்கள் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹிப்யினால் புறக்கணிப்படுகிறது என்ற வகையில் எழுப்பப்பட்டு இருந்தன.




மூன்று இனத்தவர்களும் வாழும் பிரதேசம் என்றவகையில் கல்முனையின் முக்கியத்துவம் அதன் பின்னணி தமிழ் பிரதேச சபையின் முக்கியத்துவம், அவசியம் என்பவை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தினையும் வலியுறுத்துகிறது என்றே எல்லோரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

எப்படியிருந்தாலும் பிரதேசத்தின் பெரும்பாலான பராமரிப்புகள், அபிவிருத்திகள், மேம்பாட்டுத்திட்டங்கள் அனைத்து இனமக்களையும் உள்வாங்கும் வகையில் பாரபட்சங்கள் காட்டப்படாதிருக்குமானால் பிரச்சினைகள் தோன்றப் போவதில்லை. இதனையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர் என்பது உண்மையாகும்.

தமிழ் பிரதேசங்களை தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் பிரதேசங்களை முஸ்லிம் அரசியல்வாதிகளும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்றோ, அல்லது ஒரு சமூகத்தினை மட்டுமே நாம் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றோ எண்ணம் தோன்றுமாயின் அது வீணான பிரச்சினைகளையே கொண்டுவர வாய்ப்பிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் வட்டிவெளி, குண்டுமடு, இன்ஸ்பெக்ரர் ஏத்தம், தாமரைக்குளம், ஊறணி, கனகர் கிராமம், றொட்டை, கோமாரி, சங்கமன் கண்டி போன்ற தமிழ்க் கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன. அதேபோன்று முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவின்கீழ் வீரமுனை, கோரக்கர், வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைத் தீவு, கணபதிபுரம் போன்ற தமிழ்க் கிராமங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. மட்டுமல்லாமல் இறக்காமம் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் மாணிக்கமடு என்ற தமிழ்க் கிராமமும், அட்டாளைச்சேனை முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் திராய்க்கேணி என்ற தமிழ்க் கிராமமும், நிந்தவூர் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் அட்டப்பள்ளம் என்ற தமிழ் கிராமமும் உள்ளன.

இதேபோன்று காரைதீவு தமிழ்ப் பெரும்பான்மை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி போன்ற முஸ்லிம் கிராமங்கள் உள்ளன. இவை போன்றதுதான் உத்தேச கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவின்கீழ் மருதமுனை, நற்பிட்டிமுனை, இஸ்லாமாபாத், போன்ற இடங்களில் வதியும் முஸ்லிம்கள் அடங்குகின்றனர்.

உத்தேச கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவு தெற்கே கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியை எல்லையாகக்கொண்டு வடக்கே பெரிய நீலாவணைக் கிராமம்வரை அதாவது வடக்கு எல்லை மட்டக்களப்பு மாவட்டமாகவும் கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே கிட்டங்கி வாவியையும் எல்லையாகக்கொண்டு அமையும்.

இதற்கு முன்னரும் தமிழ் பிரிவின் அவசியம் பற்றி கட்டுரை ஒன்றில் ஆராய்ந்திருக்கிறோம். என்றாலும், இந்த இடத்தில் கல்முனைத் தமிழ் பிரிவு பிரதேச செயலகம் உருவானமை குறித்த பின்னணியினை நாம் பார்த்தாகவேண்டும். அம்பாறை மாவட்டத்தில் 83களுக்குப்பிறகு அபிவிருத்தி, நிருவாகம், அரசியல் ஆகிய விடயங்களில் ஒரு பலமான உறவை மத்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள் முன்நிலைப்பட்ட தரப்பாக மாறியது. அதற்கான காரணம் அம்பாறை மாவட்டத்தில் கரையோர கடற்கரைப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தமை காரணமாகும்.

இதேநேரம், ஜனாதிபதி பிரேமதாச பிரதேச அபிவிருத்தி(கம்உதாவ) திட்டங்களை முன்வைத்தார். அவ்வேளையில் முஸ்லிம் சமூகம் இனரீதியாகவும், வியாபார ரீதியாகவும் அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் தங்களது ஆளுகையை வைத்திருந்தனர் என்பதுடன் விளிப்படைந்த சமூகமாகவும் மாற்றம் பெற்றனர்.

இப்படிப்பட்ட சூழலில் தமிழர்களின் நலனில் அக்கறை கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கவில்லை. ஏனெனில் தமிழர்களுக்கு அபிவிருத்தி, அரசியல், பொருளாதார ஆளுமைகள் இருக்கவில்லை. என்பதுடன் கல்வி, விவசாயத்துறைகளிலேயே அவர்கள் ஆளுமையைப் பெற்றிருந்தனர்.

இதேநேரம் தமிழ் போராட்ட இயக்கங்கள் கூடுதலாக இருந்த காரணத்தினால் தமிழர்கள் தேசத்திற்கு விரோதமாக, முஸ்லிம்களுக்கு எதிராக என்றவாறான முத்திரைகளும் தமிழ் மக்கள்மீது குத்தப்பட்டன. அதேநேரம் போராட்ட இயக்கங்கள் இரண்டாவது தலைமைகள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து உருவாவதிலும் விருப்பங்கொண்டிருக்கவில்லை என்பதுடன் அதற்கான வாய்ப்புகளையும் உருவாக விட்டிருக்கவில்லை.

இதன்காரணமாக அபிவிருத்தி, பொருளாதாரம், அரசியல் ஆளுமைகள் தமிழர் தரப்பில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. இதனால், அரசாங்கத்தால் செய்யப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் சரியான முறையில் தமிழர்களுக்கு கிடைப்பதில் பெரும் பிரச்சினைகள் காணப்பட்டன. அத்துடன் தமிழர்களுக்கு எதிராக செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்புக்களைக் காட்டக்கூடிய பலமும் தமிழர்களுக்கு இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இதனால் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தை முஸ்லிம் தலைமைகள் தங்கள் சமூகத்தின் நலனினைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தியதன் விளைவாகவே 1989ஆம் ஆண்டு கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டும் இன்றும் பிரதேச செயலகமாகத் தோற்றம் பெறவில்லை.

இவ்வாறான சூழலிலேயே இந்தத் தமிழ் தனிப்பிரிவு என்ற விடயம் பிரச்சினையாக பலவிதங்களிலும் முகிழ்ப்புவிட்டது. எல்லாவிதமான காய் நகர்த்தல்களையும், செய்து கைகூடும் வேளையில் முட்டுக்கட்டைகள் அதிகரிக்கின்றன. ஆனாலும் இதில் முஸ்லிம் அரசியல் தலைவர்களால் எதிர்ப்பு காண்பிக்கப்படுகிறதே தவிர காரணங்கள் திடமானதாகத் தெரியவில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடத்தில்தான், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைவர்களது நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை குலைக்கும் ஒரு சதி நடவடிக்கைபோலவே புலப்படுவது மட்டுமல்ல இன முரண்பாட்டை தோற்றுவித்து அதன்மூலம் அப்பாவி முஸ்லிம் மக்களின் அரசியல் ஆதரவினைப் பெறமுயற்சிக்கும் ஒரு தந்திரோபாயத்திட்டம் என்றுகூட எண்ணத்தோன்றுகின்றது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கும் கருத்தை ஞாபகப்படுத்தும் தேவையும் தோன்றுகிறது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் அமைக்கும் முயற்சிக்கு முஸ்லிம் தலைவர்களிடமிருந்து எழுந்துள்ள எதிர்ப்பலைகள் ஏற்படுத்தியிருக்கும் பிரதிபலிப்பு தமிழர்களுக்கெதிராக முஸ்லிம்களையும், அவர்களுக்கெதிராக தமிழர்களையும் சீண்டிவிடும் செயலாகவே அமையும் என்றவகையில், இனமுரண்பாடு யாருக்குத் தேவையே அவர்கள் கையிலெடுத்தும் கொள்ளலாம்.

யார் தனிப் பிரதேச செயலகங்களை உருவாக்கவேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்று செயற்பட்டு அமைத்துக் கொண்டார்களோ, யார் தனிக்கல்வி வலயங்களை நிலத் தொடர்பில்லாத போதும் செயற்பட வைத்தார்களோ அவர்களேதான் பிரிந்து தனியாக அதிகாரத்துடன், கல்முனை தமிழ் பிரிவு இயங்குவதற்கு தடையாகவும் இருக்கிறார்கள் என்றபடியால் அவர்களின் அனுமதிகள் பெறப்படவேண்டிய தேவை என்ன கட்டாயம் என்ற கேள்வியுடன் இந்தப் பத்தி நிறைவுக்கு வருகிறது.



# விளையாட்டு

ஜோசெப் கிருஷ்ணா

## சோகமான முடிவுகள்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் படுதோல்விகண்டு ஆஷஸ் கிண்ணத்தையும் பறிகொடுத்துப் பரிதாபமாக நிற்கிறது. இந்த நிலையில் 'திறமைக்குறைவைக் கூடுதலாக' வெளிப்படுத்தியவர் என்ற அவ்பெயருடன் நான்காவது டெஸ்ட் போட்டியில் இருந்து (பொக்கிசிஸ்டே டெஸ்ட் ஆட்டம்) இங்கிலாந்தின் விக்கெட் காப்பாளர் ஓரங்கட்டப்படக்கூடும் என்ற செய்திகள் வெளியாகின. இதற்கான காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன.



முப்பத்தொரு வயதாகும் பிரையர் சிறந்ததொரு வீரர் என்றாலும், ஆஷஸ் தொடர் அவருக்கு வாய்க்கவில்லை. இதுவரை மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் இவர் எடுத்த ஓட்டங்கள் 107 மட்டுமே. இதில் ஒரு அரைச்சதம் அடக்கம். அதுமட்டுமல்ல விக்கெட் காப்பும் சரிவரச் செய்யப்படவில்லை என்பதும் குற்றச்சாட்டு. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு ஸ்ரம்பிங் சந்தர்ப்பங்களையும், ஒரு காட்சையும் விட்டுவிட்டார் இவர். இந்த நிலையில் இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மீதமுள்ள நிலையில், அவற்றிலாவது தன்னை நியாயப்படுத்தவேண்டியது இங்கிலாந்தின் கடமை.

எனவே, மாற்றங்கள் அவசியம் தான். முன்னதாக, மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சுழல் பந்து வீச்சாளர் கிரேம் சுவான் தவிர்த்து விடப்படக்கூடும் என்று ஒரு பேச்சு இருந்தது. ஆனால் அப்படி நடைபெறவில்லை. உண்மையில் தனிநபர்களைச் சுட்டிக்காட்டுவதை [illegible] முழு அணியையுமே மீள்பரிசீலனைக்கு உள்ளாக்குவதுதான் சரியாக இருக்கும் போலத்தெரிகின்றது.

இருந்தாலும் முதல்பலியாக மெட் பிரையர் இருக்கக்கூடும். டேவிட் வோர்ணர் 13 இல் இருக்கும்போது இவர்விட்ட பிடி அவரை 112 இல் கொண்டுபோய் நிறுத்தியது. இதுவும் அணித்தலைவர் அலிஸ்ரர் குக்குக்கு கறுப்பு. இந்தவகையில் மெட் பிரையர் ஒதுக்கப்பட்டால் அந்த இடம் 24 வயதுடைய ஜொனி பெயர்ஸ்ரோவால் நிரப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறுதியாக இங்கிலாந்தின் பயிற்றுனர் அண்டி பிளவர் கருத்துக்கூறும்போது, மெட் பிரையர் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர்தான். ஆனால், தற்போது ஆடத் திறமை சற்றுக்குறைந்து காணப்படுவது துரதிர்ஷ்டம்தான் என்று கருத்துக் கூறியுள்ளார்.

# இலகுவானதல்ல



**ஐக்கிய** அரபு எமிரேட்சில் இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது தரவரிசை நாலில் இருக்கும் இலங்கை அணி, இத் தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தினால் தரவரிசை மூன்றிற்கு உயரும் வாய்ப்புகள் காணப்படுகிறது.

இலங்கை தரவரிசை நான்கில் 110 புள்ளிகளுடன் இருக்கிறது. பாகிஸ்தான் தரவரிசை ஆறில் 100 புள்ளிகளுடன் காணப்படுகின்றது. இந்நிலையில் இலங்கை அணி 4-1 அல்லது அதற்கு மேற்பட்டநிலையில் (5-0) பாகிஸ்தானை வீழ்த்தினால் மட்டுமே இங்கை அணி முன்னேறமுடியும். இதே வேளை பாகிஸ்தான் அணி தொடரை வெல்லுமாக இருந்தால் இலங்கை அணி ஆறாவது இடத்துக்குச் சரிவது என்று. பாகிஸ்தான் அணி இலங்கை அணியை வீழ்த்தினால் இரண்டு அணிகளும் 105 புள்ளிகளுடன் சமமாக இருக்கும்.

ஆனாலும் தசம வித்தியாசங்களில் இலங்கை பாகிஸ்தானைவிட முன்னணியிலேயே இருக்கும்.



இதேவேளை நடந்துமுடிந்துள்ள முதலாவது ஒருநாள் போட்டியைப் பார்க்கும்போது இரண்டு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் போராடும் அணிகளாகவே தெரிகின்றன. இலங்கை முதலாவது ஒரு நாள் போட்டியில், பதினொரு ஓட்டங்களால் தோல்விகண்டாலும், பாகிஸ்தான் 322 ஓட்டங்களை சவாலாக எடுத்துக்கொண்டு 311 ஓட்டங்கள் வரை எடுத்திருக்கிறார்கள். எனவே, எதிர்வரும் போட்டிகளும் மிகுந்த போட்டியுடையதாகக் காணப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், அனுபவ வீரர்கள் இளைய வீரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிகத் திறமையாக இலங்கை அணியில் தம் திறமையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

# இளைய நட்சத்திரம்

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரு நாள் தொடரை 2-0 என்று இழந்தது. மழை குறுக்கிடாவிட்டால் 3-0 ஆக இருந்திருக்கும் என்பதும் ஒரு ஊகம். எனவே எதிர்கொள்ளப்போகும் டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி தலைதூக்க முடியாத நிலை ஏற்படும் என்ற எதிர்வுகூறல்களும் அச்சங்களும் இருந்தன.

இதற்கப்பால் இன்னொரு எதிர்பார்க்கை இருந்தது. அதாவது சச்சினின் ஓய்வின் பின் அந்த நான்காவது இலக்கத்துடுப்பாட்ட நிலையை ஏற்கப்போகும் விராட் கோஹ்லி எப்படி அதனை நியாயப்படுத்தப் போகிறார் என்பது. இதற்கான பதில் இப்பொழுது கிடைத்துவிட்டது. துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து களமிறங்கிய இந்தியா இரண்டு விக்கெட்டுக்கள் இழந்து 24 ஓட்டங்கள் பெற்றிருந்தவேளையில் அடுத்து கோஹ்லி களம் இறங்குகிறார்.

அதன்பின் கோஹ்லி களம் இறங்குகிறார். அதன்பின் கோஹ்லி தனது அதிதிறமையைப் பதிவுசெய்தது பேசப்பட வேண்டிய விடயம். அதவாது 119 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தார்.

இதனை 18 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 18 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு சாதித்தார். இந்தநிலையில் முதல் நாள் ஆட்ட முடிவின்போது இந்தியா ஐந்து விக்கெட் இழப்பிற்கு 255 ஓட்டங்கள் என்றநிலையில் இருந்தது. நன்றி கோஹ்லிக்கே. சச்சினின் இடத்தை நிரப்புவதென்று தெரிந்தவுடனேயே நான் சில திட்டங்களைக் கொண்டிருந்தேன். அதோடு இந்த சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்த்துக்காத்திருந்தேன். உண்மையில் எனது சதம் என்பது கள நிலைமைகளைக் கருத்தில் கொள்வதும், மதிப்பதும், அதோடு என்னை நானே கௌவரப் படுத்திக் கொள்வதுமாகும் (கோஹ்லி அடக்க ஒடுக்கமாகப் பேசுவது இன்னொரு சந்தோஷம்) மறுநாள் காலையிலே மிகுதி ஐந்து விக்கெட்டுக்களும் இருபத்தைந்து ஓட்டங்களுக்குக் கவிழ்ந்துபோக இவரின் சதம் இன்னும் பெறுமானம் மிகக் கூடியதாக மாறிவிட்டது. இவரது சதத்தின்



இன்னொரு சிறப்பம்சம் ஏறத்தாள ஒரு நாள் போட்டியொன்றின் பாணியில் தென்னாபிரிக்க பந்துவீச்சு அசுரர்களை அடித்தாடியது தான். முதல் ஐம்பது ஓட்டங்கள் எடுக்க இவர் எதிர்கொண்ட பந்துகள் 76 மட்டுமே.

தொடர்ந்து சதம்பெற எடுத்துக் கொண்ட பந்துகள் 140 மட்டுமே. இது இவரது முதலாவது டெஸ்ட் சதமாகும். அக்கினிப்பரீட்சையை எதிர்கொண்டார் என்றே கூறவேண்டும். ஏனெனில், சச்சின் இல்லாவிடத்தில், அவரது அதிசிறந்த வேகப்பந்துவீச்சாளர்களை இன்று கொண்டுள்ளதென ஆபிரிக்க அணியை எதிர்த்து அந்தப் பரீட்சையை எதிர்கொள்வது இரண்டிலுமே இவர் தன்னை நியாயப்படுத்திவிட்டார். அற்புதமான இளம் வீரர் இவர். இந்திய அணியின் விலை மதிப்பற்ற சொத்து. எனினும், செயல்களிலும் சொல்களிலும் பணிவு பெருகட்டும். இவரின் மகத்துவமும் பெருகும்.

# இதென்ன பேச்சு

ஜேர்மனியின் பொருசியா டோட்மண்ட் அணியின் பிரதானதொரு உதை பந்தாட்ட வீரர் பியரி எம்ரிக் ஒபாமியாங். இந்தப் பருவத்தில் மோட்மண்ட் அணிக்காக இவர் ஒன்பது கோல்கள் போட்டு அசத்தியவர். இவர் பற்றி விசேட கவனம் இப்போது ஏனென்றால், வெளிவரும் செய்திகளின்படி உசேன்போல்ட்டைவிட வேகமாக ஓடக்கூடியவர் இவர் என்று தெரியவரும் செய்திகள்தான்.

இப்படி ஒரு செய்தி வெளிவந்ததும், ஜேர்மனியின் குறுந்தூர ஓட்டவீரர் ஜூலியன் ரூஸ், அப்படியாயின் ஒபாமியாங், உசேன் போல்ட்டுடன் ஓடி தன்னை நிரூபிக்கவேண்டும் என்று சவால்விடுத்துள்ளார்.



முன்னதாக ஒரு பயிற்சி நிகழ்வின்போது இவர் முப்பது மீற்றர் தூரத்தை 3.7 செக்கனில் கடந்துள்ளார். ஆனால், இதே தூரத்தை போல்ட் 3.78 செக்கன்களில்தான் கடந்துள்ளார்.

அதாவது 2009 இல் போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 செக்கன்களில் ஓடி உலக சாதனை படைத்தபோதே இந்த 30 மீற்றர் வேகம் பதிவு செய்யப்பட்டுள்ளது.



இந்த விடயம் சுவாரசியமானதுதான். இதில் இன்னொரு விடயம் உண்டு. போல்ட் ஏறத்தாள ஐம்பது மீற்றர்களைக் கடந்த பின்தான் எதிர்பாராத வேகத்தையும் சக்தியையும் வெளிப்படுத்துவார்.

எனவே கபொன் நாட்டைச் சேர்ந்த ஒபாமியாங் அப்படியாரு நிலையில் எத்தனை பிரதிபலிப்பைக் காட்டுவார் என்று தெரியவில்லை. இந்தச் சவாலெல்லாம் வீரர்கள் போட்டிபோட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் எதிராகச் சொன்ன விடயங்கள் அல்ல. ஏதோ செய்திகளாக வெளிவந்து ஒரு ஆர்வத்தைத் தூண்டியுள்ளன. ஜேர்மனியின் குறுந்தூர சாம்பியன் ரூஸ் கருத்துக் கூறும்போது, இதெல்லாம் வெறும் நம்பிக்கையின்பாற்பட்டதே ஒழிய நடைமுறையில் செய்துகாட்ட முடியாதவை என்று யதார்த்தமாகக் கூறியுள்ளார். எனினும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இருவரும் ஒரு கண்காட்சிப் போட்டியில் கலந்துகொண்டால் விளையாட்டு ரசிகர்களுக்கு அது விருந்தாகத்தான் இருக்கும்.



# “எப்ப எங்கட ஊருக்குப் போவம்”

அளவெட்டி, ப.உதயகுமார்

**“பாட்டி...** பாட்டி... உங்கை என்ன செய்யிறியள் பாட்டி..” அவசரமாக் குரல் கொடுத்தவாறு வந்தாள் இந்துகா!” “ஏன் இந்துகா இப்ப ஏன் கத்துறாய்...?” பாட்டி புறுபுறுத்தாள்.

உங்களுக்கு விசய மொண்டும் தெரியாதே பாட்டி.... எங்கடை ஏ.ஜீ.ஏ யின்ரை ஒவ்வீசிலை மீளக் குடியமரப் போற ஆக்களுக்கு பதிவு எடுக்கினமாம். கட்டாயம் போய்ப் பதிய வேணுமெண்டு உவ எங்கட பூமணி மாமி சொல்லி விட்டவா பாட்டி.... அதுதான் கூப் பிட்டனான்” இந்துகா சொன்ன வார்த்தை களால் பாட்டியின் மனம் கோபத்தில் சூடேறிக்கொண்டது.

உவங்கள் உங்கை என்னத்தைப் பதியப்போறாங்கள்... கண்டறியாத பதிவு. இப்ப விடுறம்... இந்தாவிடுறம் எண்டு சொல்லிச்சொல்லி எவ்வளவு காலம் பதிஞ்சு போட்டாங்கள். ஒண்டுமே நடக்கேல்லை. எனியும் போய் என்ன பலன்” சலிப்புடன் பதில் சொன்னாள் பாட்டி.

“என்ன பாட்டி யோசிக்கிறியள், பதியப் போகேல்லையோ” இந்துகா விடாப்பிடியாக கேட்டாள்.

“போவம்... அவங்கள் செய்யிறதை செய்யட்டும். பதியவேண்டியதுகளை பதிவம்” பாட்டி சலிப்புடன்கூடிய பேச்சின்மூலம் பாட்டியின் மன உளைச் சலைப் புரிந்துகொண்டாள் இந்துகா.

நீங்கள் பள்ளிக்கூடம் வெளிக் கிட்டுப்போங்கோ.. தம்பி சிவா எங்க போட்டான். அவனுக்கு பள்ளிக்கூடம் போகக் களவு. அவனையும் கூட்டிக் கொண்டுபோ. நான் போட்டுவாறன்”... என்றவள் குடும்பப்பதிவு அட்டையை எடுப்பதற்காக அறையை நோக்கிப் போனாள். சுவரிலே தொங்கிய படத்தைப் பார்த்தவளின் மனம் மேலும் சஞ்சலமாகியது.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் துளிகளைத் துடைத்தவாறு “நீ செத்துச் சிவலோகம் போட்டாய்... நான் இஞ்சை உன்ரை பிள்ளையளை வளர்க்கக் கஷ்டப்படுறன்” என்று சொல்லவேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

பிரதேச செயலகத்தில் சனக்கூட்டம் நிறைந்து காணப்பட்டன. காங்கேசன் துறை, மயிலிட்டி, தையிட்டி, பலாலி என்று அந்தப் பகுதியிலே குடியிருந்த வர்கள் நிறையப் பேர் கூடியிருந்தனர். ஒரே ஊரிலே குடியிருந்து இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக்கொண்ட வர்கள் இடம்பெயர்ந்து நீண்ட கால மாகிய போதிலும் மீளக்குடியமர வேண்டும் என்பதிலே அவர்களின் மனம் துடித்துக்கொண்டது. ஒருவரை ஒருவர் பார்த்து சுகதுக்கம் விசாரித் துக் கொண்டனர்.

அலுவலக உதவியாளர்மூலம் ஒவ்வொருவராக் அழைக்கப்பட்டு விபரங் களை பதிவுசெய்து கொண்டிருந்தனர். நீண்டநேரத்தின் பின்பு பாட்டியின் பெயரைச் சொல்லி உள்ளே வரும்படி அழைத்தார்கள்.

“கண்டறியாத பதிவு” புறுபுறுத்த வளாக உள்ளே நுழைந்தாள் அவள். “வாங்கோ அம்மா” ஒரு ஆணின் குரல் வரவேற்றது. “அம்மா உங்கடை சொந்த இடம் எது? மயிலிட்டி ஐயா” மயிலிட்டி. எத்தனையாம் ஆண்டு இடம்பெயர்ந்தனியள்? தொண்ணூறாம் ஆண்டு வீட்டைவிட்டு வெளிக்கிட்டன். உங்கடை வீடு கல்வீடா?, தோட்டக் காணி கள் இருக்குதா?, குடும்ப அங்கத்தவர்கள் எத்தனை பேர்?, இப்ப எங்க இருக்கிறியள்? நிவாரணம் எடுக்கிறியளா? கொழும்பிலை இருந்துவந்த அதிகாரிகளில் ஒருவன் கேள்விமேல் கேள்வி கேட்டான்.

அவனின் கேள்விகளால் எரிச்சல் அடைந்த பாட்டி “இஞ்சை பார் தம்பி உந்தக் கேள்வியளைத்தானே திரும்பத் திரும்பக் கேக்கிறியள். எங்களை சொந்த ஊரிலை இருந்து அடிச்சுக் கலைக்கும் போது ஒண்டுமே கேக்கேல்லை. இப்ப மீளக்குடியமர விடும்போது என்ன கேக்கிறியள். இவ்வளவு காலமும் சண்டை எண்டு சொல்லி எங்களை போகவிடாமை. மறிச்சு வைச்சிருந்தியள். இப்பதானே சண்டை முடிஞ்சுது. எங்களை எங்கடை ஊருக்குப்போகவிடுங்கோ... உங்கடை நிவாரணமும் வேண்டாம். உதவியும் வேண்டாம்” பொரிந்துதள்ளினாள் கிழவி.

கிழவியின் பேச்சிலே இருந்த தைரியம் இருந்தவர்களை ஒரு கணம் திக்குமுக்காட வைத்தது. “அம்மா உங்கடை நிலைமை விளங்குது, பதிவுகளை எடுத்துவரச் சொல்லித்தான் எங்களை அனுப்பி வைச்சிருக்கினம்” என்றான் அதிகாரிகளில் ஒருவன்.

“எங்கடை ஊருக்கு எங்களைவிட வேணுமெண்டு சனங்கள் சொல்லுது எண்டு போய் சொல்லுங்கோ” கோபமா சொல்லிவிட்டு வெளியேறினாள் பாட்டி.

சோர்ந்து வடிந்தவளாக வீடு வந்து சேர்ந்தாள் கிழவி. “என்ன பாட்டி என்னவாம்” இந்துகாவின் கேள்வி. “எல்லாம் பழைய பல்லவிதான்” பாட்டியின் பதில்.

பிள்ளைகள் மூவரினதும் முகங்களிலே பசிக்களை இருந்ததை கண்டுகொண்டாள் கிழவி. இந்தா இந்துகா இதிலை பாண் இருக்குது. வெட்டி மூண்டுபேரும் சாப்பிடுங்கோ... சொல்லியவாறு பாணைக் கொடுத்தாள். பசிக்களையில் பாணை பங்கிட்டு சாப்பிட்டனர்.

அவர்கள் சாப்பிடுவதையே வைத்த கண்வாங்காமல் பார்த்துக்கொண்டிருந் தாள் கிழவி. இவர்களை பார்த்து கொண்டிருந்தவளுக்கு ஒரு கணம் பழைய நினைவுகள் வந்து இரை மீட்டிக் கொண்டது.

மயிலிட்டிதான் கிழவியின் ஊர். வரும்போது கிழவியின் கணவர் ஷெல்லடி பட்டு இறந்துபோக மூன்று பிள்ளைகளுடன் இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து கடைசியில் முள்ளி வாய்க்காலில் குடியேறி அங்கிருந்தபோது தான் கிழவியின் இரண்டு ஆண் பிள்ளைகளும் ஷெல்பட்டு இறந்துபோக ஒரே ஒரு மகளும் மருமகனும் இந்த மூன்று குழந்தைகளுமாக அங்கே இருந்தனர்.

இறுதி யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் ஒரு நாள் நடைபெற்ற சண்டையில் மகளும், மருமகனும் செத்துப்போக பாட்டியும் குழந்தை களும் தனிமரமாகி அவர்களை வளர்த்து விடவேண்டும் என்ற துடிப்போடு... வீடாகப் போய்க் கூலி வேலைசெய்து குழந்தைகளை வளர்த்துவருகின்றாள். இந்துகாவும், சிவாவும் எப்படியோ தங்களைப் பார்த்துக்கொள்வார்கள், ஷெல்பட்டு இரண்டு கால்களையும் இழந்துபோன சிந்துயாவை எண்ணியே கிழவியின் மனம் பரிதவித்துக்கொண்டது.

“கிழவி.. .கிழவி” வாசலிலை கேட்ட குரல்மூலம் நினைவுகளிலிருந்து மீண் டெழுந்தாள் கிழவி. “என்ன கிழவி எப்ப வீட்டைவிட்டு வெளிக்கிடப் போகிறாய்? எனக்கு வீடுவேணும் எனியும் உங்களை இருக்கவிடமாட்டான். வீட்டைவிட்டு எழும் புங்கோ” வீட்டுக்காரி கண்டபடி பேசினாள்.

கிழவியும் தன் பக்கத்து நியாயங் களை எடுத்துக்கூறியும் வீட்டுக்காரி கேட்பதாக இல்லை.

“அம்மா நீங்கள் கண்டபடி பேச வேண்டாம். இந்த மாசம் முப்பதாம் திகதி உங்கடை வீட்டை விட்டுப்போவம் அது-வரை இருக்கவிடுங்கோ” அழுதாள் இந்துகா.

நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்து கொண்டிருந்தது. மீளக்குடியமர விடுவதில் எந்த முன்னேற்றமும் கிடைக்கவில்லை. இந்த நிலையில்தான் பத்திரிகையில் வந்த செய்தியொன்று பாட்டியை நிலை குலையவைத்தது.

இதுவரை மீளக்குடியமர விடப்படாத காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி போன்ற பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வை யில் சுவீகரிக்க முயல்வதாக செய்தியை அறிந்துகொண்டாள்.

இச்செய்தி காட்டுத் தீயைப்போல எங்கும் பரவிக்கொண்டது. மக்களெல்லாம் விழித்துக்கொண்டனர். நியாயம் கேட்டுப் போராட்டம் நடாத்த முடிவெடுத்தனர்.

இடம்பெயர்ந்து இதுவரை மீளக் குடியமர அனைவரும் பிரதேச செயலக வாசலில் கூடினார்கள். மக்கள் சுலோக அட்டைகளுடன்கூடி தமது உரிமை களை கேட்டனர். “இது எங்கடை மண், நாங்கள் விலைகுடுத்து வாங்கின மண், எங்கடை வீடுகளுக்கு விடு. எங்களை வாழவிடு. இல்லையேல் சாகவிடு” என்று பாட்டி ஆவேசமாகக் கத்தினாள்.

கூடியிருந்தவர்களும் சேர்ந்து குரல் கொடுத்தார்கள். குவிக்கப்பட்ட காவல் படையினர் மக்களுடன் முரண்பட்டனர். நாங்கள் எங்கடை வீட்டைபோக முடியாமல் தவிக்கிறம். எங்களை எங்கடை ஊருக்குப்போக விடவேணும். இல்லையெண்டால் இந்த இடத்தை விட்டு போகமாட்டம் என்று கத்தினாள். போராட்டம் முற்றியது. வாக்குவாதமாக மாறி தடியடி கண்ணீர்ப் புகைக்குண்டு என்று பிரச்சினை முற்றிக்கொண்டது.

மக்களெல்லாம் நாற்புறமும் சிதறி ஓடினார்கள். கிழவி மட்டும் இருந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை. “என்னை என்ரை ஊருக்குப் போகவிடு” என்று ஆவேசமாகக் கத்தினாள். அவளுடைய ஆவேசம் காரணமாக நெஞ்சுவலி ஏற்பட்டது. நெஞ்சைப் பொத்தியவாறு துடித்தாள். அவளுக்கு ஏற்பட்ட நெஞ்சுவலியால் அவள் துடித்துக் கொண்டிருந்தாள். கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டதால் புகையின் நடுவிலே பாட்டியின் உயிர் பிரிந்து விட்டது.

“ஊருக்குப் போகவிடு” என்று போராடியவர்களை காவல்படை அடித்துவிரட்ட பாட்டி மட்டும் உயிர் பிரிந்தவளாக கிடந்தாள்.

அன்று மாலை நாலு மணியைக் கடந்துவிட்டது. பாட்டியைக் காணாமல் குழந்தைகள் ஏங்கியபடி இருந்தனர். எந்தவொரு தகவலும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதேவேளை இவர்கள் குடியிருந்த வீட்டுக்காரி வந்தாள்.

“என்ன கிழவி இண்டைக்கு முப்பதாம் திகதியெல்லே... இன்னும் வீட்டைவிட்டு எழும்பேல்லையோ... கத்தினாள். “கொஞ்சம் பொறுங்கோ அம்மா. பாட்டியை இன்னும் காணேல்லை” இந்துகா பதில் கூறினாள். கொஞ்சமும் பொறுக்க முடியாது என்று வீட்டுக்காரி திட்ட உடுப்புக்களை எடுத்து பை ஒன்றில் போட்டுக்கொண்டு கால்களை இழந்த தங்கையை சிவாவுடன் சேர்ந்து தூக்கிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள் இந்துகா.

கொஞ்சத் தூரம் நடந்துபோனவர்கள் மரநிழல் ஒன்றின் கீழ் தங்கையை இருத்திவிட்டனர். மூன்று குழந்தை களும் எங்கே போவது என்றுதெரியாமல் மரநிழலின் கீழிருந்தனர். அப்போது உயிரற்ற பாட்டியின் உடலைச் சுமந்த படி வந்த வாகனமொன்று குழந்தை களைக் கண்டு நின்றுகொண்டது. உள்ளே கிழவி படுத்திருப்பதைக் கண்டு இந்துகா குமுறினாள். பாட்டி இறந்துபோனதை மூவரும் தெரிந்து கொண்டனர்.

வந்த வாகனத்திலிருந்து கிழவியின் சடலத்தை இறக்கிவிட்டு வாகனம் போய்விட்டது. வீடு, வாசல், காணி எல்லாம் இருந்தும் ஊருக்குப் போக விடாமல் இழுத்தடித்து வருவதனால் இந்தக் குடும்பத்திற்கு இந்த அவலம்.

விடயம் அறிந்த ஊர் மக்கள் அப்பகுதி கிராம அலுவலரிடம் முறையிட்டனர். அயல் வீடொன்றில் வைத்துப் பாட்டியின் உடல் தகனம் செய்யப்பட்டது.

கூட இருந்த பாட்டியும் போனதால் மூன்று பிஞ்சுகளும் தனிமரமாகினார் கள். இவர்களுக்கு உதவ யாருமே முன்வரவில்லை. பாட்டியின் இறுதியைத் தொடர்ந்து மூன்று குழந்தைகளும் அந்த வீட்டைவிட்டு வெளியேறினார் கள். கால்நடக்க முடியாத தங்கையை தூக்கியபடி சென்றவர்களுக்கு ஆலமர மொன்று நிழல்கொடுத்தது. போக இடமில்லாத இவர்கள் மூவரும் ஆலமர நிழலில் தஞ்சம் புகுந்துகொண்டனர்.

“அக்கா எனி எங்கை போறம்” சிவா கேட்டான்.

“அக்கா எப்ப நாங்கள் எங்கடை ஊருக்குப்போவம்” சிந்துயா கேட்டாள்.

எங்கடை ஊருக்குப் போவம் என்று எனக்கே தெரியாது.

மழைகொட்டத் தொடங்கியது. மூன்று குழந்தைகளும் போக இடம் இன்றி மழையிலே நனைந்துகொண்டி ருக்கின்றனர். இவர்களை இவர்களின் ஊருக்கு அனுப்பும்வரை இவர்களின் நிலை... இவர்களுக்கு உதவ யாரும் முன்வராத நிலையில் மரநிழல் மட்டும் இருப்பிடமாகி... சொந்த ஊர் திரும்பும்வரை... அவலங்களுடன் இவர்கள்..! வீடு, வாசல் இருப்பவர் களுக்கு இருந்தும் மீளக்குடியமர விடாதபடியால் கொட்டும் மழையில் நனைந்து விறைத்துவிட்டனர். மழையோ விடாமல் கொட்டிக் கொண்டிருக்கிறது....!!!

(யாவும் கற்பனையே)

## தையல் கடைக்காரரின் தந்திரம்



சிரிப்பதற்கு...

ஒரு கிராமவாசி பட்டணத்துக்கு வந்தபொழுது சேட் தைய்பதற்காக தையல் கடைக்குப் போனான். துணியை அளந்துபார்த்த தையல் கடைக்காரர் துணிபோதாது என்றும் சட்டை தைக்க முடியாது என்றான்.

கிராமவாசி பக்கத்திலிருந்த வேறு ஒரு தையல் கடையில் கொடுக்க. அவன் துணிகாணும். ஒரு நாள் கழித்துவரும்படி சொன்னான்.

இருநாள் கழித்துப்போக தையல் கடைக் காரனின் 4 வயது மகன் தனது துணியில் சட்டை போட்டிருப்பதையும் கவனித்தான்.

தைத்த சேட்டை போட்டுப்பார்க்க மிக அளவாக இருந்தது.

உடனே கிராமவாசி முதல்போன தையல் கடைக்காரருக்கு பக்கத்துக் கடைக்காரர் சேட் தைத்தும் அவரது 4 வயது மகனுக்கும் சட்டை தைத்திருக்கிறாரே என்று சொல்ல. அவருக்கு இருக்கிறது 4 வயது மகன். எனக்கு இருக்கிறது 12 வயது மகன் என்றானே. கிராமவாசி பதிலைக் கேட்டு திகைத்து நின்றான்.




# காதல் வலி



தூக்கம் மறந்து போனது
ஊக்கம் மறக்கவில்லை
அவனுக்கு! பொருள்தேடி
வர கடல் கடந்தது உடல்
மட்டும்தான்!

வெள்ளி நிலாவை
வெறித்துப் பார்த்தபடி
இருந்தவனை பார்த்து
நண்பன் கேட்டான்:

"எதையோ பறிகொடுத்தது
போல இருக்கிறாயே
ஏன்?" "ஆம் நண்பா!
கொடுக்கக்கூடாததை
கொடுத்துவிட்டு
வந்துவிட்டேன்!"

எதை கொடுத்தாய்?"
'உயிரை! என் உயிரை"
நண்பனுக்கு புரிந்தது இது
காதல் விவகாரம்!

இதயம்!
உயிர்! மூச்சு!
என்றெல்லாம்
உதடுகள் பேசத்
தொடங்கினாலே
உள்ளத்தில்
காதல் விதை
விழுந்து
விட்டதென்று
அர்த்தம்!

குறும்புக்காக
கிளறினான்:
"அப்படி
யானால் நீ
இங்கு ஜடமா?"
"அவள்
உயிரால்
வாழ்ந்து
கொண்டு
இக்கிறேன்!

அவள் நினைவை
சுவாசித்துக்
கொண்டிருக்கிறேன்?"

நண்பனுக்கு குறும்பு
போகவில்லை.
'அவளுக்காகத்தானே
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!"
அவன் சொன்னான்
விடை! நண்பன்
ஆடிப்போனான்:
"அவளுக்காக வாழ்வது
என்பது பொய்! அவளாகவே
வாழ்கிறேன் அதுதான் மெய்!

"இவ்வளவு அன்பு
இருந்தும் ஏன் பிரிந்து
இங்கு வந்தாய்?" பொருள்

இல்லாதாரை யார்
மதிப்பார்? பிரிந்து வந்தது
பொருள் தேட!"

"பிறந்த மண்ணில்
பொருள் தேடாமல் ஏன்
பறந்து வந்தாயோ?"
"சொந்த மண் நமக்கு
சொந்தமில்லாத
மண்ணாகிவிட்டது!"

சுவாசிக்கும் காற்றில்
அங்கே குருதி வாசனை!
நேசிக்கும் வாழ்க்கை
போர்ப் புழுதியில்!

யானை புகுந்த
வெண்கலக் கடையாக

நாம்வாழ்ந்த மனைகள்!
வந்தாரை வரவேற்றோம்
இப்போது எங்களை
வெளியேற்றுகிறார்கள்!
இன்முகம் காட்டினோம்
இப்போது எங்களிடமே
வன்முகம் காட்டுகிறார்கள்.
எறும்பைக்கூட எம்மவர்
மித்திரார் எம்மை மிதிக்க
எவரெவரோ நினைக்கிறார்!
அன்னையும் தந்தையும்
குலவிய மண்ணில்
அந்நியர் உலாவிட போரைத்
தொடுத்தனர்!

"யாரந்த அந்நியர்?
அடிமைச் சங்கிலி

பூட்ட முனையும்
அந்நியர் யாரவர்?"

"டச்சுக்காரர்கள்
நாடு பிடிக்கும்
பேராசைக்காரர்கள்!"
"எதிர்த்து நில்லாமல்
ஏன் நீர் வந்தீர்?
நீதியைக் காக்க
ஏன் நீர் மறந்தீர்?"

"மொத்தச் சுயநலம்
ஒப்புக் கொள்கிறேன்!
அதனால் என்னவள்
என்னையும்மீறி களம்
புகுந்தாளாம்!"

கேட்டவன் அதிர்ந்தான்
"என்னது உம்மவள்
களத்திலா?" "சோழனின்
தங்கை குந்தவை
நாச்சியார். வாளினை
ஏந்திய வேல்விழிக்காரி.

"என்னவள் அந்த
நாச்சியார் சந்ததி
பொன்னவள்
போனாள் போர்க்
களத்துக்கு"

"நல்லதுதானே நீர் ஏன்
கலங்கினீர்? போர்க்
களத்துக்கு கணவனை
அனுப்பிவிட்டு காத்திருப்பது
பெண் மட்டும்தானா?
காத்திரும் நீரும் களத்தில்
இருந்து திரும்பும்
வரைக்கும்!"

"கலங்கவில்லை.
கண்டிக்கவும் இல்லை
வெற்றிக்கு வாழ்த்து
கூறலாம் என்றால்
எட்டத்தில் அன்றோ
என்னவள் இருக்கிறாள்!"

சென்றுவா என்று
சொல்லக்கூட குரல்
எட்டா தொலைவு! உரம்
கொண்ட நெஞ்சினள்
திட்டம் கொண்ட
உடலினள் மறம்கொண்ட
புயலவள்!

என்னவள் எனக்கானவள்
மண்ணையே நேசித்து
கண் எனப் பூசித்து
மண்ணவள் ஆகினாள்!

"மீண்டும் அவள் முகம்
என்று காண்பது? மாண்டு
போகாமல் காதலே
காத்தருள்! வேண்டுவது
எல்லாம் மரணம்
தீண்டாமல் காத்தருள்
என்பதே!" நண்பன்
சிரித்தான். 'காதல் இப்படி
புலம்பவும் வைக்குமா?"
என்றவன் கேட்டான்.

"புலம்பவும் வைக்கும்
புலமையும் வழங்கும்
காதலே இன்பம்
காதலிக்கப்படுவது
பேரின்பம்!"

**"யாங்கண்ணின் காண**
**நகுப அறிவில்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு"**

*அதிகாரம்: 114 - குறள்: 1140*




**சிந்தியா! கூட்டமைப்பை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது மார்ச் மாதம் ஜெனீவா மாநாட்டில் ஏற்படக்கூடிய நெருக்கடியைக் தவிர்ப்பதற்கே என ஐ.தே.க. தெரிவிக்கிறதே?**

**எம்.தர்மன், வவுனியா.**

தர்மன், இதுவொன்றும் பரம இரகசியம் இல்லையே. ஜெனீவா மாநாட்டிற்கு முன்னர் ஆக்கபூர்வமான நடவடிக்கை களை மேற்கொள்ளும் படி பிரித்தானியா போன்ற நாடுகள் வெளிப்படையாகவே அழுத்தங்களை தெரிவித்துவருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தை தமிழர் தரப்பு எவ்வாறு கையாளப் போகின்றது என்பதுதான் தற்போதைய எதிர்பார்ப்பு. இச்சந்தர்ப்பத்தை சாதுரியமாகப் பயன் படுத்தப் போகின்றார்களா?, இல்லையேல் எமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. அரசாங்கத்துக்கு பல் உடையவேண்டு மென்று கடந்த காலங்களைப்போல் வீராவேசம் பேசி வீணடிக்கப்போகின் றோமா என்பது கூட்டமைப்பின் முடிவில்தான் தங்கியுள்ளது.

**சிந்தியா! பள்ளிவாசல்களின் மீதான தாக்குதலின் சூத்திரதாரிகள் மதங் களுக்கிடையிலான முரண்பாடுகளை அல்லவா தூண்டிவிடுகின்றார்கள்?**

**எம்.எவ்.இஷார், ஜின்னாநகர்.**

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாட்டிக்குக் கொண்டாட்டம்.' கடந்த காலங்களிலே இனங்களுக்கிடையிலான பிளவுகளை சாதகமாக்கி கொண்டாட்டம் நடத்திய வர்கள் இப்போது மதங்களைத் தூண்டி விட்டு தங்கள் கொண்டாட்டத்தைத் தொடர் வதற்கு முயற்சிக்கிறார்கள். இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தத்தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியம். இல்லை யென்றால் இந்த நாட்டை தொடர்ந்தும் கலகக்காரர்கள் ஆட்டுவித்துக்கொண்டே இருப்பார்கள்.

**சிந்தியா! இரணைமடு குடிநீர் திட்டத்தால் பாதிக்கப்படுவோம் என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் காணப்படுகின்றதே?**

**கா.ரமேஷ், கிளிநொச்சி.**

மழைவீழ்ச்சி குறைவான காலங்களில் சிறுபோக விளைச்சலை பூரணமாக மேற்கொள்வதற்கே இரணைமடு நீர் போதுமானதாக இல்லை என்ற யதார்த்தத்தில் இருந்தே கிளிநொச்சி விவசாயிகளுக்கு இத்திட்டம் தொடர்பான அச்சம் ஆரம்பிக்கிறது.

மறுபுறத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் பக்கத்திலிருந்து, இல்லையில்லை அணைக்கட்டு உயர்த்தப்பட்டு மேலதிகமான நீர் பெறப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே அது யாழ். மக்களின் குடிநீருக்குப் பயன் படுத்தப்படும் என்று சொல்லப் படுகிறது.

இன்னொருபுறத்தில் கிடைக் கின்ற 20ஆயிரம் மில்லியன் ரூபாய்க்களை உதறித்தள்ளாது இரணைமடு குளம் சம்பந்தப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். ஏனையவற்றை காலஓட்டத்தில் சீர்செய்துகொள்ளலாம் என்ற வகையான சிந்தனைகளும் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தீர்க்கமாகக் கலந்துரையாடி சந்தேகங்களைக் களைந்து குறித்த பிரதேசத்தின் நலன்சார்ந்து முடிவு-களை எடுப்பது நல்லது.

**சிந்தியா! அரச ஆதரவில் புலிகள் உருவாகப் போகிறார்களாமே?**

**ஆர்.நிரூசன், கொக்குவில்.**

கடந்த 3 தசாப்தங்களாக புலிகளை கட்டுப்படுத்துவதற்கு படாதபாடுபட்டவர்கள் மீண்டும் தங்கள் தலையிலேயே மண்ணை அள்ளிப்போட்டுக் கொள்வார் களா என்று நீங்கள் நினைக்கின்றீர்களா நிரூசன். இல்லையென நம்புவோமாக...

**மனதை குரங்கிற்கு ஒப்பிடுகின்றார் களே. அது ஏன் சிந்தியா!**

**சி.பவஜி, நுவரெலியா.**

பாவம் பவஜி. இதுகூடத் தெரியாமல் இருக்கிறீர்களே! அடிக்கடி மரம்விட்டு மரம் தாவுவது குரங்கு. அதேபோன்று மனித மனமும் ஒரு நிலையின்றி அடிக்கடி அலைபாய்ந்துகொண்டிருக்கும் தன்மை உடையது. அதனாலோ அல்லது பெரும்பாலானவர்கள் அடிக்கடி மனம்விட்டு மனம் தாவிக் கொண்டிருப்பதனாலும் இருக்கலாம்.

**சிந்தியா! இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம் மஹேல பாகிஸ்தான் டெஸ்ட் தொடரில் சேர்க்கப்பட்டுள்ளாரே. இது அணிக்குப் பலமாகுமா?**

**இ.விதூஷன், மன்னார்.**

நிச்சயமாக. மஹேலவின் பிரசன்னம் அணிக்குப் பலமாகவும், உத்வேகமாகவும் இருக்கும். புதியவர்கள் ஒரு நாள் போட்டிகளில் சிறப்பாகச் செயற்படுகின்ற போதிலும் டெஸ்ட் போட்டிகளில் சங்கா, மஹேல போன்றோரின் தேவையில்லை என்று சொல்லுமளவிற்கு யாரும் திறமையை நிரூபித்துக் காட்டவில்லை..

**சிந்தியா! இந்தியத் தூதுவர் தேவயானியை கைது செய்தது தொடர்பில் பணிப்பெண் சங்கீதா வின் பக்கம் யாரும் அனுதாபப் படுவதாகத் தெரியவில்லையே?**

**எஸ்.சாகித்தியன், மாத்தறை.**

இது தேவயானிக்கும் சங்கீதாவிற்கும் இடையிலான தகராறு என்ற பார்வையைக் கடந்து இந்திய அவமதிப்பு என்ற பரந்த பார்வைக்குள் சென்றுள்ளது. இந்திய மக்களைப் பொறுத்தவரையில் நாடு என்று வரும்போது அதனை எப்போதுமே முதன்மைப்படுத்தி வருபவர்கள்.

இந்தியாவில் ஊழல், இலஞ்சம், கீழ்த்தரமான உள்நாட்டு அரசியல் என்று என்னதான் இருந்தாலும் 'இந்தியா', 'ஜெய்ஹிந்' என்ற ஒற்றை வார்த்தைகளுக்குள் அனைவரும் ஒன்றுபட்டுவிடுவார்கள்.

அதனால்தான் தேவயானியின் செயலைவிட அமெரிக்காவின் செயல் பாரதூரமானதாகப் பார்க்கப்படுகின்றது.





ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன்,
தேச பந்து, கலாநிதி,
பேராசிரியர்,
P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்டத் தெளிவான ஜாதகக் குறிப்புக்களுக்கு...


**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**


23, Mayfield Road, Kotahena, Colombo - 13. Tel : 011 2342463/4, 011 2470615
Fax : 011 2344831 E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா.

# கண்டிக்கப்படவேண்டிய அடாவடிகள்...







ஏ.எச்.ஏ.ஹுஸைன்

***கண்ணெதிரே பார்த்திருக்க இஸ்லாமிய, ஹிந்து, கிறிஸ்தவ வழி பாட்டிடங்கள் மதவெறியர்களால் தகர்க்கப்படும்பொழுது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கும் படுமோசமான நிலைமைக்கு காவி உடைக்காடைத்தனம் கோலோச்சு கிறது. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இது நாட்டுக்கு நல்ல சகுனமல்ல.***

***புத்தசாசன அமைச்சின் கீழே-தான் மற்றைய மதங்களுக்கான விவகாரங்களைக் கவனிப்பதற்கென ஒரு பிரிவு இருப்பதும் மற்ற கிறிஸ்தவ மத, ஹிந்து மத, இஸ்லாமிய மார்க்க விவகாரங்களைக் கவனிப்பதற்கு புத்த சாசன அமைச்சின்கீழ் வரும் பிரிவுதான் பொறுப்பு என்பதும் விநோதமாகவும் நகைப்பிற்கிட மாகவும் இருக்கின்றது.***

**சகவாழ்வு,** மத நல்லிணக்கம், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு என்று என்னதான் உச்சியில் நின்றுகூவினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே நாட்டு நிலைமை காணப்படுகின்றது.

நல்ல விடயங்கள் சாண் ஏற முழம் சறுக்கும் கதை நமது நாட்டுக்குத்தான் மிகப் பொருத்தம் என்று கூறிக்கொள்வதில் நாம் எல்லோருமாகச் சேர்ந்து பெருமைப் பட்டுக் கொள்ளமுடியும்.

மேலேசொன்ன எல்லாவற்றையும் தாண்டி நமது நாடு ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே நீதி, ஒரே மொழி, ஒரே மதம்? என்று போய்க் கொண்டி ருக்கின்றதா என்று எண்ணத் தோன்று மளவுக்கு சமகால நிகழ்வுகள் உக்கிரமாகவும் அக்கிரமமாகவும் நடந்துகொண்டிருக்கின்றன.

இலங்கை ஒரு பல்மொழி பேசுகின்ற பல்லின சமய கலாசாரங்களைக் கொண்ட ஒரு நாடு.

நாட்டிலுள்ள ஒரு பிரஜை தான் விரும்பிய எந்த மதத்தைப் பின்பற்றவும் அதன்பால் வணங்கி வழிபடவும், தான் விரும்பிய மொழி யைக் கற்றுக்கொள்ளவும் பேசவும் எழுதவும் கருத்துக்களைக் கூறவும் அங்கீகரிக்கப்பட்ட உரிமையுண்டு.

இது நமது நாட்டு மக்கள் எல்லோரினதும் ஏகோபித்த அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டிருக் கின்றது.

அடிப்படை உரிமையாக அங்கீ கரிக்கப்பட்ட விடயங்களை ஒருவர் பின்பற்றி வாழ்வதற்கு யாரேனும் அல்லது எந்தத் தரப்பாயினும் தடையாக இருப்பார்களாயின் அது ஒரு உரிமை மீறலாகக் கருதப்பட்டு சமூக சகவாழ்வுக்கு குந்தகம் ஏற்படாதவகையில் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது எவரது பின்னணியையும் கருத்திற் கொள்ளக்கூடாது. இந்த விடயங்கள் இயல்பாகவே நடக்குமாக இருந்தால் யாரும் எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. இந்த நாட்டில் சிறுபான்மையும் பெரும்பான்மையும் பாதுகாப்பு உணர்வுடன் வாழலாம்.

ஆனால், இது இல்லாமல் போனது தான் இலங்கையில் சமாதானமும் சகஜ வாழ்வும் சாண் ஏற முழம் சறுக்கும் கதையாக மாறி இன்று எல்லோரையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் சூழ்நிலை உருவாக் கப்பட்டிருக்கின்றது.

ஆயுத வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அதனை விடப் பயங்கரமானதாக பெரும் பான்மையினர் பின்பற்றும் பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒரு சிலரால் மதத் தீவிரவாதமும் புரிந்துணர்வற்ற அச்ச சூழ்நிலையும் தலைவிரித்தாடுகிறது.

கடந்த ஆண்டு அனுராதபுரத்தில் தொடங்கிய பௌத்த தீவிர மத வெறியர்களின் சிறுபான்மை முஸ்லிம், ஹிந்து மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அடாவடித்தனங்கள் தம்புள்ளை, குருநாகல், ஹம்பாந் தோட்டை, பதுளை என்று வியாபித்து இப்பொழுது கொழும்பு தலைநகர் வரை எட்டிப் பிடித்துள்ளது.

**என்ன காரணம்?**

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் இந்த விடயத்தில் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் அவர்களே நீதிக்குப் புறம்பான தலையீடுகளையும் மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பது அவதானத்திற்குட்டுள்ளது.

இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக சமீபத்தில் கொழும்பு தெஹிவளைப் பகுதியில் நடந்த சம்பவம் தக்க சான்றாகும்.

இலங்கையின் தலை நகர் பகுதியான தெஹி வளையிலுள்ள மூன்று பள்ளிவாசல்களில் தொழுகைகளை நடத்த வேண்டாம் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை அங்கு சென்ற பொலிஸார் தொழுகையை நடத்தவேண்டாம் என்று சொல்லியதாக கைத் தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் றிஷாத் பதியுதீன் பி.பி.சி செய்திச் சேவைக்குத் தெரிவித் துள்ளார்.

அவ்வாறு அவர்கள் தொழுகையை முன்னெடுத் தால் அது பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற அச்சத்தால் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தன்னிடம் இந்த விடயத்தை கூறிய தாக அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இதையடுத்து அந்த மூன்று பள்ளிவாசல்களின் நிர்வாகிகளையும் தான் சந்தித்தாகவும் பின்னர் அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரியுடன் தான் பேசியதாகவும் இத்தகைய சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தினரிடையே மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது என்று தான் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**சட்டவிரோதமானவை**

அந்தப் பள்ளிவாசல்கள் அமைந் திருக்கும் பகுதியிலுள்ள சில பௌத்த மத குருமார்களும் பௌத்த சமூகத் தைச் சேர்ந்தவர்களும் அங்குள்ள பள்ளிவாசல்கள் சட்டவிரோதமானவை என்று பொலிஸாரிடம் கூறியதாகவும் அதையடுத்தே இந்த விடயத்தில் பொலிஸார் தலையிட்டதாக அவர்கள் தன்னிடம் கூறினர் என்று பொலிஸார் கூறியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், அவை சட்டவிரோதமானவை என்றால் அதை சட்டரீதியாக எதிர் கொள்ள வேண்டுமே தவிர வேறு வழிகளில் நடவடிக்கை எடுப்பது தவறு எனத் தான் சுட்டிக்காட்டியதை பொலிஸார் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுக்கள் நடத் தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த புதன் நள்ளிரவு சுமார் 11.30 மணியளவில் கொஹுவல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெஹிவளை யிலுள்ள மஸ்ஜிதுல் தாறுஸ்ஸாபி எனும் பள்ளிவாசல்மீது தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கற்களைக்கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக இந்தப் பள்ளிவாசலின் ஜன்னல் கண்ணாடிகள் உள்ளிட்ட பள்ளிவாசல் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே இந்தப் பள்ளிவாசலில் தொழுகைகளை நடத்தவேண்டாம், அதனை உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள் என்று பொலிஸார் கூறிவிட்டுச் சென்றதன் பின்னணியி லேயே பள்ளிவாசல்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பள்ளிவாசல் அல்குர்ஆனைக் கற்பித்துக் கொடுக்கும் ஒரு இடம் மாத்திரம்தான். அங்கே தொழுகை நடத்தமுடியாது என அந்தப் பகுதியிலுள்ள பௌத்த பிக்கு ஒரு-வரும் சில பௌத்த தீவிர உணர்வாளர் களும் பொலிஸாருக்கு நெருக்கடி கொடுத்து வந்த நிலையிலேயே குறித்த பள்ளிவாசலில் தொழுகை நடத்துவதை நிறுத்திக்கொள்ளுமாறு தாம் கேட்டுக்கொண்டதாக கொஹுவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொஹுவல பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு மேற்படி பள்ளிவாசலுக் கெதிராக முறைப்பாடு செய்திருந்தார் என பொலிஸார் கூறியுள்ளபோதிலும் அவ்வாறான முறைப்பாடு எதுவும் பொலிஸ் நிலையத்தில் அந்தப் பள்ளி வாசலுக்கெதிராகப் பதியப்படவில்லை என்று மேற்படி பள்ளிவாசல் நிருவாகத்தினர் கூறுகின்றனர்.

பள்ளிவாசல் சட்டரீதியானதாக இல்லை. அதனால் பொதுத்தொல்லை ஒன்று ஏற்பட்டு சட்டமும் ஒழுங்கும் சீர்குலையக்கூடிய வாய்ப்புள்ளது என்று பொலிஸார் கருதினால் அது குறித்து தக்க காரணங்களை நீதி மன்றத்தின் முன்னால் பொலிஸார் முன்வைக்கும் பட்சத்தில் நீதிமன்றம் தான் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவல்லாமல் பொலிஸாரே நேரடி யாகச் சென்று தடைசெய்வதென்பது புதுமையான விடயமும் குழப்பத்துக்கு வழிகோலுவதாகவும் இருப்பதாக இனசௌஜன்யத்தை விரும்புவோர் விசனப்படுகின்றார்கள்.

இது ஒருபுறமிருக்க இலங்கையில் குறிப்பாக நான்கு பெரிய மதங்களைப் பின்பற்றுவோர் வாழ்கின்றார்கள். அவர் களது மத உரிமையும் வழிபாடுகளும் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டிருக் கின்றன.

ஆயினும் மத விவகாரங்களுக்கென ஒரு அமைச்சு இருந்து அதிலே எல்லா மதங்களைச் சேர்ந்த அலுவல்களுக்கும் திணைக்களங்களோ அல்லது வேறு ஏதும் ஏற்பாடுகளோ இருந்து விட்டால் பரவாயில்லை.

ஆனால், புத்தசாசன அமைச்சின் கீழேதான் மற்றைய மதங்களுக்கான விவகாரங்களைக் கவனிப்பதற்கென ஒரு பிரிவு இருப்பதும் மற்ற கிறிஸ்தவ மத, ஹிந்து மத, இஸ்லாமிய மார்க்க விவகாரங்களைக் கவனிப்பதற்கு புத்த சாசன அமைச்சின்கீழ் வரும் பிரிவு தான் பொறுப்பு என்பதும் விநோதமாகவும் நகைப்பிற்கிடமாகவும் இருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் இந்த நாடு ஒரு மதவெறி வாதத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றதா என் கின்ற அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் நிகழ்வுகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன.

முஸ்லிம்கள் தங்களது மார்க்க வழிகாட்டல்களின்படி ஹலால் எனும் அங்கீகரிக்கப்பட்ட சுத்தமான உணவை உட்கொள்ள முடியாது, தங்களது பரம்பொருளை வணங்கி வழிபட முடியாது, இந்த நாட்டில் தாம் விரும்பிய இடத்தில் வாழமுடியாது, தமிழர்களும் முஸ்லிம்களும் தமது தாய்மொழியான தமிழில் தேசிய கீதத்தைப் பாடமுடியாது என்றால் இதனைவிட ஒரு அக்கிரமமும் அடாவடித்தனமும் வேறில்லை.

கண்ணெதிரே பார்த்திருக்க இஸ்லாமிய, ஹிந்து, கிறிஸ்தவ வழி பாட்டிடங்கள் மதவெறியர்களால் தகர்க்கப்படும்பொழுது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கும் படுமோசமான நிலைமைக்கு காவி உடைக்காடைத்தனம் கோலோச்சு கிறது. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இது நாட்டுக்கு நல்ல சகுனமல்ல.

# காதிலை பூ கந்தசாமி

“ நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை. ”

**அயல்நாட்டுத் தலைவர் :** கூட்டுத் தமிழ்க் கட்சிகளே வாருங்கள். உங்கள் குறைகளைக் கூறுங்கள்.

**கூ.த.க:** எங்கள் சார்பாக வழக்காட... மன்னிக்கவும், வாதாட எங்கள் தலைவர் இரா.சம்பந்தத்தை ஆயராக... சீ...சீ...சீ... ஆர்வமாக அழைக்கிறோம்.

**இரா.ச:** கனம் நீதிபதி அவர்களே! மன்னிக்கவும், கனம் அயலகத் தலைவர்கள் 'அவர்களே! எமது நாட்டில் அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினை ஒன்று இருக்கின்றது என்பது நீங்கள் அறிந்ததே.

**அ.த:** யெஸ் யெஸ்... அது எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

**கூ.த.க:** (கோரஷாக) உங்கள் பெருந்தன்மைக்கு நன்றி.

**இரா.ச:** (தன் அருகில் இருப்பவரிடம்) தம்பி சுமன், நோட் திஸ் பொயின்ட். அரசியல் தீர்வு அவசியம் என்று நான் சொன்னேன். மதிப்புக்குரிய அயலகத் தலைவர் “ஆம் தேவை” என்று ஆமோதித்தார் என்பதைக் குறித்து வைத்துக்கொள்ளும். நியூஸ் பேப்பர்களுக்குச் சொல்லவேணும்.

**சுமன்:** ( இரகசியமான குரலில்) இப்பவே சொல்லிவிடவா? யெஸ் மினிட். செல்போன் கையிலதான் இருக்குது. எஸ்.எம்.எஸ் அனுப்பினால் தான் நாளைக்கே கொட்டை எழுத்தில் போடுவார்கள்.

**இரா.ச:** நோ...நே... இப்போது வேண்டாம் இன்னும் பொயின்ஸ் வரும். நோட் பண்ணிக்கொள்ளும்.

**அ.த:** என்ன சீக்ரெட் டிஸ்கஸன்போல இருக்கு.

**இரா.ச:** நோ..நோ... நாங்கள் அகிம்சை வாதிகள், எதையும் வெளிப்படையாகத் தான் பேசுவோம். ( தமிழ்க் கூட்டுக் கட்சிகள் மத்தியில் ஒரு குரல் முணுமுணுக்கிறது. ஐயா எங்களைக் கிண்டல் செய்கிறார்போல் இருக்குது.)

**சுமன்:** (நமட்டுச் சிரிப்புடன்) சட்டப்படி அப்படிக் கிண்டல் செய்வதில் ஏதும் தவறில்லைத்தானே.

**இரா.ச:** அயலகத் தலைவர் அவர்களே! உங்கள் ஒத்துழைப்பு கறிக்கு உப்புப் போலவும், குழம்புக்கு தூள் போல வும் வழக்குக்குக் கண்கண்ட காட்சி போலவும் அவசியமாக இருக்கிறது எமக்கு.

**அ.த:** ஒத்துழைப்புத்தானே நோ... பிரப்பிளம்.

**இரா.ச:** (மெல்லக்குனிந்து) தம்பி சுமன் நோட் திஸ் பொயின்ட்.

சுமன் நீங்கள் ஆவேசமாக வலியுறுத்தியதாகவும், அவர்கள் ஆரவாரமாக வரவேற்றதாகவும் குறித்துவிட்டேன்.

**இரா.ச:** நீர் ஒரு கில்லாடி ஐசே.

**சுமன்:** யார் யாருக்கு எப்படியெல்லாம் ஆலோசனை சொல்லவேண்டும் என்பதை அறிந்து செய்வதுதானே எனது கடமை

**இரா.ச:** நண்பர் சுமன் ஒரு அருமையான பொயின்டைச் சொல்லுகிறார். நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் மேற்குப் பக்கமாக ஒத்துழைப்பு வேண்டிப் போகவேண்டும் என்கிறார்.

**அ.த:** (எரிச்சலாக) இப்போது ஒத்துழைப்பு இல்லை என்கிறீர்களா?

**சுமன்:** (தலைவரைத் தட்டி) கவனமாக வார்த்தைகளை விடுங்கள், ஏனையவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது நீங்கள் சொல்லப்போக அதில் பிழைபிடித்து உண்டு, இல்லை என்று பண்ணிவிடுவார்கள்.

**இரா.ச:** ஆமாம்... தம்பி சுமன் சொல்வது போன்று உங்கள் ஒத்துழைப்பு இப்போது போல் எப்போதும் இருக்க வேண்டும் என்கிறேன்.(சடைகிறார்)

**அ.த:** பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் செல்வதற்கு நீங்கள் அடம் பிடிப்பதாகக் சொல்லுகிறார்களே!

**இரா.ச:** இல்லை...இல்லை. அவர்கள் காலத்தை இழுத்தடித்துவிடுவார்களே என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**அ.த:** யோசிக்கிறோம் என்று சொல்லி நீங்களும் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறீர்கள்.

**இரா.ச:** அவர்கள் காலத்தை இழுத் தடிக்கமாட்டார்கள் என்பதற்கு நீங்கள் உத்தரவாரம் அளிப்பீர்களா?

**அ.த:** யெஸ்..யெஸ்.. அவர்கள் ஏன் காலத்தை இழுத்தடிக்கப் போகிறார்கள்? காலம்தானாகப் போய்க்கொண்டே இருக்கும். அவர்களும் காலத்துடன் போய்க்கொண்டே இருப்பார்கள். தமிழ் மக்களின் காலம்தான் எல்லோரையும் போட்டு இழுத்தடித்துக்கொண்டிருக்கிறது.

**இரா.ச:** தம்பி சுமன் நோட் திஸ் பொயின்ட்.

**சுமன்:** காலத்தை இழுத்தடிக்கக்கூடாது என்று சொன்னார். இரா.சம்மந்தம் அதனை ஏற்றுக்கொண்டார் அயலகத் தலைவர் (ஹீ...ஹீ...ஹீ...)

**இரா.ச:** அரசியல் தீர்வுபற்றிய முயற்சிகளில் உங்களுடைய பங்களிப்பு எப்படி இருக்கும் என்று சொல்ல முடியுமா?

**அ.த:** கடந்த காலங்களில் எப்படியெல்லாம் இருந்ததோ அப்படியெல்லாம் நிச்சயமாக இருக்கும், கவலையை விடுங்கள்.

**இரா.ச:** சபாஸ் சரியான செய்தி! ஊடகங்களுக்கு சரியான தீனி. ஐசே சுமன். இப்படியான செய்திகளை கொடுப்பதில் நீர் ஒரு தேனீ அல்லவா! அரசியல் தீர்வுக்கு ஒத்துழைக்க அயலகம் தயார் என்று ஒரு செய்தியை அடித்துவிடும்.


**பவன் :** வெயிட் வெயிட் அவசரப் படாதீர்கள். முதலிலே நான் என்னுடைய பெடியளுக்கு அனுப்பிவிடுகிறேன். பின்னர் நீங்கள் எதையாவது யாருக்காவது அனுப்பிக்கொள்ளுங்கள்.

**இரா.ச:** வெயிட் சுமன், பவனை குழப்பாதீர்கள். அவர் தன்னுடைய பெடியளுக்கு அனுப்பிய பின்னர் நீர் உம்முடைய வேலையைச் செய்யும்.

**அ.த:** ஓ.கே... ஓ.கே... உங்களுடைய புடுங்குப்பாடுகளை பார்த்துக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. இத்துடன் இந்தச் சந்திப்பை முடித்துக் கொள்ளலாமா? உங்களுக்கெல்லாம் திருப்திதானே.

**இரா.ச:** ஊடகங்களுக்கு செய்தி கொடுக்கும் அளவுக்கு காத்திரமான கருத்துக்களும் கச்சிதமான இணக்கங்களும் நிறைய ஏற்ற இறக்கங்களும் இந்தச் சந்திப்பிலே கிடைத்துள்ளன. தம்பி சுமன் அனைத்தையும் திறமையாக குறித்து வைத்துள்ளான். அந்தவகையிலே இந்தச் சந்திப்பு காத்திரமானதாக அமைந்திருக்கிறது. நன்றி வணக்கம்.

## விதியால் மூடமான மதியாளர்



அப்படியும் முதலாளி கொஞ்சம் அயர்ந்த சமயத்தில் மெதுவாக கிடங்கில் போய் உட்கார்ந்து கொண்டு ஆங்கில இலக்கியங்களைப் படிக்க ஆரம்பித்துவிடுவார்.

இரண்டு வருஷம் - இருபத்தி நாலு மாதங்கள் - எழுநூற்று முப்பது நாட்கள் - எப்படியோ கஷ்ரப்பட்டு, உயிரை வளர்க்க, பசியைத் தணிக்க பாடுபட்டு உழைத்தார். அதற்கு மேல் அவரால் அந்தக் கடையில் இருக்க முடியவில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் எழுந்திருந்தார். காலை ஆகாரத்துக்காகக் காத்துக் கிடக்கவில்லை. வெறும் வயிற்றோடு , பசி குடலைச் சுருட்டிப் பிடிக்க, பதினைந்து மைல்களைத் தள்ளாடித் தடுமாறி கடந்து, தாயாரைக் காண ஓடிவந்துவிட்டார். தாயாரைக் கண்டதும் தான்பட்ட கஷ்டங்களை எல்லாம் சொல்லி நெஞ்சு வெடிக்கப் பிரதாபமாக அழுதார். இனி தன்னால் அந்த வேலைக்குத் திரும்பிப்போக முடியாது என்று சொல்லிவிட்டார். அந்தக் கடையிலே, அந்த நீசமான வேலைசெய்து கொண்டிருப்பதைவிட தூக்குப் போட்டுக்கொண்டு, தற்கொலை செய்துகொண்டு விடுகிறேன் என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

அதன்பிறகு தான்படித்த பள்ளிக்கூட வாத்தியாருக்கு தன்மோசமான வறுமைநிலையை விளக்கி, மனமொடிந்து போய் இருக்கும் தனக்கு உலகில் வாழவே விருப்பமில்லை என்று தெரிவித்து ஒரு நீண்ட கடிதம் எழுதினார்.

**(தொடரும்)**

# இந்தவாரம் உங்கள் பலன்

(26.12.2013 தொடக்கம் 01.01.2014 வரை)

### மேடம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்து இருந்த நபர்களின் ஆதரவுகள் கிடைக்கும். குழந்தைகள் உயரமான இடங்களில் கவனமுடன் ஏறி இறங்குவது நல்லது. உத்தியோகத்துறையினர்கள் மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். வடக்குத்திசையில் இருந்து நல்ல செய்திகள் கிடைக்கும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

குலதெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் போன்றவை கிடைக்கும். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்கள்மூலம் நல்ல இலாபம் அடைவார்கள். வீடு மாற்றம் செய்வதற்கான புதிய முயற்சிகளில் வங்கிகளின் ஆதரவுகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலைகள் உருவாகும். உத்தியோகத் துறையினர்களுக்கு பணியிட நிரந்தரமும் சம்பள உயர்வுகளும் உண்டாகும். அலுவலகங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னிடைவு உண்டாகலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு இதுவரையில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடைபெற வாய்ப்புகள் உள்ளது. படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும்.

### கடகம்

எதிர்பாராத விதமாக நண்பர்களால் சில ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் அடைவீர்கள். வரவேண்டிய மனைவி வழிச்சொத்துக்களும் மற்றும் பணமும் கை வந்துசேரும் காலமாகும். தந்தை - மகன் உறவுகளில் காரணமற்ற முன்கோபத்தால் பிரச்சினைகள் உருவாகலாம். புதிய வேலைவாய்ப்புகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த நீண்டகால மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் கிடைக்கும் காலமாகும்.

### சிங்கம்

நீண்டகாலமாக வராத பணம் காவல் துறையினரின் உதவிகளால் திரும்பி வந்துசேரும். நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணங்கள் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கைக்கு வந்துசேரும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு மனநிம்மதியை இழக்கவேண்டாம். புதிய பெரிய மனிதர்களின் 'தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். 'விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். காதலர்களுக்கு மகிழ்ச்சியாக காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. வேண்டாத விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். நண்பர்களால் வீண் பொருட் செலவுகள் வந்துசேரலாம். தந்தை வழியிலான சொத்துக்கள் கைவந்துசேர வாய்ப்பு உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். நீண்டகாலமாக விடுபட்டுப்போன பழைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் புதிய தொடர்புகள் ஏற்படலாம்.

### துலாம்

தாயின் உடல்நிலையில் இது நாள் வரையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும் காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்ப கிடைக்கும். அரசு வழக்குறைஞர்கள், தபால் தந்தித் துறையினர்கள், வங்கிப் பணியாற்றுபவர்கள், எழுத்தாளர்கள், பேனா பென்சில்கள் போன்ற பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர்கள் கணிதம், எழுத்துத்துறை சார்ந்தவர்கள், அச்சுத்தொழில் செய்பவர்கள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள்.

### விருச்சிகம்

உடல்நிலையில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்து போகும். காதல் விசயத்தில் நண்பர்களின் உதவியால் நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லதாகும். வரவேண்டிய பணம் கிடைக்க இன்னும் சற்றுக்கால தாமதம் ஆகலாம். வேலையில்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளுக்காக பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்ட தூர உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். தந்தை-மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். புதிய வீடு, நிலம் போன்றவற்றை விலைக்கு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும்.

### தனுசு

உடல்நிலையில் உஷ்ணம், சளி போன்ற தொல்லைகள் வந்துபோகும். பொதுத்தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மனநிறைவை அடைவீர்கள். நீண்ட காலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் ஆதரவுகளால் திருமணம் நடைபெறும். குலதெய்வ ஆலய வழிபாடுகளுக்கான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. பழைய வீடு மற்றும் வாகனங்களை விற்று புதிய வீடு வாகனம் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள்.

### மகரம்

பிரிந்துபோன கணவன் - மனைவி திரும்ப ஒன்று சேருவதற்கான வாய்ப்பு உள்ளது. நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். மனைவி வழியிலான சொந்த பந்தங்களுடன் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துபோகலாம். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நோய் தீரும். ஆலயப் பணிகளைச் செய்வோர்கள், கம்பியூட்டர் சாதன வியாபாரிகள், இனிப்பு தின்பண்ட வியாபாரிகள், ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள்.

### கும்பம்

நீண்டகாலமாக உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் சற்றுக் குறைந்து காணப்படுவதன் மூலம் நிம்மதி அடையலாம். வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். குடும்பத்தில் நடக்க இருக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது சிறந்ததாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. உடல்நிலையில் கண், காதுகளில் மிகக் கவனமாய் இருப்பது நல்லது. நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். பிள்ளைகளின் உடல் நிலையில் கவனமுடன் இருப்பது நல்லது. உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகும். பிரிந்துபோன கணவன் - மனைவி திரும்ப ஒன்று சேருவார்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)



## அதிசயம்

சீனாவின் ஜியாங்ஸி மாகாண தலைநகரான நன்சாங்கில் ஒன்றாக இணைந்த இரட்டைத் தலைகள், இரு மூக்குகள், இரு வாய்கள் மற்றும் 3 கண்கள் என்பவற்றுடன் விசித்திர பன்றிக்குட்டியொன்று பிறந்துள்ளது. மேற்படி பன்றிக்குட்டியானது குறிப்பிட்ட பன்றியொன்றால் அண்மையில் ஈன்றெடுக்கப்பட்ட 10 குட்டிகளில் ஒன்றாகும்.

இந்தப் பன்றிக்குட்டி தாய் பன்றியிடமிருந்து எந்த வாயால் பாலை உறிஞ்சிக்குடிப்பது என்பதில் போராட்டத்தை எதிர் கொண்டுள்ளது. ஒரு வாயால் பாலை உறிஞ்ச முற்படுகையில் மற்றைய வாயும் அப்பாலை உறிஞ்ச முற்படுவதால் இரு வாய்களாலுமே பாலை உறிஞ்சமுடியாத பரிதாபத்துக்கு அது உள்ளாகியுள்ளது. மேற்படி பன்றிக்குட்டி உயிர்பிழைப்பது சிரமம் என மிருக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.



## சப்பாத்துக் கார்

இராட்சத சப்பாத்து என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. இது சப்பாத்து வடிவிலே தயாரிக்கப்பட்ட சொகுசுக் கார் என்று தகவல் ஒன்று சொல்கிறது. கார் தயாரிப்பு நிறுவனம் ஒன்று சப்பாத்துத் தயாரிப்பாளர் நிறுவனம் ஒன்றுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்டதாக அந்தத் தகவல் சொல்கிறது. முகப்புத்தகத்தில் பகிரப்பட்ட இத்தகவலை உங்களுடன் நாம் பகிர்ந்துகொள்கின்றோம். இதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தும் பொறுப்பையும் உங்களின் கைகளிலோயே தந்துவிடுகின்றோம்.





## எளிமை

சைரைன் ஒலி எழுப்ப பாதுகாப்பு வாகனங்கள் புடைசூழ வீதியில் செல்பவர்களையெல்லாம் ஓரத்தில் தள்ளிக்கொண்டு பறந்துபோகும் எங்களின் தலைவர்களை பார்த்துப்பழகிப்போன எனக்கும் உங்களுக்கும் இந்தப் படம் ஆச்சரியங்கொடுப்பதில் ஆச்சரியமில்லை. ஆம். குறுந்தூர சேவையில் ஈடுபடுகின்ற ராம் எனப்படுகின்ற சிறிய புகையிரதத்தில் ஆசுவாசமாக பத்திரிகை படித்தபடி பயணிப்பது பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூனேதான்!



## யுத்தம்

வாழைப்பழமொன்றுக்காக இரு குரங்குகள் குத்துச்சண்டையில் ஈடுபட்ட வித்தியாசமான சண்டைக்காட்சியொன்றினை வியட்நாமைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் ஒருவர் படமாக்கியுள்ளார். இச்சம்பவம் இந்தோனேஷியாவின் சுமத்திராவிலுள்ள கனங் லியூஸர் தேசிய பூங்காவில் இடம்பெற்றுள்ளது.

30 வயதான ரையான் டியூட்த் என்ற வியட்நாம் புகைப்படக் கலைஞரே இதனை படம்பிடித்துள்ளார். ஒரங்குட்டான் குரங்கின் தாய்கொடுத்த வாழைப்பழத்தை மகாக் குரங்கு சாப்பிட முற்பட்டபோதே இச்சண்டை மூண்டுள்ளது. அரைவனப்பகுதியான குறித்த பூங்காவில் ஒரங்குட்டான் குரங்குகளுக்கு உணவு வழங்கப்படும் இடத்தில்தான் இச்சண்டை இடம்பெற்றது எனத் ரையான் தெரிவித்துள்ளார்.



## பெரிது

தெற்காசியாவின் மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் கிளிநொச்சியில் தயாரிக்கப்பட்டுள்ளது.

116 அடி உயரம் கொண்ட இந்த சிறப்பு வாய்ந்த கிறிஸ்மஸ் மரமானது, 75க்கும் மேற்பட்ட படையினர் தயாரித்துள்ளனர்.

50 அடி விட்டமும் 116 அடி அகலமும் கொண்டதாகவும், 59,000 மின்குமிழ்களை கொண்டதாகவும் இந்த கிறிஸ்மஸ் மரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினரால் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டே இந்த கிறிஸ்மஸ் மரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

---







## பலசாலிகள்

லத்வியாவைச் சேர்ந்த இருவர், 254 தொன் எடையுள்ள ரயில் என்ஜினை தமது உடலில் கட்டி இழுத்துச் சாதனை படைத்துள்ளனர்.

ஐரோப்பாவின் மிகப் பலசாலி மனிதர்கள் என்ற சாதனையை படைப்பதற்காக, லத்வியாவின் ரிகா சிட்டி நகரில் அண்மையில் இவர்கள் ரயில் என்ஜினை இழுத்தனர்.

1972 ஆம் ஆண்டு ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த ரயில் என்ஜின் 120 கார்களுக்கு அல்லது 50 யானைகளின் எடைக்குச் சமமானதாகும். இவர்கள் ஏற்கெனவே லத்வியாவின் அதி பலசாலி மனிதர்களாவர்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 11 வியாழக்கிழமை (26.12.2013) பக்கங்கள் IV ஓசை – 086

## உண்மையான நல்லிணக்கம் ஏற்பட மக்களும், அரசும் இணைய வேண்டும்



### தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவிப்பு

அர்த்தபூர்வமான நல்லிணக்கம் மிகவும் அவசியமானது என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். மக்களும் அரசாங்கமும் கூட்டாக இணைந்து செயற்படுவதன் மூலம் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நத்தார் பண்டிகைக் காலத்தில் இலங்கையில் சமாதானம் என்பதே முக்கிய எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானம் நிலவி வருவதாகவும், அனைத்து இலங்கையர்களும் இதற்கு நன்றி பாராட்ட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையிலும் சுதந்திரமாகவும் நத்தார் பண்டிகையைக் கொண்டாடக் கூடிய பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் பாரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்களும் அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் நல்லிணக்கத்தை எட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மக்களுக்குச் சேவையாற்ற எதிர்க்கட்சியில் அமரவும் தயார்

### என்கிறது ஜாதிக ஹெல உறுமய



மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற முடியும் என்றால் எதிர்க்கட்சியில் அமரத் தயார் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டணிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நலன்களை வழங்க முடியும் என்றால் ஆளும் கட்சியை விட்டு விலகத் துளியும் தயங்கப்போவதில்லை. ஆனால் மக்கள் நலன் இல்லாது ஆளும் அரசு செயற்பட்டால் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆளும் கட்சிக்குள் எதிர்க்கட்சியாக உருவாகும் என அவர் தெரித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களுக்குச் சேவையாற்ற முடியுமென்றால் ஹெல உறுமய அதனைச் செய்யத்

IV ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா மாநாட்டுக்கு முன் இரண்டு உயர்மட்டக் கூட்டங்கள்



### வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்கு முன்பாக இராஜதந்திரிகளுடன் இரண்டு உயர்மட்டக் கூட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கொழும்பிலும் ஜெனிவாவிலும் இருவேறு சந்தர்ப்பங்களில் இராஜதந்திரிகளுடனான சந்திப்பினை நடத்த வெளிவிவகார அமைச்சு ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

அதன் முதற்கட்டமாகவே நாட்டின் தற்போதைய அரசியல் போக்கு, நல்லிணக்கச் செயற்பாடுகள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதற்கிணங்க, 2014 ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிக

IV ஆம் பக்கம் பார்க்க

## போர்க்கால கணக்கெடுப்பு விமர்சனம் புள்ளிவிபரத் திணைக்களம் நிராகரிப்பு

போர்க்கால இழப்புகள் பற்றிய அரசாங்கத்தின் கணக்கெடுப்பு மீதான விமர்சனங்களையும், சந்தேகங்களையும் புள்ளிவிபரத் திணைக்களம் நிராகரித்துள்ளது.

கணக்கெடுப்பு நடைமுறை பற்றிய அறிவின்றியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரிப்பதாக அறிவித்ததாகவும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தலைமை இயக்குநர் டி.சி.ஏ. குணவர்தன பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்தார்.

இந்தக் கணக்கெடுப்பின் முதலாவது அறிக்கை இன்னும் ஒருமாத காலத்தில் வெளியாகும் என்று கூறினார்.

கடந்த 30 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள ஆட்சேதங்களும், சொத்து இழப்புகளும் தொடர்பான ஒட்டுமொத்த எண்ணிக்கைகளுடன் அந்த முதல் அறிக்கை வெளியாகும் என்றும் அவர் கூறினார்.

அதன் பின்னர், 83 ஆம் ஆண்டு நிலைமை, 89 ஆம்

IV ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச பயங்கரவாதத்தை ஐ.நா.சபை இல்லாதொழிக்கும்

### கலாநிதி பாலித கொஹன்ன நம்பிக்கை

சர்வதேச பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் முனைப்புக்களை ஐ.நா. பொதுச்சபை எடுக்கும் என ஐ.நா.வுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியும், ஐ.நா. பொதுச்சபையின் சட்ட விவகாரக் கமிட்டியின் தலைவருமான கலாநிதி பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையின் ஆறாம் கமிட்டிக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பில் சர்வதேச பிரகடனமொன்று வரையப்பட்டுள்ளது. 2001 செப்ரெம்பர் 11 தாக்குதல்களின் போது பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பில் நிலவி வந்த ஆர்

IV ஆம் பக்கம் பார்க்க

## தன்னிச்சையாக செயற்படுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு



கூட்டமைப்பு என்ற பெயரை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னிச்சையாக இயங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கும் வீ.ஆனந்தசங்கரிக்கும் இடையிலான முரண்பாடு

IV ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைகளின் அதிகாரம் கட்சிகளின் நிலையில் மாற்றம்

### என்கிறார் அமைச்சர் வாசு



(கொழும்பு)

மாகாண சபைகளின் அதிகாரம் விடயத்தில் அநேகமான அரசியற் கட்சிகளின் நிலைப்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு

IV ஆம் பக்கம் பார்க்க

## அரசியலை பலவீனப்படுத்துவது யாரென ரணில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நடிகர்களும் கிரிக்கெட் வீரர்களும் அரசியலை பலவீனப்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியலில் களமிறங்கும் சில நடிகர், நடிகையரும், கிரிக்கெட் வீரர்களும் முழுநேர அரசியலில் ஈடுபடுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முழு அளவில் அர்ப்பணிப்புடன் அரசியலில் ஈடுபடமுடியாவிட்டால் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

விஜயகுமாரதுங்க அரசியலில் பிரவேசித்த போது அவர் சினிமாத் துறையிலிருந்து விலகியிருந்தார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் தற்காலத்தில் சில கலைஞர்கள், கிரிக்கெட் வீரர்கள் நூறு வீதம் அரசியலில் பங்களிப்பினை வழங்குவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# யு.என்.எச்.சி.ஆர். நிதிப்பங்களிப்புடன் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் கடற்றொழிலாளர்களுக்கு 21 இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் நேற்று முன்தினம் தர்ம்புரம் பொதுமண்டபத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

யு.என்.எச்.சி.ஆர்.. நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையில் இவ் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, 30 படகுகளும், 300 வலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

ஆனையிறவுக் கடனீரேரியில் மீன் மற்றும் இறால் பிடியில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்தும் நோக்கில் இவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வழங்கி வைத்தார்.

கண்டாவளை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் சி. அருமைராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், கூட்டுறவுப் பரிசோதகர் செ.ஸ்ரீஸ்கந்தராசா, சேவாலங்கா நிறுவன திட்ட இணைப்பாளர் என்.முகுந்தன், யு.என்.எச்.சி.ஆர் நிறுவன பிரதிநிதி லோ.வதனன் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பெருமளவான உறுப்பினர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.







## பிற்போடப்பட்டது திறப்பு விழா

(கரைச்சி)

கரைச்சி பிரதேச செயலகத்தால் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை திறந்துவைக்கப்பட இருந்த கிளிநொச்சி நகர, ஸ்கந்தபுர சமுர்த்தி வங்கிகளின் புதிய கட்டடத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (90)

# வீதியோர வியாபாரி மீது இனந்தெரியாதோர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தின் முன பாக வைத்தியசாலை வீதியில் வீதியோர வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வியாபாரி ஒருவர் இனந்தெரியாத சிலரினால் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பசீர் (வயது - 50) என்ற வியாபாரியே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வியாபாரத்திற்கு போட்டியாகவுள்ள வியாபாரிகளினால் ஏவப்பட்டவர்களே தம்மீது தாக்குதல் நடத்தியதாக தாக்குதலுக்குள்ளாகியவர் தெரிவித்ததுடன், இந்தச் சம்பவம் குறித்து யாழ். வைத்தியசாலை பொலிஸ் பிரிவில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

# போதிய மழை இன்மையால் மஞ்சளாகும் நெற்பயிர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்பயிர்ச் செய்கை போதிய மழைவீழ்ச்சி இன்மையினால் பாதிக்கப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வருடம் விவசாயிகளினால் விதைப்பிற்குள்ளாகிய நெல்வயல்களில் போதியளவு மழை வீழ்ச்சி இன்மையினால் நெற்பயிர்கள் இடையிடையே கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நெற்பயிருக்கு உரமிடுவதற்கு வயல் பாத்திகளில் நீர் இல்லாதிருப்பதனால் பயிர்கள் மஞ்சள் நிறமாகி கருகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நெற்பயிர்ச் செய்கை போலல்லாது யாழ். மாவட்டத்தில் மழையை நம்பியே விவசாயிகள் விதைப்பில் ஈடுபடுவது வழமையான ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# வட்டக்கச்சி பொதுநூலக கட்டடத்தை திருத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, வட்டக்கச்சி பொதுநூலகத்திற்கு புதிய கட்டடத்தொகுதியொன்று அமைப்பதற்கு 5 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் இதனை பெற்றுத்தருமாறும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் வி. சுவிஸ்கரன் கோரிக்கை விடுத்துள்ளார். கரைச்சி பிரதேச சபையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின் கீழ் இயங்கும் இந்த நூலகத்தின் கட்டடம் கடந்த கால யுத்தத்தின்போது, முற்றாகச் சேதமடைந்தது. இதனால், இந்த நூலகம் தனியார் ஒருவரின் கட்டடத்தில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி தற்போது இயங்கி வருகின்றது.

தனியார் ஒருவரின் கட்டடத்தில் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கிவரும் இந்த நூலகத்தை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, இந்த நூலகத்திற்கு புதிய கட்டடத்தொகுதியொன்று அமைத்து, நூலகத்திற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய்த் தொற்று; இருவர் வைத்தியசாலையில்

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இருவர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மட்டுவில் பகுதியில் இருந்து ஒருவரும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொக்குவில் பகுதியில் இருந்து ஒருவருமாகவே இவ்விருவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாதம் நேற்று முன்தினம் வரை இந்த நோய்க்கு இலக்காகிய 53 பேர் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த எண்ணிக்கை நேற்றுமுன்தினம் வரை 601 ஆக அதிகரித்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 216 | திகதி 2013.12.24 | வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்

09 40 56 64 F (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 14,407,160/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 216 | 216,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 351 | 351,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9484 | 569,040/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4903 | 196,120/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 124272 | 2,485,440/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18103 | 362,060/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 14,407,160/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,479,660/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 14,650,140/-

2013.12.27ம் திகதி வெள்ளிகிழமை
அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது
நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3176)


# சமுர்த்தி அலுவலக ஒளி விழா இன்று

யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் ஒளி விழா இன்று காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய பங்குத்தந்தை வண.பிதா கே.ஜே.ஜெயக்குமார் அடிகளார் மற்றும் வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய பரிபாலகர் வண.பிதா ஜே.லெம்பேட் அடிகளார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி ஏ.அன்ரன் யோகநாயகம் மற்றும் வேலணை பிரதேச செயலர் திரும[illegible] ஆகியோரும் கலந்து கொ[illegible]ள்ளனர்.

## இரத்தம் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சில பிரிவு இரத்தங்களுக்குத் தட்டுப்பாடு எழுந்துள்ளது.

O+ இரத்தத்திற்கே இத்தட்டுப்பாடு எழுந்துள்ளதாகவும், குறித்த வகை குருதியுடையவர்கள் இரத்ததானம் செய்து உதவுமாறும் கோரப்பட்டுள்ளது.

O+ குருதி மாதிரியுடையவர்கள் யாழ் போதானா வைத்தியசாலைக்கு வந்து குருதிக் கொடை செய்யுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கேட்டுள்ளனர். (48)

# மகளிர் விவகார அமைச்சரை பதவி விலக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மகளிர் நலத்துறைக்கு அமைச்சராக இருக்க அருகதையற்றவர் என்றும் பெண்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அவர் கூறிவரும் சர்ச்சைக்குரிய கருத்துக்களால் அவரை உடனடியாக பதவி விலக்கவேண்டும் என்றும் மகளிர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நீண்டகாலமாக இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத் தரப்பிடம் முன்வைத்தும் இன்னும் உரிய பதில் கிடைக்கவில்லை என்றும் இலங்கை பெண்கள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமைச்சர் பகிரங்கமான இடங்களில் பெண்களை கடுமையாக அவமானப்படுத்தும் வகையிலும் தரக்குறைவான முறைகளிலும் பேசிவருகிறார். மிக அண்மையில் கூட தொலைகாட்சி ஒன்றில் பேசும்போது, பதிவிரதையாக இல்லாத அதாவது தனது கணவனுக்கு விசுவாசமாக நடக்காத பெண்கள் மூலம் தான் இலங்கையில் பாலின அடிப்படையிலான வன்முறைகள் நடப்பதாக கூறி வருகின்றனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார் என்றார் பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் சேப்பாலி கோட்டகொட.

மகளிர் விவகாரத்துக்கான அமைச்சரிடமிருந்து இப்படியான கருத்து வெளிப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சேப்பாலி கோட்டகொட தெரிவித்தார்.

இங்கு தவறு இழைப்பவர்கள சட்டத்தின் பிடியில் சிக்காத அளவுக்கு சிறப்புச் சலுகையுடன் இயங்கும் நிலை தான் இன்னும் இருக்கிறது. நாங்கள் சுட்டிக் காட்டுவதை புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் அமைச்சர் இருந்தால் அவர் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் தெரிவித்தார்.

பொது மேடைகளில் பெண்களை ஏளனப்படுத்தி, கேலிப்படுத்தி, தரக்குறைவாக பேசும் ஒருவர் பெண்களின் நலனுக்காக உழைக்க வேண்டிய ஒரு அமைச்சுக்கு பொறுப்பாக இருப்பதை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும், அமைச்சரை பதவி நீக்குவதற்காக எல்லா ஜனநாயக வழிகளிலும் தொடர்ந்தும் குரல் கொடுக்கவுள்ளதாகவும் சேப்பாலி கோட்டகொட கூறினார்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பது எப்படி, பெண்களின் மேம்பாட்டை எப்படி ஊக்குவிப்பது போன்ற விடயங்களை ஒரு ஆண் என்பதற்காக அவரால் புரிந்துகொள்ள முடியாது என்று கூறிவிட முடியாது. ஆனால் இந்த அமைச்சர் இவற்றைப் புரிந்துகொள்ள முடியாதவராக இருப்பது தான் துரதிஷ்டவசமானது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

பெண்களுக்கு தலைமைத்துவப் பொறுப்புக்களை வழங்கக்கூடாது என்றும் அமைச்சர் கூறிவருவதாகவும் மகளிர் அமைப்புகள் கூறுகின்றன.

# கிராம மக்களின் உற்பத்திகளுக்கு வவுனியாவில் வியாபார சந்தை



(வவுனியா)

வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில், வவுனியா பிரதேச செயலகத்தில் வியாபாரச் சந்தையொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த வியாபாரச் சந்தையில் வவுனியா மக்களின் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களான மெழுகுவர்த்திகள், ஊதுபத்திகள், தைத்த ஆடைகள், பனையோலை உற்பத்திகள், யோக்கட்டுக்கள் உள்ளிட்ட பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டன.

இவ்வாறு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மக்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்பதுடன், விற்பனைத் துறையின் நுட்பங்களையும் கிராம மக்கள் கற்றுக்கொள்ளுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் எனவும் வவுனியா பிரதேச செயலர் க.உதயராசா தெரிவித்தார்.

# மர்மப்பொருள் வெடித்து முல்லையில் சிறுவன் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியில் மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து முல்லைத்தீவு முள்ளியவளை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில், செல்வராசா சுதாகரன் (வயது-6) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி பிரதேசத்தில் பயிர்ச்செய்கைக்காக நிலத்தை உழவு இயந்திரத்தின் மூலம் பண்படுத்தும் போது மர்மப் பொருள் ஒன்று நிலத்திலிருந்து வெளியில் வந்தது. இதன்போது, அங்கு விளையாடிக் கொண்டிருந்த மேற்படி சிறுவன் அம்மர்மப்பொருளை எடுத்தபோது அது வெடித்துள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி சிறுவன் மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு, முள்ளியவளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா தமிழ்ச் சங்க திருவாசக விழா 29 இல்

(யாழ் நிருபர்)

வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவாசக விழா 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், மங்கல விளக்கினை தம்பையா சிவபாலன் மனோரஞ்சிதம் தம்பதியர் ஏற்றிவைப்பர். திருவாசகத்தினை க. குலேந்திரன் ஓதுவார். தமிழ் வாழ்த்தினை வவுனியா, இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலய இசைத்துறை ஆசிரியை திருமதி கணேசநாதன் தாட்சாயணி பாடுவார். தொடக்கவுரையினை காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவர், பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நிகழ்த்துவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக 'நான் கலந்து பாடுங்கால்' என்னும் மகுடத்தில் இடம்பெறும் கருத்தரங்கத்தில் 'விலங்கு மனம்' எனும் பொருளில் சிவகஜனும், 'சித்தம் அழகியர்' எனும் பொருளில் தமிழ்மணி கே.கே.அருந்தவராஜாவும், 'அடியரிற் கூட்டிய அதிசயம்' என கவியெழில் திருமதி.த.நிறைமதியும், 'வான் கருணை வள்ளல்' என ல.சதீஸ்குமாரும், 'யார் கொலோ சதுரர்' எனும் பொருளில் சி.வரதராஜனும், 'புகழில் திகழும் அழகன்' எனும் பொருளில் சொல் வேந்தன் செ.ஸ்ரீநிவாசனும் கருத்துரைகள்வழங்குவர்.

இவ் விழாவில் திருவாசகத் திருமுறைக்குத் தொண்டாற்றிவரும் கலாபூசணம் வை.செ.தேவராசாவும் நாதஸ்வர வித்துவான் கலாபூசணம் அ.பாலச்சந்திரனும் (சுதந்திரன்) தமிழ்ச் சங்கத்தால் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.(10)

# சிவில் பாதுகாப்பை அதிகரிக்க கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

கிராம மட்டங்களில் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளைப் பெறுதல் தொடர்பாகவும், சிறுகுற்றங்கள் இடம்பெறும் இடங்களில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி அதைத் தடுப்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியை தீர்க்கும் முகமாக நடமாடும் சேவைகளை நடத்துவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க உயர் அதிகாரிகள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# 'திவிநெகும' திணைக்களம் ஜனவரி முதல் இயங்கும்

(கொழும்பு)

'திவிநெகும' திணைக்களம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் செயற்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபை, மலையக அபிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய அபிவிருத்தி அதிகாரசபைகள் உள்ளிட்ட ஐந்து அதிகார சபைகள் இணைந்து இந்த திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது.

18 இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், திணைக்களத்தின் வேலைத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# தேசிய நுளம்பு ஒழிப்புவாரம் இன்று

(கொழும்பு)

பாடசாலை வளாகங்களை இலக்காகக் கொண்டு இன்று முதல் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமொன்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளுக்கு வருகைதரும் மாணவர்கள் நுளம்புக் கடிக்கு இலக்காவதை தடுப்பதே இதன் நோக்கம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை விடுமுறைகாலம் நிறைவு பெறுவதற்கு முன்னதாக கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்த நுளம்பு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சுனாமி பேரவல 9 ஆவது ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலையின் கோர நிகழ்வுகளில் கொல்லப்பட்டவர்களை 9 ஆவது ஆண்டாக நினைவு கூரும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை தூக்காபுரத்தில் அமைந்துள்ள சிற்பி அமரர் கலாபூசணம் எ.வ. ஆனந்தனின் சுனாமி சிற்பத்தின் முன்னர் மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது .

'மீண்டும் எழுவோம்' என்னும் தலைப்பில் இடம்பெறும் இந்நிகழ்வில் உலகப் புகழ்பெற்ற சுனாமி அவலங்களை பல்வேறு கோணங்களிலும் சித்தரிக்கும் சிற்பத்தை ஒரே மரத்தில் செதுக்கிய சிற்பி எ:வி. ஆனந்தனின் நினைவாக அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# தேசிய ஆழிப்பேரலை; நினைவு தினம் இன்று

(கொழும்பு)

தேசிய ஆழிப் பேரலை நினைவு தினத்தை முன்னிட்டு இன்று காலை 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிடம் மௌன அஞ் சலி செலுத்தப்படவுள்ளது. தேசிய பாதுகாப்பு தினம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்த நினைவு தினம் இன்றைய தினம் களுத்துறையில் அனுஷ்டிக்கப்பட உள்ளதாக தேசிய இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

நினைவு தின நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் டி.எம். ஜயரத்ன கலந்து கொள்ளவுள்ளதாக முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் குமார தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இலங்கையில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இந்து சமுத்திரத்தில் உள்ள 14 நாடுகளைச் சேர்ந்த 230,000 பேர் கொல்லப்பட்டனர். 30 மீற்றர் உயரமான பேரலைகள் நாடுகளை தாக்கின.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்களில் அதிகளவான மக்கள் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகவே உயிரிழந்தனர். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை கொழும்பு மாவட்டத்தின் சில கரையோரப் பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இந்த அனர்த்தம் காரணமாக இந்தோனேசியா பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன், அடுத்ததாக இலங்கை, இந்தியா மற்றும் தாய்லாந்து நாடுகள் பாதிக்கப்பட்டன.

# நவிப்பிள்ளையின் அறிக்கை; பதிலளிப்பதற்குத் தயார்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக முன் வைக்கவுள்ள அறிக்கைக்குப் பதிலளிப்பதற்குத் தாயாராகவே உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எப்போதும் உதவி செய்துவரும் சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் அல்ஜீரியா போன்ற நாடுகள் இம்முறை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இடம்பிடிக்கின்றமையின் காரணமாக எமக்கு வலுவான நிலைமை மனித உரிமை பேரவையில் காணப்படுவதாகவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பிலான அரசாங்கத்தின் தயார் நிலை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்முறை மனித உரிமைப் பேரவை அமர்வில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளமையின் காரணமாக அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகிவருகின்றது. அந்த அறிக்கை எவ்வாறு அமையும் என்று எங்களுக்கு தெரியாது. மனித உரிமைப் பேரவையில் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை பார்த்த பின்னர் அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே எமது அறிக்கை அமையும். யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையை பொறுத்தமட்டில் இலங்கை பல்வேறு வகையான முன்னேற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றது. இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் செயற்பாட்டில் பாரிய முன்னேற்றத்தைக் காட்டியுள்ளோம்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னரும் பாரிய முன்னேற்றங்களை வெளிப்படுத்த எதிர்பார்க்கின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் அமுல்படுத்தி வருகின்றோம்.

பாதிக்கப்பட்ட வடக்கு பிரதேசங்களில் முன்னேற்றங்களை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துள்ளது. இந்நிலையில், யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் நாங்கள் முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளமையின் காரணமாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் எவ்வகையான சவாலையும் எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றோம். இலங்கை தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்கும் பதிலளிப்போம்.

குறிப்பாக இம்முறை மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் இடம்பெற்றுள்ளன. விசேடமாக சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகள் எமக்கு உதவி செய்யும் நாடுகளாக உள்ளன. எனவே அந்த நாடுகளின் பிரசன்னம் எமக்கு வெகுவான வலுவை மனித உரிமைப் பேரவையில் அளித்துள்ளது.

எனவே நாங்கள் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத்தொடருக்கு தயாராகி வருகின்றோம். எவ்வகையான நிலைமையையும் சவாலையும் எதிர்கொள்ளவும் தயாராக உள்ளோம். காரணம் பாரியளவில் முன்னேற்றங்களை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம் என்றார.

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# நிறுத்தம் குறித்த அறிவிப்பு அரசினதா, அமைச்சரினதா?

## கேட்கிறது ஆசிரியர் சேவை சங்கம்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பிலான கருத்து அமைச்சரினதா அல்லது அரசாங்கத்தினதா என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை 2016 ஆம் ஆண்டுடன் இரத்துச் செய்யப் போவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்த நிலைப்பாடு அரசாங்கத்தின் நிலைப்பாடா? அல்லது அமைச்சரின் தனிப்பட்ட நிலைப்பாடா? என ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

குறைந்த வசதியுடைய மாணவர்கள் பரீட்சையின் மூலம் தரமான பாடசாலைகளில் கல்வி பயில வாய்ப்புக் கிட்டியது. எனினும், இந்த வாய்ப்பை முடக்கும் வகையில் கல்வி அமைச்சர் செயற்படுகின்றார்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுககவும் தயங்கப்போவதில்லை என மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

### ஜெனிவா...

ளுக்கு வெளிவிவகார அமைச் சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் மேற்படி செயன்முறைகள் தொடர்பில் விரி வாக விளக்கமளிக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதம் இறுதியளவில் அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழுவினர் ஜெனிவா பயணம் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

அமைச்சர் தலைமையிலான குழு ஜெனிவாவிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து மோதல்களுக்குப் பின்னர் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி, நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து விரிவாக விளக்கமளிக்குமெனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### போர்க்கால...

ஆண்டில் நிலவிய நிலைமை, இறுதியில் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்குவந்த யுத்த நிலைமை இப்படி 30 ஆண்டுகால நிலைமைகள் தொடர்பாக தனித்தனியாக புள்ளிவிபரங்கள் இரண்டாவது அறிக்கையில் வெளியாகும்.

உங்களின் கணக்கெடுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளதே என்று கேட்ட போது, எங்களின் திணைக்களம் கடந்த காலங்களில் இப்படியான பல கணக்கெடுப்புக்களை நடத்தியிருக்கிறது. அவை தோல்விகரமானவை என்று எவரும் இதுவரை சொன்னதில்லை

சில சந்தர்ப்பங்களில் பாதிப்புகள் பயங்கரவாதிகளால் ஏற்படுத்தப்பட்டதா, அல்லது சிவில் உடையில் வந்தவர்களால் ஏற்படுத்தப்பட்டதா என்பது போன்ற சில கேள்விகளை நாங்கள் கேட்டிருந்தோம். தேவையென்றால் தமக்குத் தெரியாது என்று மக்கள் கூறமுடியும். இப்படியான காரணங்களால் மட்டும் இந்தக் கணக்கெடுப்பை ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

### மாகாண...

உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மொழிப் பிரச்சினை, மலையக மக்களின் பிரஜா உரிமை பிரச்சினை மற்றும் தற்போது காணப்படுகின்ற மாகாண சபைகளின் அதிகாரம் தொடர்பான பிரச்சினைகளில் அன்று இருந்த சமநிலைக்கு எதிரான நிலையிலிருந்து பாரிய மாற்றம் பெற்றுள்ளது எனத் தெரிவித்தார்.

### மக்களுக்கு...

தயங்காது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், கசினோ சூதாட்டம் நடத்தக்கூடிய வகையில் ஹோட்டல் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் புதிதாக கசினோ சூதாட்டத்தை உருவாக்க எமது கட்சி ஆதரவளிக்காது என அவர் தெரிவித்தார்.

# அடுத்தாண்டு ஆரம்பத்தில் பாப்பரசர் இலங்கைக்கு



(கொழும்பு)

பாப்பாண்டவர் பிரான்ஸிஸ் ஆண்டகை அடுத்தாண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

நீர்கொழும்பு பொலவலானவில் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றை திறந்து வைப்பதற்காக பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் அழைப்பினை பாப்பாண்டவர் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் அல்லது மார்ச் மாதத்தில் பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் பாப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்கின் ஆலோசனைக்கு அமைய இந்த பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. வேதக் கல்விக்காக இந்த விசேட பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

# உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல்களுக்கு 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேடு

உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலின் போது, 2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டை பயன்படுத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் திட்டமிட்டுள்ளது.

எனினும், அதற்குரிய வாக்காளர் பதிவேடுகள் இதுவரை அத்தாட்சிப்படுத்தப்படவில்லை.

வாக்காளர் பதிவேட்டுக்கான திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ. எல்.ரத்னாயக்க தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை ஆராயும் நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 31 ஆம் திகதியளவில் 2013 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேடுகளை அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை நிறைவுசெய்வதற்கு எண்ணியுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

# இனந்தெரியாதோர் கைவரிசை; மட்டக்களப்பில் புத்தர் சிலை சேதம்

மட்டக்களப்பு,பிள்ளையாரடியில் தனியார் காணியொன்றில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை, இனந்தெரியாத நபர்களினால் சேதப்படுத்தப்பட்டு வீசப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தர் சிலை கீழே வீசப்பட்டுக் கிடப்பதாக தகவல்கள் கிடைத்ததையடுத்தே சேதமாக்கப்பட்ட சிலையின் பாகங்களை தாங்கள் மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பேழையிலிருந்து அது வெளியே எடுத்து வீசப்பட்டதில் சிலை பல 'பாகங்களாக நொருங்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சிலையின் பாகங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பிள்ளையாரடியில் பௌத்த மக்கள் எவரும் இல்லாத போதிலும், போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அங்கு நிலை கொண்டு முகாமிட்டிருந்த படையினரும் பொலிஸாரும் குறித்த புத்தர் சிலையை அங்குள்ள தனியார் காணியொன்றில் வைத்து வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவம் குறித்து மட்டக்களப்புப் பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

### சர்வதேச...

வம் வீழ்ச்சியடைந்துள்ளது. பல்வேறு வழிகளில் பயங்கரவாதம் தொடர்கிறது.

பயங்கரவாத இல்லாதொழிப்பு தொடர்பில் உலக நாடுகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

அரச பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சில நாடுகள் கோரி வருகின்றன. இது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு உத்தேச பிரகடனம் தயாரிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தன்னிச்சையாக...

தொடர்பிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட கூட்டம் தொடர்பில் தான் சிவசக்தி ஆனந்தனிடம் கேட்டதாகவும் அப்போது தான் வயதில் மூத்தவர் என்றுகூடப் பொருட்படுத்தாது மதிப்பின்றி சிவசக்தி ஆனந்தன் தன்னைப் பேசியதாகவும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கியமான கூட்டங்கள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகளைச் சந்திக்கும்போது தனக்கு அழைப்பு விடுப்பதில்லை எனவும் ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டினார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியை அவதூறாகப் பேசி தாக்க முற்பட்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி தொகுதி தலைவர் இராஜ குகனேஸ்வரன் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.